T. Q. ம. ட. 1811
R. ம. வ. 36.14.11.67

ஞானாமிர்த போதம்

DIGITIZED

7-,891 MPM1p
N02
120623

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்மாத்து நாடகம்.

இது

மதுரை திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் ஆதீனம்
வித்வான் திருவாலக்கோயில் திருச்சிற்றம்பலத்தம்பிரான் அவர்களுடைய
மாணக்கரும்
செங்கற்பட்டு நத்தம் வாத்தியார்
வெங்கடாசல முதலியார் அவர்களுடைய புத்திரருமான
செங்கற்பட்டு டிஸ்டிரிக்கட் கோர்ட்டு பென்ஷன் அமீனு,

நத்தம். பொன்னம்பல முதலியாரால்,

இயற்றப்பட்டு,

இதில் முற்பாதி ஷை யார் சோதரர் நத்தம். முருகேச முதலியாராலும்
பிற்பாதி சென்னை குளை-சாமிபிள்ளை வீதி சங்கீத வித்வான்
டி. புருஷோத்தம நாயகர் அவர்களாலும் இராகதாளம் அமைக்கப்பட்டு.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரால்,

பார்வையிடப்பட்டு,

சென்னை-புரசை : ம-௱-௱-ஸ்ரீ. நே. முனிசாமி முதலியார் அவர்களால்,
நமி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இதின் விலை அணா 8.] 1902. [வி. பி. சார்ஜ் அணா 3.

Registered Copy Right.

894.8112
1811

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்மரத்து நாடகம்.

இது

மதுரை திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் ஆதீனம்
வித்வான் திருவாலக்கோயில் திருச்சிற்றம்பலத்தம்பிரான் அவர்களுடைய
மாணாக்கரும்
செங்கற்பட்டு நத்தம் வாத்தியார்
வெங்கடாசல முதலியார் அவர்களுடைய புத்திரருமான
செங்கற்பட்டு டிஸ்டிரிக்கட் கோர்ட்டு பென்ஷன் அமீனு,

நத்தம். பொன்னம்பல முதலியாரால்,

இயற்றப்பட்டு,

இதில் முற்பாதி மேற்படியார் சோதரர் நத்தம். முருகேச முதலியாராலும்
பிற்பாதி சென்னை குளை-சாமிபிள்ளை வீதி சங்கீத வித்வான்
டி. புருஷோத்தம நாயகர் அவர்களாலும் இராகதாளம் அமைக்கப்பட்டு,
அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரால்,

பார்வையிடப்பட்டு,

சென்னை-புரசை: ம-௱-௱-ஸ்ரீ. நே. முனிசாமி முதலியார் அவர்களால்,
ரூபி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1902.

Registered Copy Right.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்மரத்து நாடகம்.

சரித்திரச்சருக்கம்.

" உலகெலா முணர்ந்தோ தற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில்சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம். "

அநாதிமுத்தனாகிய சிவபெருமான் அநாதிபெத்தர்களாகிய ஆன்மாக்களின் பொருட்டு அநாதிமாயையினின்றும் காரியப்படுத்தித் தந்த பிரபஞ்சபதார்த்தங்களு ளொன்றாய விருட்சசாதிகட்குள் அரசாக விளங்குவதூஉம், பொன் என்னும் மங்கள அடைமொழி பெற்றிருப்பதூஉம், சர்வ ஜனங்களாலும் மாமல்லிகை கருடமல்லிகையென வழைக்கப்பெற்றதூஉம், இம்மல்லிகைவிருட்சம், சக்கரம், வச்சகம் எனும் பெயர்கள் வாய்ந்திருப்பதூஉமாகிய ஒரு விருட்சத்தின் அருமையினையும் பெருமையினையும் தெரிந்து அவ்விருட்ச சம்பந்தமாக இயற்றப்பட்ட வொரு நாடகத்தின்சரித்திரமாவது :—

இந்த பொன்மரத்து நாடகமெனப்பெயர் புனைந்திருப்பதால் அவ்வாறு பொன்மரமென்று சிறப்புப்பெயர் வாய்த்ததற்குக் காரணம் யாதெனில் ஈண்டு சங்கிரகமாகக் கூறுகின்றனம்.

அளகாபுரியினும் சிறந்த அகண்ட ஐசுவரியங்கள் நிறைந்துள்ள அயோத்தியாபுரியின்கண் அறுபதினாயிர வருடகாலம் அரசுபுரிந்த தசரத சக்கிரவர்த்தியின் திருமகனாகிய ஸ்ரீராமபிரான் தமது சிற்றன்னையாகிய கைகேசியினால் பதினான்கு வருடம் ஆரண்யம் செல்லும்படி நேர்ந்து பரதாழ்வார் அரசுபுரிந்த காலத்தில் அவர் தன் தமயன் ஸ்ரீராமமூர்த்தியின் பிரிவாற்றாமையைச் சற்றேனும் சகியாதவராய் இராஜ காரியத்தில் பற்றற்றுத்தமயனருளிய பாதுகையைச் சிங்காதனமேற்றி சிறந்த ஆக்ஞாசாரத்தில் ஆழ்ந்தவராய்த் தன் தமயன் வருகையை எதிர்நோக்கிய வண்ணம் அயோத்தியை வெறுத்து நந்திக்கிராமத்தில் வாசமுற்றிருந்தன ரன்றோ? இங்ஙனம் அயோத்தியாபுரி நாயகனற்று இராஜ்யபார மிருந்தமையாற் குடிகள் யாவரும் சேர்ந்து மகாராஜாவை முற்றிலும் வஞ்சித்து அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பகுதியைச் சரிவரச் செலுத்தாது தொன்றுதொட்டு அனுட்டிக்கப்பட்டு வந்த விதிகளை மாற்றி அரசனுக்கு குருவருஷம் மேல்வாரமும் மகாவருடம் கீழ்வாரமும் செலுத்தவேண்டுமென்று தங்களுக்குள் தாங்களே தீர்மானித்து அவ்வாறே மேல்வாரம் சேரவேண்டியவருடத்தில் சிறுகுவளைகளைக்கொண்டு தகன சாகுபடிசெய்து

0-,892MPM1,P
N02
120623

மேல்வாரமென இராஜாங்கத்திற்குத் தலைமுழுகளைப் பகுதியாகச் செலுத்தியும், கீழ்வாரம் சேரவேண்டியவருட்டத்தில் தானியவகைகளைச் சாருபடி செய்து கதிர்களைத் தாங்கள் அனுபவித்துக்கொண்டு வைக்கோல் முதலியவைகளை இராஜாங்கத்திற்குப் பகுதி செலுத்தியும் இவ்வாறு பலன்களையெல்லாம் குடிகள் அடைந்து வந்தார்கள். அதனால் இராஜாங்கமோனது மிகுந்த ஏழ்மை ஸ்திதிக்குட்பட்டிருந்து சக்கிரவர்த்தியாண்டகாலந் தொடங்கித் தசரத சக்கிரவர்த்தி ஆண்டகாலவரையிலும் சேகரித்த மூல திரவியங்களெல்லாம் அரண்மனைச் செலவிற்கும் இராஜாங்கச் செலவிற்கும் இப்பதினான்கு வருடகாலமாய் உபயோகிக்கப்பட்டுவந்தது. குடிகள் ஒவ்வொருவரும் அனேகசனையொத்த செல்வவந்தராயினார்கள். இஃது இவ்வாறாக மகா துர்பாக்கியபரிபாலனமியித்தம் ஆரண்யம்சென்ற ஸ்ரீராமபிரான் பதினான்கு வருடமுங்கடந்து சீதாபிராட்டியார் லட்சுமணப்பெருமாள் சமேதராய் அனுமான் சுக்ரீபன் அங்கதன் சாம்புவந்தன் முதலிய அநேக வானரசைனியங்கள் புடைசூழ அயோத்தியாபுரிக்குத் திரும்பிவந்த காலத்தில் பரதாழ்வார் எதிர்கொண்டழைத்து இராச்சிய பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி பிரார்த்திக்க ஸ்ரீராமமூர்த்தியும் அதற்கிணங்கி பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய செலவுகளுக்காக திரவிய இருப்பைப்பார்க்கையில் பொக்கிஷ அறைகளெல்லாம் திறக்கப்பட்டு அதில் யாதொரு திரவியமுமில்லாமல் வெறுமையாயிருக்கக்கண்டு கவலைகூர்ந்து நடந்தவர்த்தமானங்களை யறிந்துகொண்டு பூகனிவிரைகளை விஸ்தாரமாக வளர்த்துக் குடிகளுக்கெல்லாம் விஸ்தாரகம் கொடுத்து அவரவர் தோட்டங்களில் விருத்திசெய்து தமது பட்டாபிஷேகத்திற்காக குடிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பழவிகிதம் இராஜாங்கத்திற்குப் பகுதி செலுத்தும்படியாக ஸ்ரீராமபிரான் ஆக்கியாபித்தனர். அவ்வாறு நடந்துகொள்ளக் குடிகளும் சம்மதித்து ஒவ்வொருவரும் மேற்படி செடிகளை விருத்தி செய்யலானார்கள். காய்கள் காய்க்கும் பருவம் வந்தபோது வானரச்சேனைகள் யாவும் குடிகள் போட்ட செடிகளையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்து நிர்மூலஞ் செய்துவிட்டன. இதனால் குடிகள் மிகுந்த கஷ்டத்தையும், நஷ்டத்தையும் அடைந்து எவ்வாறு பகுதி செலுத்துவோமென்று துக்கித்திருந்தார்கள். ஸ்ரீராமருடைய பட்டாபிஷேக முகூர்த்தநாளும் நெருங்கிவிட்டது. குடிகள் பழப்பகுதி செலுத்துவதற்கு மார்க்கமில்லாது விழிக்கலானார்கள். விலைக்கு வாங்குவதற்கும் உலகத்தில் செடிகளில்லையாம். ஆயினும், இராஜாங்கத்தைச் சேர்ந்த சம்பத்த தோட்டங்களில் மேற்படி பழங்கள் அளவுசங்கை யில்லாமல் அபாரமாகவும் பிரம்மாண்டமாகவும் பழுத்து நிறைந்திருந்தன. வானரச்சைனியங்கள் மேற்படி சம்பத்த தோட்டங்களைச் சுக்ரீவாக்கினையின்கீழ் காவல் பூண்டு வாயுபகவானும் நெருங்கவொண்ணம் பாதுகாக்கப்பட்டிருந்தது. அங்கு இடைக்கிடை பொன் நிறுத்துக்கொடுப்பவர்களுக்கு எவ்வளவு பழம் வேண்டுமானபோதிலும் கொடுக்கப்படுமென்று அரண்மனைத் தோட்ட அதிகாரிகள் உத்திரவு செய்தார்கள். எப்படியாயினும் அரசனுக்குப் பகுதி செலுத்த வேண்டுமே என்கிற பயத்தினாலும், பதினான்கு வருடகாலமாய் அரசனை வஞ்சித்துசேமித்து வைக்கப்பட்டிருந்த செல்வச் செருக்கினாலும், வேறு கதியின்மையாலும், அவ்வாறு செய்வதற்கு யாவரும் சம்ம-

தித்தவர்களாய்த் தத்தம் பூஸ்திதிகளை யெல்லாம் விற்றுப்போட்டும் இடைகட்டாது மிகவருந்தி இனி வேறு பொருளு மின்றித் தத்தம் மனைவியர் அணிந்திருந்த திருமங்கிலியத்தைக் கொண்டுபோய் வைத்த பின்னரே சரிப்பட்டுப் பழங்களைக் கொண்டுபோய் பகுதியாகச் செலுத்தி இராஜாக்கினைக்குத் தப்பித்துக்கொண்டார்கள். இவ்வண்ணம் கற்புடைய மங்கையர் தமதுயிர்போற் பாதுகாக்கப்படும் மங்கிலியத்தை ஒரு நிமிடமேனும் நீத்திருப்பது மிகுந்த பாவமென்றெண்ணி மரமல்லிகை மரத்தினால் மங்கிலியம் செய்து தரித்துக்கொண்டு தங்கள் தங்களுக் குற்ற மனக்கிலேசத்தை ஒருவாறு அகற்றிக்கொண்டார்கள். சந்தனம் தேக்குமுதலிய மரங்களால் மங்கிலியம் செய்து தரித்துக் கொள்ளாமல் மரமல்லிகையாற் செய்து கொண்டதற்குக் காரணமேதெனின் ஒவ்வொருவரும் நாடோறும் தவறாது ஜலத்தில் முழுக வேண்டியிருந்ததினால் மற்ற மரங்களானால் சாக்காடு அடையுமென்றும் மரமல்லிகை மட்டும் ஒருபோதும் சாக்காடடையாது எந்நாளும் தைலம் வற்று இருப்பதென்றும் தெரிந்தே அவ்வாறு செய்யலானார்கள். அக்காலத்தில் பொன்னுக்கொப்பாகத் திருமங்கிலியமாய் உபயோகிக்கப்பட்டதினால் பொன்மரமென்னும் ஓர் சிறப்புப் பெயரும் அதற்குண்டாயிற்று. இதே காரணத்தினால் மரத்தாலி கட்ட நேர்ந்தது என்னும் வாக்கியம் இவ்வுலகத்தில் நெடுங்காலமாக வழங்கி வருகின்றது. இனி பொன்மரத்து நாடகத்தின் முக்கிய கருத்தினை இங்குச் சுருக்கிக் கூறுகின்றோம்.

(நூல்வரலாறு.)

பிரமதேவனால் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகில் பெரும்பான்மையான விடங்களில் பூர்வத்தில் ஆரண்யம் ஆகாயத்தை யளாவி யிருந்ததனால் கள்ளர்கள் மிகுதியாகி நகரங்களில் புகுந்து கொள்ளையிடுவதைச் சகிக்கலாற்றாது ஜனங்கள் அவ்வாரண்யங்களிலுள்ள விருட்சஜாதிகளைப் பற்பல காரணங்களினால் நிர்மூலமாக்கி வந்தனர்கள். பின்னர் மிகக்கியாதிபெற்று விளங்கும் நமது ஆங்கிலேய ராட்சியில் ஆரண்யத்தையாரும் நாசப்படுத்த ஒட்டாமல் தடுத்துப் பரிபாலிக்கலானார்கள். சென்னைமா நகரத்துக் கருகாமையில் மிஸ்டர் கேமல் துரையவர்களால் சவுக்குமரம் விருத்திசெய்யப்பட்டு பலராலும் போற்றப்பட்டு வந்தபோதிலும் விறகு ஒன்றுக்கே யல்லாமல் இதரகாட்டுமரங்களுக் குண்டாகும் நஷ்டத்தை ஈடுகட்டக்கூடாமையாயிருந்தபடியால் கல்லால் குருந்து கொன்றை வில்வம் ஆகிய நான்குவகை விருட்சங்களும் இப்போபத்தினின்றும் தம்மினங்களை எவ்வாறு விலக்கிப் பாதுகாக்கலாமென்றெண்ணிக் காட்டிலும் நாட்டிலும் செறிந்துள்ள விருட்சகோடிகட்கெல்லாம் இவ்விஷயத்தினைத் தெரிவித்து அதின் பிரகாரம் கைலாயமலைச்சாரலில் ஓர் தினம் கோடானு கோடி மரங்கள் யாவும் மகாநாடு கூடிப்பேச வாரம்பித்தன. இக்கூட்டத்தில்

கல்லால் அக்கிராசனம் வகிக்கவேண்டுமெனக்குருந்துபிரேரேபிக்க ஆவ்வாறே சபையின் சம்மதத்தின்பேரில் கல்லால் தலைமை வகித்து பேசவாரம்பித்தது. (3 4. பக்கங்களில் காண்க) இவ்வுலகத்திற்கெல்லாம் ஆதாரமாயிருந்து ஆகாயத்தைவளாவி வாழ்ந்திருந்த நம்மை உலகத்தார் தங்கள் நன்மையின்பொருட்டு நம்மினங்களை நாளடைவில் அழித்துவரலானார்கள். இவ்வாபத்தினின்றும் நம்மை மீட்கவேண்டியபாரம் நமது அரசாகிய அஸ்வத்த விருட்சத்திற்குண்டாயிருந்தும் அது எக்காரணத்தாலோ சற்றேனும் கவனியாதுபராமுகமுற்றிருக்கின்றது. இருடிகள் தவத்திற்கேற்ற உத்தியான வனமாகவும் அன்னோர் வேதாகமபுராணங்களை யோதுதற்கு நைமிசாரண்யமாகவும், ஸ்ரீராமர் பதினான்கு வருடமும் பஞ்சபாண்டவர்கள் பன்னிரண்டுவருடமும் வனவாசம் வந்திருந்தபோதும், அரிச்சந்திரன் நளன் முதலிய சக்கிரவர்த்திகள் நம்மை வந்தடுத்தபோதும், அத்தகையோர்கட்குத் தமது விசாரந்தோற்றவொட்டாது சொர்க்கலோகமாகவும் இருந்தது நாமேயொழிய வேறில்லை. அரசும் வேம்பும் தெய்வத்தன்மைபொருந்தி அவரவர் மனோபீஷ்டங்களை நிறைவேற்றினும் நம்முடைய துன்பத்தைத் தடுக்கும் வல்லமை அரசுக்கில்லை. நாம் இதுகாறும் நம்பியிருந்ததுபோல் இனியும் அஸ்வத்த விருட்சத்தை நம்பியிருந்தால் பெருந்துன்பத்திற்காளாய்விடுவோம். ஆகையால் இனியேனும் ஜாக்கிரதையோடிருந்து அரசாளத்தக்க வேறு ஓர் விருட்சத்தை நமக்குத் தலைமையாகத் தேடிக்கொள்ளுதல் நமது கடனாகும். அப்பேற்றை யடையத்தக்க மரம் நம்மில் எதுவென யோசிக்குங்கால் பொன்மரமொன்றே தக்கதென வெண்ணுகின்றனம். அதன் பெருமையைக்கூறுதல் எம்போல்வாரா லாகத்தக்க தன்றெனினும் ஒருவாறு இங்குக்கூறுதலவசியமென வெண்ணி யுரைப்பாம். ஆ! ஆ!! பொன்மரத்தின் போற்றலை யுங்கட்குச் சொல்லநேர்ந்த எமது பாக்கிய விசேடத்தினை என்னென்றுரைக்கத்தகுமென உள்ளமகிழ்ந்து கல்லால் கூறத்தொடங்கிற்று. நம்மினங்கள் யாவற்றிலும் சிறந்து விளங்குவதும், வித்துக்களினாலும் கிளைகளினாலும் வேர்களினாலும் ஒன்றனந்தமாக விருத்தியாகிச் சூர்யமண்டலமுதலிய அண்டங்கள் யாவையும் ஊடுருவிவளர்ந்து ஸ்ரீராமர் கரிகாற்சோழன் பீமன் முதலியவர்களை யொத்து மிகப்பலம் பெற்றுள்ளதும், சூரபத்மன் முதலிய எண்ணிறந்த அசுரர்களை யொத்து ஆயுதங்களினால் வெட்டவெட்டத் தளிர்த்து ஒன்று பல லட்சங்களாக விருத்தியடைந்து வருவதும், இந்திரன் சந்திரன் முதலிய தேவர்கட்காயினும் குற்றமுள்ளதேயல்லது எவ்வித குற்றங்களுக்கும் இடமின்றிச்சிறப்புற்றிருப்பது மாகியபொன்மரமே தக்கதெனப் பிரபல நியாயங்களைக்கல்லால் எடுத்துக்கூற, இவ்வார்த்தைகளைக் குருந்த விருட்சமானது நன்கு நன்றென்று ஆமோதித்துப்பேச, கொன்றைமரமானது இதற்குச் சற்றேனும் சம்மதியாமல் புஷ்பமரங்களி லொன்றாய பொன்மரத்தையோ நாம் அரசாகமதித்து வாழ்வது, இம்மொழி ஒவ்வாதென மறுக்க மீண்டும் கல்லாலானது பொன்மரமானது புஷ்பமரங்களிற் சேர்க்கப்படவில்லையென்றும் கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூவாகிய இந்நான்கு வகை புஷ்பங்களிலும் குறிக்கப்படவில்லை யென்றும் ஆகையினால் அது நமக்குத் தலைமை வகிக்கத்தக்கதேயென நிலைநாட்டலும்சபையோர்கள் விகேட்-

டுதற்குச் சிற்பநூல் கருத்தே தென்ன சிற்பநூலில் பொன்மரத்தை விலக்கவில்லையெனக் கல்லால் உறுதிப்படுத்திற்று (5 முதல் 11 பக்கம் வரையில் பார்க்க) இதுகாறும் அக்கிராசனாதிபதி கூறியவண்ணம் பொன்மரம் அரசாளத்தக்கதாகப் பூர்வத்தில் நாம் தவமிழைக்க வில்லையென கொன்றை மறுக்க, இனி அவ்வாறு தவத்தை செய்யலாமேயென வில்வங்கூறலும் பிரமனால் சிருட்டிக்கப்பட்ட ஆன்மகோடிகளுள் நாம் ஓரறிவுயிராயிருக்க எவ்வாறு தவ மிழைக்கக் கூடுமென கொன்றை மறுத்துப்பேச, வில்வமரமானது இவ்வாக்கியம் சற்றேனும் பொருந்தாதெனப் பல நியாய சாஸ்திரப் பிரமாணங்களைக்கொண்டு பேசத்தொடங்கியது. தவத்திற்குரிய சத்துவகுணம் முக்கியமாய் நம்மிடத்தி லமைந்திருக்கின்றன வென்றும், ஸ்ரீபாலசுப்பிரமணியக் கடவுள் வேங்கை வடிவாகவும், உமையவள் திருக்காஞ்சியில் தவமிழைக்க மாமரத்தடியிலேயும், ஜனகாதிகள் நால்வரும் கல்லாலின் நிழலிலேயும், திருவாதவூரராகிய மணிவாசகப்பெருமான் குருந்தடியிலேயும் ஏனையதேவர், முனிவர் சித்தர்பத்தராதியோரும்நம்மையண்டித்தமது இஷ்டகாமியமோக்ஷ சாம்ராச்சியங்களை யடைந்துள்ளாராதலால், வானோர்களைக் காட்டிலும் நாம்சிறப்படைந்துள்ளோமென்றும், கொற்றங்குடியார் ஓர்முள்ளிச்செடிக்கு மோட்சம் தந்ததும், திருக்கழுக்குன்றத்தில் ஓராலவிருட்சம் வலம் வந்துகொண்டிருப்பதும், பிரயத்தியட்சமா யிருப்பதால் நாம் தவமியற்றத் தகும் தகும் தகும் எனக்கூறிற்று. இதனைக்கேட்ட சந்தன விருட்சம் ஈரேழு பதினான்கு லோகங்களினும் நமது விருட்சகோடிகளின் சகாயமில்லாவிடில் ஒன்றும்நடவாதென்றும், தேவலோகத்தார்க்குக் கற்பகவிருட்சமொன்றே சகல சம்பத்தையும் அளிக்கின்றதென்றும், உலகம்யாவையு முண்டருளிய திருநெடுமாலே பிரளயாந்தத்தில் ஓர் ஆலிலை தாங்கிற்றெனில் இன்னமும் சிறப்பேதுண்டென்றும் சம்பந்தமூர்த்தியின் திருப்பதிகம் பெற்று ஒத்தூரிலுள்ள பனைமரங்கள் சிவபதவி பெற்றதென்றும், இவ்விதம் அநேக காரணங்களைக் காட்டிற்று. இக்கருத்தினை யாமோதித்தவாறு மந்தாரை பேசத் தொடங்கியது. உலகினிடத்தில் உழுதுண்ணுஞ் சிறுகோலும் அரசன்கை செங்கோலும் நாமாயிருந்து சர்வ ஜனங்களையும் பரிபாலித்து வருகின்றோமென்றும், பொருள்தேடுநிமித்தம் கடல்நதிகளை கடப்பவர்களுக்குக் கப்பலும் தெப்பமுமாயிருந்து உதவுகின்றோமென்றும், மற்றும் இப்பூமியின் சகல பதார்த்தங்களிலும் நாமே நிறைந்திருந்து பரிமளித்து வருகின்றோமென்றும், அத்திமுதலெறும்பீறான சர்வஜீவகோடிகளும் அருந்தவமியற்றி முத்திபெற்றனவென்றும், நாமாத்திரம் தவமிழைக்க லாகாதெனக்கூற எவரும்பத்துத்தலை யுடைத்தா யிருக்கவில்லையென்றும், ஆரணநூற்களைக்காட்டி யுபந்நியாசம் புரிந்தது. இவையெல்லாம் உண்மையே யானபோதிலும் நம்மினங்கள் கோயில் கோபுரங்களில் முளைத்து நிர்மூலப்படுத்துங் குற்ற முற்றிருப்பதால் சிவபிரான் பொருளென்று கொன்றை மறுத்துப்பேச, அது நம்முடைய குற்றமல்லவென்றும் இதுகாறும் நமக்கு அரசாகவிருந்த அஸ்வத்த விருட்சத்தின் குற்றமென்றும் கல்லால் தடுத்துரைக்க எவ்வாறாயினும் சிவபிரான் இரக்கமுள்ளவ ரல்லரென்றும் முப்புரத்தையும் மன்மதனையும் எரித்தும் எமனையுதைத்தும் மாயனைவதைத்தும் மழுவேந்-

தியும் எண்ணாயிரஞ்சமணரைக் கழுவிலேற்றியும்பிள்ளைக்கலியையும் ஆலகால
விஷத்தையும் உட்கொண்டும்,யானைத்தோல் புலித்தோல் சர்ப்பம் முதலியவை
களை ஆடையாபரணங்களாகத் தரித்தும், பிரமன் சிரங்கொய்தும், சங்காரத்
தொழிலையே தமக்குரிய முக்கிய தொழிலாகக்கொண்டும் வாழ்ந்துள்ளாரெ
ன்றும் அத்தகையோரைநாம்வழுத்துவதால்பொன்மரம் ராஜனுமோவென்றும்
கோங்கு ஆட்சேபிக்க,இவ்வார்த்தையைக் கேட்டகல்லால்சகியாது சிவா!சிவா!
என்றுபோற்றி மெய்யடியார்கட்காக எந்தைபிரான்காட்டிய திருவிளையாட
ல்களையெல்லாம் நினைந்துசெப்பத்தொடங்கிற்று. வந்தியென்னும்ஓர்கிழவிக்கு
க்கூலியாளாகியும், பாணபத்திரனுக்காக விறகைச்சுமந்தும்,அர்ச்சுனனால் வில்
லடிப்பட்டும், பன்றிக்குட்டிகளுக்குப் பாலைப்புகட்டியும், தாயிலாப்பெண்ணுக்
குத்தாயாகி மருத்துவஞ்செய்தும், எண்ணிறந்தஅற்புதகோலங்களைக்காட்டிச்
சர்வஜீவதயாபரனென்று பெயர்பெற்று விளங்கிய எந்தைமிகுந்த தயாளுவெ
ன்றுரைக்க, சபையோர் யாவரும் மனமுருகிப் போற்றிநிற்கையில் அங்ஙனமா
யின் கைலாயமலைச்சார்பாகிய இவ்விடத்திலேயே நாமனைவரும் தவஞ்செய்
வோமென்று வில்வங்கூற எண்ணரியதேவர் முனிவர்இருடிகள் யாவரும் பூவு
லகில் தவமியற்றினரானதால் நாமும் அங்ஙனமே செல்லல் வேண்டுமெனக்க
ல்லால் கூறிற்று (19. 20. பக்கங்காண்க) பிரவாகம் சூறைக்காற்று முதலிய
விடர்களில்லாமல் தவத்திற்கேற்ற க்ஷேத்திரங்களை ஆலோசிக்கத்தொடங்கிக்
கொன்றைமரம் செப்பத்தொடங்கிற்று. சோழதேசத்தில் காவேரிநதிக்குத்
தென்கரையிலுற்ற திருப்பெருந்துறை முதலிய சிலஸ்தலங்களையும், அதன்பி
ன்னர் வன்னிவிருட்சம் கலையநல்லூர் முதலியசில க்ஷேத்திரங்களையும், அத
ன்மேல் தேவதாரம் செங்காட்டங்குடி முதலியசில திருப்பதிகளையும், மந்
தாரை கடிக்குளம் முதலிய சிலபுண்ணிய நகரங்களையும், இதன்பின்னர் ஆத்
திமரம் தெங்கூர்முதலிய சிலபதிகளையும், குருந்தமரம் அகத்தியான்பள்ளி
முதலிய திவ்விய க்ஷேத்திரங்களையும் எடுத்துதகரிதத்தில் அவைகளில் தங்
களுக்கேற்ற வசதிகள் கிடையாமையால் திருக்காஞ்சியொன்றே தக்கதெனக்
குருந்து பிரேரேபிக்க அங்கும் சப்தசாகரங்களும் சப்த நதிகளாக நிறைந்திரு
த்தலால் கூடாதென வாத்திமறுக்க அதன்மேல் காஞ்சிமாநகரத்திற்கு எக்கா
லத்திலும் சலனமில்லையெனப் பிரளயகால சக்தி முதலிய காவல்கள் அமைந்
திருப்பதை நிரூபணஞ்செய்து காஞ்சியே நன்றெனக்குருந்து நிலைநாட்டியது.
(உக-முதல்-உகூ-வரையில் பக்கம் பார்க்க) இதனைச் சபையோர் யாவரும் ஏற்
றுக்கொண்டு தவத்திற்கு முந்தியே தீர்த்தயாத்திரை தலயாத்திரை முடிக்க
வேண்டுமெனக் கல்லால் செப்ப, நன்று நன்றென்று விருட்சகோடிகள் யாவும்
சம்மதித்துத் திருக்கைலாயத்தைப் பணிந்து நீங்கிய பின்னர், கங்கை துங்க
பத்திரை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணைமுதலிய புண்
ணிய நதிகளில் நீராடி அங்க வங்க கலிங்க காஸ்மீர காம்போஜ முதலிய ஐம்
பத்தாறு தேசங்களையும் வலம்வந்து பின்னர் சர்வஜீவதயாபரனுயுள்ள சாக்ஷாத்
சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளும். ஸ்தலயாத்திரைசெய்ய
ஆவல்கொண்டு அவற்றுள் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள், திருநாவுக்
கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்

லாழும் நந்தமலை வெள்ளியமலை இத்தலங்களையும் பணிந்து கொங்குநாட்டு
யாத்திரை பூர்த்திசெய்தனர்(43-முதல் 46-வரையில் பக்கங்காண்க)

அனந்தரம் மலைநாட்டையடைந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை
யானைமீது ஸ்ரீகைலாயம் எழுந்தருளப்பெற்ற திருவஞ்சைக்களத்தைச் சேவி
த்துப் பிரமதேவர் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சேந்தமங்கல
த்தைப் பிரமதேவர் ... மலைநாட்டு யாத்திரையும் பூர்த்திசெய்தனர்.
கன்னியாகுமரியும் தொழுது மலைநாட்டு யாத்திரையும் பூர்த்திசெய்தனர்.
பாண்டிநாட்டில் த்வாதசாந்தஸ்தலமாகிய தென்மதுரையை யடைந்து தடா
தகைப்பிராட்டியாராகிய ஸ்ரீபராசக்தியும் குமாரக்கடவுளும் சிவபெருமானும்
ஆகிய மூவரும் அரசாகிசெய்ததும், அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்ய
ப்பெற்றதுமாகிய திருவாலவாயைதெரிசித்துத், திருப்பரங்குன்று முதலிய
ஸ்தலங்களைவணங்கித் திருவிராமேச்சுரத்தைக் கண்டோம் பேரானந்தங்
கொண்டோம் ஜென்மாந்திரங்களிற்செய்த அனந்தங்கோடி பாபங்களியாவும்
விண்டோம் இனிப்பிறவிசாகரத்தையுங்கண்டோம் நம்மிஷ்டங்களெல்லாம் இனி
நமக்குச்சித்தியேயாதொரு குறையும் நமக்கில்லை வேண்டியவரமெல்லாம் நமக்
குச்சொந்தமே எனமகிழ்ந்து, ஸ்ரீராமருடைய ஆச்சனைப் பிரபாவங்கள் முதலி
யவைகளைப்புகழ்ந்து, மகாசங்கற்பங்கள்செய்து அமுததீர்த்தம் தனுஷ்கோடி முத
லிய அநேகதீர்த்தங்களாடினோம் பர்வதவர்த்தினி அம்பாள்சமேத இராமநாதே
ஸ்வரரை வணங்கிக்கூத்தாடினோம். அடியில் குறித்த அட்டவணையில் விவரித்
திருக்கு மகிமை மிகுந்த அறுபத்துமூவருக்கு மடாலயம் அமைத்தோம் பின்
னர் * உத்திரகோசமங்கை திருச்சுழியல் முதலிய ஸ்தலங்களை வணங்கித்
திருநெல்வேலியைக் காணப்பெற்றோம் தாம்பிரவர்ணி நதிமுதலிய தீர்த்தங்
களிலெல்லாம் மூழ்கிக் காந்திமதியம்பாள் சமேத நெல்வேலி நாதரைத் தொ
ழுது தோத்திரஞ்செய்து சிவசுப்பிரமணிய சுவாமிக்குக் கும்பாபிஷேகம் நட
க்கும் சமயங்கிடைத்துத் திருச்செந்தூரை தெரிசித்து மற்ற ஸ்தலங்களையும்
வணங்கிப் பாண்டிநாட்டைப்பிரிந்து ஈழநாடுசேர்ந்து திருக்கோணமாமலை
திருக்கேதீச்சரம் முருகப்பிரான்வாழும் கதிர்காமமும் தொழுது யாழ்ப்பாணந்
தாரை வாழ்த்தினோமெனக்கூறி இப்பால் எண்ணிலாத க்ஷேத்திரங்கள்
நிறைந்த சோழநாட்டை யடைந்தன (47 - முதல் - 57 - வரையில் பக்கங்
காண்க.)

ஆகாயபூதஸ்தலமாகியும் தரிசனஞ்செய்த மாத்திரையில் முத்திதருவ
தாயுமாயுள்ள சிதம்பரஞ் சேர்ந்து, நடராஜமூர்த்தியின் அனவரத தாண்டவமி
யற்றும் குஞ்சித பாதத்தைத் தரிசித்தோம். வினையோட்டங்களை யோட்டவே
ண்டுமென்று சிவகங்கை முதலிய தீர்த்தங்களாடிச் சிவபூஜையியற்றிப் பஞ்ச
சபையுந் தரிசித்துப் பரவசப்பட்டுச் சிவானந்த வெள்ளத்திலழுந்தி அங்குச்
சேக்கிழார்சுவாமிகளுக்கு ஆலயம் அமைத்து அங்குச்சிலநாள் தங்கிப் பிரிவுற
ஸாருந்தி ஒருவாறு மனந்துணிந்து பிரிந்து திருவேட்களம் முதலிய பல ஸ்தலங்க
ளைப்பணிந்து எங்கள் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் திருவவதாரஞ்

செய்த சீர்காழியைவணங்கித் திருக்காட்டுப்பள்ளி முதலிய திருப்பதிகளை த்தொழுது அப்பூதஸ்தலமாகிய ஜம்புகேஸ்வரமுதல் அனந்தமானஸ்தலங்களை யாத்திரைசெய்து கும்பகோணம் வந்திறைஞ்சினர். (58-முதல் 71 வரையில் பக்கம்பார்க்க) இப்பால் திருவிடைமருதூர் முதல் திருநாகைக்காரோணம் வரையில் பல திவ்விய க்ஷேத்திரங்களையுங் கண்டு, தியாகராஜப்பிரபு ஸ்ரீசுந் தரமூர்த்திசுவாமிகளுக்குத் தூதுசென்றதும், பிறக்கமுத்திதருவதுமாகிய திருவாரூரை யிறைஞ்சித் திருமூலநாயனார் மூவாயிரவருடம் தவம்புரிந்த திருவாவடுதுறை அணுகி மாசிலாமணியீசரையும், செம்பொற்றியாகேசரையும் பணிந்து மடாலய மகாசந்நிதானத்தையும் தொழுது சோழநாட்டு யாத்திரையை முடித்தனர் (72-முதல் 76-வரையில் பக்கங்காண்க).

சொர்க்கத்திலுஞ்சிறந்து சூதம்பாடலம் வகுளம் மந்தாரம் தாதகி தமாலம் பனசம் புன்னை புன்னாகம் மாதுளை சம்பகம் சந்தனம் சாலம் ஆகியவிருக்ஷங்களையுடைய சோலைகள் சூழப்பெற்றதாய் பாலாற்றின் நீர்வளமிகுதியால் வயல்வளம் குன்றாத பொலிவினையுடையதாய் தாமரைசெங்கழுநீர் நீலோற்பலமுதலிய மலர்கள் மலர்ந்து சங்கினங்கள் முழங்கி யீன்ற முத்துக்களை அலையினூற் கரையிற்கொண்டு சேர்க்கும் பரந்ததடாகங்களையுடையதாய் சந்திரன் தவழும் மணிகளிழைத்த மாடங்களையுடையதாய் மகாதோரணங்கள்கட்டிய பல்காதவரையில் நீண்டவீதிகள் பலவுள்ளனவாய் இவை முதலிய சிறப்புகள் வாய்ந்த திருக்காஞ்சிமாநகரையடைந்து காம்சாலதீர்த்தம் இஷ்டசித்திதீர்த்தம் கம்பாநதி பம்பாநதி அத்திராநதி வேகவதி க்ஷீராநதி பாருநதி இவ்வேழுநதிகளையும் விதிப்படியாடிக் கச்சியேகம்பமுதலிய நாலுலக்ஷத்து ஐம்பதினாயிரஸ்தலங்களையுந்தரிசித்தோம் எனத்திருப்தியடைந்தனர். பின்னர் இவ்வாறேவிஷ்ணுஸ்தலயாத்திரையும்செய்யவேண்டுமென்று கல்லாலவிருக்ஷக்கூற நடுநாடொன்றி நிற்க தொண்டைநாடு மகதநாடு மலைநாடு பாண்டிநாடு சோழநாடு இந்நாட்டுத் திவ்ய தேசயாத்திரைசெய்து காஞ்சிபுரியையடைந்து அங்குள்ளவிஷ்ணுஸ்தலயாத்திரையும் பூர்த்திசெய்து மறுபடியும் விஷ்ணுவாழும் புராணஸ்தலங்களையும் சேவித்துக் காஞ்சிபுரியையடைந்து ஸ்ரீஏகாம்பரநாதர் பிரமோற்சவத்தையுந்தரிசித்துத் தானங்களையீந்து எம்மையாளுடைய ஏகாம்பரநாதருக்கு அபிஷேகதூபதீப நைவேத்திய அலங்கார தீபாராதனைகளைச்செய்வித்துத் தரிசனஞ்செய்தனர். இங்ஙனம் அனந்தகோடிவிருக்ஷங்களின்மனம்ஒருவழிப்பட்டு மகத்தாகிய தவஞ்செய்யக்கண்டு எம்பெருமான் தரிசனங்கொடுத்துப் பொன்மரமொன்றே சர்வவிருக்ஷங்களையாளும்படி விருக்ஷகோடிகள் கேட்டுக்கொண்டபிரகாரம் வரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் அருள்செய்தனர். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து வாழ்த்தினர்கள் வாழியும் மங்களமும்பாடலாயிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

" மண்ணினல்லவண்ணம் வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலைக்
கண்ணினல்லஃதுறுங் கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே."

" என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே."

" வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே."

திருச்சிற்றம்பலம்.

இச்சரித்திரத்தை வசனநடையிலெழுதவேண்டுமென்று சென்னை மூலா சாமிப்பிள்ளைவீதியில் வசிக்கும் காஞ்சீபுரம் பச்சையப்பேட்டை வீராசாமிமுதலியாரவர்களும், சென்னைநகர் முனிசிபல் ஆபீசு அக்கவுண்டெண்ட் செங்கற்படுத்தம் மாணிக்கப்பமுதலியாரவர்களும், சென்னை வேப்பேரி இந்து ஆங்கிலவேத அவிழதசாலைத்தலைவர் பா-சுப்பிரமணியமுதலியாரவர்களும் கொண்டவிருப்பத்தின்படி இந்நூலாசிரியர் கருத்தினைத்தழுவி இவர் புத்திரரும், சென்னை மிலிடெரி அகவுண்ட்ஸ் சப்ளை அண்டு டிராஸ்போர்ட் எக்ஜாமினர் ஆபீசில் கிளார்க்குமாகிய செங்கற்பட்டுத்தம் சம்பந்தமூர்த்திமுதலியாரால் சங்கிரகமாக தொகுத்தெழுதலாயிற்று.

பொன்மரத்துநாடகசரித்திரம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீநடராஜர் அபிடேகம் நடக்கும் விபரம்.

" சித்திரைவோணம் ஆனி உத்திரம்
அத்தருமார்கழி ஆதிரை ஆவணி
ஒத்தகும்பம் கன்னி உயர் பதினான்கிலும்
சித்தம் சிதம்பரம் சிறந்தநீராடலே"

சிவபெருமானுக்குச் சித்திரை முதலாக மாதவபிடேகத்திரவியங்கள்.

" கொழுந்து சந்தனம் கூடியமுப்பழம்
அழுந்துபால் சர்க்கரை பனியாரமே
தழைந்த வன்னம் தழல் நெய் யொழுகுதேன்
விழைந்த நெய்பொதி கம்பளம் வெண்தயிர் "

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூவர் - தேவாரம்பெற்ற சிவக்ஷேத்ரங்கள் ௨௭௪ - க்கு

அட்டவணை.

வடநாட்டில்-௫.
திருநொடித்தான்மலை என்னும்ஸ்ரீகைலாயம்.
திருக்கேதாரம்
,, அநேகதங்காவதம்
,, இந்திரநீலபருப்பதம்
,, ஸ்ரீபருப்பதம் இது மல்லிகார்ச்சுனம் என்னும்ஸ்ரீசைலம்.

துளுவநாட்டில்-௧.
திருக்கோகரணம்.

தொண்டைநாட்டில் ௩௨
காஞ்சிபுரத்தில்
திருவேகம்பம்
,, மேற்றளி
,, ஓணகாந்தன்றளி
,, அநேகதங்காவதம்
,, நெறிக்காரைக்காடு
,, குரங்கணின்முட்டம்
,, மாகறல்
,, ஒத்தூர்
வன்பார்த்தான் பனங்காட்டூர்
திருவல்லம்
,, மாற்பேறு
,, ஊறல் இது தக்கோலம்
,, இலம்பையங்கோட்டூர்
,, விற்கோலம் இது கூவம்
,, ஆலங்காடு
,, பாசூர்
,, வெண்பாக்கம்
,, கள்ளில்
திருக்காளத்தி
,, ஒற்றியூர்
,, வலிதாயம் இது பாடி.
,, முல்லைவாயில்
,, வேற்காடு
,, மயிலை
,, வான்மியூர்
,, கச்சூர் ஆலக்கோயில்
,, இடைச்சுரம்
,, கழுக்குன்றம்
அச்சிறுபாக்கம்
திருவக்கரை
,, அரசிலி ஒழுந்தியாப்பட்டு
,, இரும்பைமாகாளம்.

நடுநாட்டில்-௨௨.
இது மகதநாடு
திருவரத்துறை
,, தூங்கானைமாடம்
,, கூடலையாற்றூர்
,, எருக்கத்தம்புலியூர்
,, தினைநகர்
,, சோபுரம்
,, அதிகை
,, நாவலூர்
,, முதுகுன்றம் இது விருத்தாசலம்
திருவெண்ணெய்
,, கோவலூர்
அறையணிநல்லூர்
இடையாறு
,, வெண்ணெய்நல்லூர்
,, துறையூர்
,, வடுகூர்
,, மாணிக்குழி
,, பாதிரிப்புலியூர்
,, முண்டீச்சரம்
புறவார்பனங்காட்டூர்
திருவாமாத்தூர்
,, அண்ணாமலை

கொங்குநாட்டில்-௭.
அவிநாசி
திருமுருகன்பூண்டி
,, நணா இது பவானி
,, செங்குன்றூர்
வெஞ்சமாக்கூடல்
திருப்பாண்டிக்கொடுமுடி
,, கருவூர்

பாண்டிநாட்டில்-௧௪.
திருவாலவாய் இது மதுரை
,, ஆப்பனூர்
திருப்பரங்குன்று
திருவேடகம்
கொடுங்குன்றம்
,, புத்தூர்
திருப்புனவாயில்
இராமேச்சுரம்
திருஆடானை
,, கானப்பேர் இது காளையார் கோவில்
திருப்பூவணம்
,, சுழியல்
,, குற்றாலம்
திருநெல்வேலி

ஈழநாட்டில்-௨.
திருக்கோணமாமலை
,, கேதீச்சரம்

மலைநாட்டில்-௧.
திருவஞ்சைக்களம்.

சோழநாட்டில் ௧௯௦.
இதில் காவிரிக்கு வடகரையில் ௬௩.
கோயில் இது சிதம்பரம்
திருவேட்களம்
,, நெல்வாயில்
,, கழிப்பாலை
,, பெருமணம்
,, மயேந்திரப்பள்ளி
,, முல்லைவாயில்
,, கலிக்காமூர்
,, சாய்க்காடு
காவிரிப்பூம்பட்டினம் இது திருப்பல்லவனீச்சுரம்
,, வெண்காடு
,, காட்டுப்பள்ளி
குருகாவூர்
சீர்காழி
திருக்கோலக்கா
புள்ளிருக்கும்வேளூர் இது வைத்தீஸ்வரன்கோயில்
கண்ணார்கோயில்
திருக்கடைமுடி
,, நின்றியூர்
,, புன்கூர்
,, நீடூர்
,, அன்னியூர்
,, வேள்விக்குடி
,, எதிர்கொள்பாடி
,, மணஞ்சேரி
,, குறுக்கை
,, கருப்பறியலூர்
,, குரக்குக்கா
,, வாளொளிபுற்றூர்
,, மண்ணிப்படிக்கரை
,, ஓமாம்புலியூர்
,, கானாட்டுமுள்ளூர்
,, திருநாரையூர்
,, கடம்பூர்
,, பந்தணைநல்லூர்
,, கஞ்சனூர்
,, கோடிகா
,, மங்கலக்குடி
திருப்பனந்தாள்
திருவாப்பாடி
திருச்சேய்ஞலூர்
திருந்துதேவன்குடி
திருவியலூர்
,, கொட்டையூர்
,, இன்னம்பர்
,, புறம்பயம்
,, விசயமங்கை
,, வைகாவூர்
,, வடகுரங்காடுதுறை
,, பழனம்
,, ஐயாறு
,, நெய்த்தானம்
,, பெரும்புலியூர்
,, மழபாடி
,, பழுவூர்
,, கானூர்
,, அன்பிலாலந்துறை
,, மாந்துறை
,, பாற்றுத்துறை
,, ஆனைக்கா
,, பைஞ்ஞீலி
,, பாச்சிலாச்சிராமம்
,, ஈங்கோய்மலை

காவேரிக்குத்தென் கரையில் ௧௨௭.
திருவாட்போக்கி என்பது இரத்தினகிரி.
,, கடம்பந்துறை
,, பராய்த்துறை
,, கற்குடி
,, மூக்கீச்சரம் என்பது உறையூர்
,, சிராப்பள்ளி
,, எறும்பியூர்
,, நெடுங்களம்
மேலைக்காட்டுப்பள்ளி
,, ஆலம்பொழில்
,, பூந்துருத்தி
,, திருக்கண்டியூர்
,, சோற்றுத்துறை
,, வேதிகுடி
,, தென்குடித்திட்டை
,, புள்ளமங்கை
,, சக்கரப்பள்ளி
,, கருகாவூர்
,, பாலைத்துறை
,, நல்லூர்
திருஆவூர்ப்பசுபதீச்சரம்
,, சத்திமுற்றம்
,, பட்டீச்சரம்
,, பழையாறை
,, வடதளி
,, வலஞ்சுழி
,, குடமூக்கு என்பது
,, கும்பகோணம்
,, குடந்தைக் கீழ்க்கோட்டம்
,, குடந்தைக் காரோணம்
,, நாகேச்சுரம்
,, விடைமருதூர்
,, தென்குரங்காடுதுறை
,, நீலக்குடி
,, வைகல் மாடக்கோயில்
,, நல்லம்
,, கோழம்பம்
,, ஆவடுதுறை
,, துருத்தி என்பது குற்றாலம்
,, அழுந்தூர்
,, மயிலாடுதுறை என்பது மாயூரம்
,, விளநகர்
,, பறியலூர்
,, செம்பொன்பள்ளி
,, நனிபள்ளி
,, வலம்புரம்
,, தலைச்சங்காடு
,, ஆக்கூர்த்தான்றோன்றிமாடம்
,, கடவூர்மயானம்
,, வேட்டக்குடி
,, தெளிச்சேரி
,, தருமபுரம்
,, நள்ளாறு
,, கோட்டாறு
,, வம்பார்ப்பெருந்திருக்கோயில்.
,, அம்பர்மாகாளம்.
,, மீயச்சூரிளங்கோயில்

,, திலதைப்பதி
,, பாம்புரம்
,, சிறுகுடி
,, வீழிமிழலை
,, வன்னியூர்
,, கருவிலி
,, பேணுபெருந்துறை
,, கறையூர்ச்சித்திச்சரம்
,, அரிசிற்கரைப்புத்தூர்
,, சிவபுரம்
,, கலயநல்லூர்
,, சருக்குடி
,, வாஞ்சியம்
,, நல்லிலத்துப்பெருங்கோயில்
,, கொண்டீச்சரம்
,, பனையூர்
,, விற்குடி
,, புகலூர்
,, புகலூர்வர்த்தமானீச்சரம்
,, இராமனதீச்சரம்
,, பயற்றூர்
,, செங்காட்டங்குடி
,, மருகல்
,, சாத்தமங்கை
,, நாகைக்காரோணம்
,, சிக்கல்
,, கீழ்வேளூர்
,, தேவூர்
,, பள்ளியின்முக்கூடல்
,, ஆரூர்
,, ஆரூர்அறநெறி
,, ஆரூர்ப்பரவையுண்மண்டளி
,, விளமர்
,, கரவீரம்
திருப்பெருவேளூர்
,, தலையாலங்காடு
,, குடவாயில்
,, சேறை
,, நாலூர்மயானம்
,, கடுவாய்க்கரைப்புத்தூர்
,, இரும்பூளை
,, வரதைப்பெரும்பாழி
,, அவளிவணல்லூர்
,, பரிதிநியமம்
,, வெண்ணியூர்
,, பூவனூர்
,, பாதாளீச்சரம்
,, களர்
,, சிற்றேமம்
,, உசாத்தானம்
,, இடும்பாவனம்
,, கடிக்குளம்
,, தண்டலைநீணெறி
,, கோட்டூர்
,, வெண்டுறை
,, கொள்ளம்பூதூர்
,, பேரெயில்
,, கொள்ளிக்காடு
,, தெங்கூர்
,, நெல்லிக்கா
,, நாட்டியத்தான்குடி
,, காறாயல்
,, கன்றாப்பூர்
,, வலிவலம்
,, கைச்சினம்
,, கோளிலி
,, வாய்மூர்
,, மறைக்காடு
,, அகத்தியான்பள்ளி
,, கோடிக்குழகர்

* காசி. நஞ்சண்டகூடல் திருப்பெருந்துறை உத்தரகோசமங்கை மேலைச்சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு இப்போது பதிகமில்லாமையால் இதில் சேர்க்கப்படவில்லை.

மதுராந்தகம் தாலூகா எறுபாக்கத்தில் ம-ா-ா-ஸ்ரீ. முத்துகுமாரசாமி முதலியாரவர்கள் பங்களாவில் பொன்மரத்து நாடகம் அரங்கேற்றல் நடந்ததைப்பற்றி அடுத்தகிணர் கிராமம் குமாரசுவாமி சிவாசாரியார் அவர்கள் இயற்றிய கவி.

உலகெலாந்தமதுறைவிடமாகவுடைய பொன்மரத்துநாடகத்தை
இலகியவேலைமுத்துக்குமாரசாமி மாலினியமாளிகையிற்
கலியையாயிரத்து மூன்றினிற் பிலவகருது தைமதி பதினெட்டில்
அலகினத்தம் பொன்னம்பலப் புலவனணியரங்கேற்றினானால்.

குருவணக்கம்.

அண்ணன்மாமதுரை ஞானசம்பந்த ராதினந்தன்னிலே வித்வான்
எண்ணரும்திருச்சிற்றம்பல குருவினிணையடியிறைஞ்சியேஞால
நண்ணும்பொன்மரத்து நாடகநவின்றேன் நன்குணர்ந்தோர்கள்நாடோறும்
புண்ணியமிகுந்தே சிவமுணர்ஞானம் பொருந்தியிப்புவியில்வாழ்குவரால்.

அறுபத்துமூவர்களுடைய திருநாமமுதலியவற்றைக் காட்டும் அட்டவணை.

திருநாமமும் — திருவவதாரதலம் அல்லது வசித்ததலம் — திருத்தொண்டின் முக்கியமான விஷயம் — முத்தி பெற்ற வகை.

ஆதிசைவர்நால்வர்.
சுந்தரமூர்த்திசுவாமிகள் - திருநாவலூர் - சமயகுரவர்.
சடையநாயனார் - ஷ - ஷையார் பிதா.
இசைஞானியார் - ஷ - ஷையார்மாதா.
புகழ்த்துணைநாயனார் - திருப்புத்தூர் - அல்லும்பகலும் சிவபெருமானை விதிப்படிபூசித்துப் படிக்காசுபெற்றவர். சி.

பிராமணர் பன்னிருவர்.
குங்குலியக்கலயநாயனார் - திருக்கடவூர் - மங்கலியங்கொடுத்துக் குங்குலியங்கொண்டவர் ஆளுடையபிள்ளையார் ஆளுடைய அரசு இவர்கட்குத்திருவமுது செய்வித்துத் திருவருள்பெற்றவர். சி.
முருகநாயனார் - திருப்புகலூர் - சரியையும் ஸ்ரீபஞ்சாக்ஷரஜெபமுஞ்செய்தவர் இவர்மடத்துக்கு ஷ சமயகுரவரிருவரும் திருநீலநக்கநாயனாரும் சிறுத்தொண்டநாயனாரும் எழுந்தருள திருவமுதுசெய்வித்தவர். சி.
உருத்திரபசுபதிநாயனார் - திருத்தலையூர் - ஸ்ரீருத்திரத்தை ஓதினவர். சி.
சண்டேஸ்வரநாயனார் - திருச்சேய்ஞலூர் - தந்தையைத்தடிந்தவர். சி.
அப்பூதியடிகள்நாயனார் - திங்களூர் - திருநாவுக்கரசு சுவாமிகள் பேரால் திருமடங்கள் முதலிய செய்தவர். கு.
திருநீலநக்கநாயனார் - சாத்தமங்கை - ஆளுடையபிள்ளையார் திருமணத்தியானஞ்செய்தவர். சி.
நமிநந்தியடிகள்நாயனார் - ஏமப்பேறூர் - தண்ணீரால்விளக்கெரித்தவர் திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாம் சிவகணங்களெனக்கண்டவர் ஆளுடைய அரசால் பதிகத்தில் பாடப்பட்டவர். சி.
திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் - சீர்காழி - சமயகுரவர். கு.
சோமாசிமாறநாயனார் - அம்பர்நகர் - ஆளுடையநம்பி திருவடிகட்கு பத்தி செய்தவர். கு.
சிறப்புலிநாயனார் - திருவாக்கூர் - சிவனடியார்கட்குத்திருவமுதுசெய்வித்தவர். சி.
கணநாதநாயனார் - சீர்காழி - ஆளுடையபிள்ளையாரைப் பூசித்தவர். கு.
பூசலார்நாயனார் - திருநின்றவூர் - இருதயத்தில் கோவில்கட்டினவர். சி.

மாமாத்திரப்பிராமணர்.
சிறுத்தொண்டநாயனார் - செங்காட்டங்குடி - மைந்தனைக்கறிசமைத்தளித்தவர். அ.

ஆதிசூத்திரியர் அறுவர்.
சேரமான்பெருமானநாயனார் - கொடுங்கோளூர் - ஆளுடையநம்பிக்குநண்பர் குதிரைமீதேறிக்கைலைசேர்ந்தவர். சி.
புகழ்ச்சோழநாயனார் - திருக்கருவூர் - அடியார்தலைக்குத்தீங்குசெய்ததாய்த்தீயில் மூழ்கினவர். அ.
நெடுமாறநாயனார் - மதுரை - இவர்கூன்பாண்டியர் ஆளுடையபிள்ளையாரால் கூன்நிமிர்ந்தருளப்பெற்றவர். கு.

மங்கையர்க்கரசியார் - மதுரை - மேற்படி பாண்டிப்பிராட்டியார் இவர்சைவசமயந் தழைத்தோங்க வந்தவர் கு.

இடங்கழிநாயனார் - கொடும்பாளூர் - பொக்கிஷங்களை அடியார்களுக்குக் கொள்ளையிட்டவர் அ.

கோச்செங்கோட்சோழநாயனார் உலகமெலாஞ் சிவாலயப்பிரதிஷ்டை செய்தவர் சி.

குறுநிலமன்னர் ஐவர்.

மெய்ப்பொருணாயனார் - திருக்கோவலூர் - அடியார்வேடம்பூண்டுவந்த பகைவன்வாளால் மகிழ்ந்துயிர் துறந்தவர் அ.

கூற்றுவநாயனார் - களந்தை - சபாநாயகர் திருவடிகளையே முடியாகச்சூடி உலகாண்டவர் சி.

நரசிங்கமுனையரையநாயனார் - திருமுனைப்பாடிநாடு - விபூதியே பெருஞ்செல்வமென அறிந்து அடியார்க்கன்புசெய்தவர் அ.

ஐயடிகள்காடவர்கோன்நாயனார் - காஞ்சிபுரம் - சைவசமயந்தழைத்தோங்க அரசியற்றி க்ஷேத்திரவெண்பாபாடினவர் சி.

கழற்சிங்கநாயனார் - இவருடையதேவியார் சிவாலயத்துப் பூவை மோந்ததாகக் கைவைத் துணித்தவர் சி.

வைசியர் ஐவர்.

இயற்பகைநாயனார் - காவிரிப்பூம்பட்டினம் - காதலியைக்கொடுத்தவர் அ.

அமர்நீதிநாயனார் - பழையாறை - கோவணநேர்தனை நிறுத்துக்கொடுத்தவர் அ.

மூர்த்திநாயனார் - மதுரை - விபூதிருத்திராக்ஷம் சடைமுடியோடு அரசாட்சி செய்தவர் சி.

காரைக்காலம்மையார் - காரைக்கால் - சிரசால்நடந்து நடனங்கண்டு மூத்த திருப்பதிகஞ்செய்தவர் அ.

கலிக்கம்பநாயனார் - கடந்தைநகர் - அடியார்திருவடிவிளக்க கரகநீர்வாராத மனைவிகையைத்தறித்தவர் அ.

வேளாளர் பதின்மூவர்.

இளையான்குடிமாறநாயனார் - இளசை - சென்முளைவாரி யின்னமுதளித்தவர் அ.

விறன்மிண்டநாயனார் - திருச்செங்குன்றூர் - திருத்தொண்டத் தொகையருள்புரிய காரணமாகவிருந்தவர் அ.

மானக்கஞ்சாறநாயனார் - கஞ்சாறு - மணப்பெண் கூந்தலையரிந்துகொடுத்தவர் அ.

அரிவாட்டாயநாயனார் - கணமங்கலம் - பூட்டியரிவாளூட்டியரிந்தவர் சி.

திருநாவுக்கரசுசுவாமிகள் - திருவாமூர் - சமயகுரவர் கு.

ஏயர்கோன்கலிக்காமநாயனார் - பெருமங்கலம் - இவர்வன்றொண்டர்பேரில் கோபித்து வயிற்றைக்கிழித்துக்கொண்டிறந்தனர் சி.

மூர்க்கநாயனார் - திருவேற்காடு - சூதாடிவரும்பொருளால் அடியார்க்குத்திருவமுதுசெய்வித்தவர் அ.

சாக்கியநாயனார் - சங்கமங்கை - காஞ்சியில்மறவாது கல்லெறிந்தவர் சி.

சத்திநாயனார் - வரிஞ்சியூர் - அடியாரையிகழ்ந்தவருடைய நாவையரிந்தவர் அ.

வாயிலார்நாயனார் - திருமயிலை - ஞானபூசைசெய்தவர்

முனையடுவார்நாயனார் - நீடூர் - சமர்செய்துவரும்பொருளால் அடியார்க்கமுதளித்தவர் அ.

செருத்துணைநாயனார் - தஞ்சை - பூக்கொணுமாதர்மூக்கினையரிந்தவர் சி.

கோட்புலிநாயனார் - நாட்டியத்தான்குடி - நெல்லைச்செலவழித்தகுற்றத்திற்காகச் சுற்றங்களைக்களைந்தவர் சி.

இடையரிருவர். திருமூலநாயனார் - சாத்தனூர் - உடலூடு தவஞ்செய்து திருமந்திரஞ்செய்தவர் கு.

ஆனாயநாயனார் - மங்கலம் - பசுக்களைமேய்த்தவர் குழலிசையில்ஐந்தெழுத்தைக் குழையவைத்தூதினவர் சி.

வேட்கோவர்.

திருநீலகண்டநாயனார் - தில்லை - இளமையிலேமாதர்வளமைதுறந்தவர் அ.

பாணர். திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் - திருவெருக்கத்தம்புலியூர் - ஆளுடையபிள்ளையாருக்கு யாழ்வாசித்தவர் கு.

பரதவர். அதிபத்தநாயனார் - நாகப்பட்டினம் - அகப்படுமணிமீன் அரற்கென விடுத்தவர் சி.

வேடர். கண்ணப்பசுவாமிகள் - உடுப்பூர் - திருக்காளத்தியப்பருக்குத்தன்கண்ணையப்பினவர் சி.

சான்றார். ஏனாதிநாயனார் - எயினனூர் - பகைவனுடைய நெற்றியில் திருநீறு சாத்தியிருக்கக்கண்டு மருண்டு உயிர்துறந்தவர் அ.

சாலியர். நேசநாயனார் - காம்பீலி - அடியார்களுக்கு உடைகோவணங் கொடுத்தவர் அ.

செக்கார். கலியநாயனார் - திருவொற்றியூர் - திருவிளக்கேற்ற எண்ணெய்க்குப் பதிலாகத்தமது இரத்தத்தைநிறைக்கும்பொருட்டுக்கழுத்தையரிந்தவர் சி.

ஏகாலியர். திருக்குறிப்புத்தொண்டநாயனார் - காஞ்சிபுரம் - தலையையுடையொலிக்குங் சிலையில்மோதினவர் அ.

தீண்டாத்திருமேனி. திருநாளைப்போவார்நாயனார் - ஆதனூர் - தீயில்மூழ்கிப் பிராமணமுனிவடிவங்கொண்டெழுந்தவர் சி.

திருமரபுதெரியாதவர் அறுவர்.

எறிபத்தநாயனார் - திருக்கருவூர் - திருப்பூக்குடலையைச்சிதறின மதயானையைக்கொன்றவர் சி.

குலச்சிறைநாயனார் - மணமேற்குடி - நெடுமாறபாண்டியராஜனுக்கு முதல் மந்திரி சமணரைக்கழுவிலேற்றினவர் கு.

பெருமிழலைக்குறும்பநாயனார் - பெருமிழலை - பரமயோகியாரைவைத்துனைவர் திருவடியில்பூஜித்தவர் கு.

தண்டியடிகள்நாயனார் - திருவாரூர் - திருக்குளம்வெட்டிக் கண் பெற்றவர் சி.

கணம்புல்லநாயனார் - இருக்குவேளூர் - முடிவிளக்கெரித்தவர் சி.

காரிநாயனார் - திருக்கடவூர் - சிவாலயங்கள் பலவற்றைக்கட்டிவைத்தவர் சி.

முத்திபெற்றவகையில் அ. என்பது அடியாரைவழிப்பட்டும்: கு. என்பது குருவருளாலும், சி. என்பது சிவலிங்கத்தாலும், முத்தியடைந்ததாகக்குறிப்பு. சண்டேசுவரநாயனார் - பிரமசாரி, மூர்த்திநாயனாரும் - திருநாவுக்கரசுசுவாமிகளும் துறவறம், மற்றவர்கள் இல்லறம்.

சாத்துகவிகள்.

தஞ்சைமாநகரம் பிரம்மஸ்ரீ சதாவதானம். சுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றிய சிறப்புக்கவி நேரிசைவெண்பா.

பொன்மரத்தைநாடகத்திற் பூத்துமணங்கமழ்ந்து
நன்மையுறநாட்டித்தன்னாமத்தின்றன்மையினாற்
பொன்னம்பலங்கொண்டான் போற்றும்புகழ்நத்தப்
பொன்னம்பலவேள்புனைந்து.

சென்னை கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் வி. கோ. சூரி
நாராயண சாஸ்திரியார் அவர்கள்பி-எ-சொல்லியது. நேரிசைவெண்பா.

பொன்னம்பலக்கவிஞன் பொன்மரத்துநாடகத்தைப்
பொன்னம்புலவர்புகழுமா— வின்னிசைப்பைஞ்
செந்தமிழிற்பாடினான்சீர்சாலினமினத்தை
வந்தினிதுசேருமதி.

அஷ்டாவதானம்பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றியஇரட்டை
அறுசீர்விருத்தம்.

வலனோங்குமுயர்செங்கை மாநகர்சார்நத்தத்தில்வதிந்தபுண்ய
மகிபன்வெங்கடாசலமால் முனியம்மைதவப்பயனாய்மகியில்வந்து
புலனோங்குகருணைபொறை யீகைதயைநிறைஞானம்பொற்பின்வாய்ந்து
புகழ்பொன்னம்பலக்கவிஞன் புலவரெலாநனிவியந்துபூரித்தென்று
நலனோங்குதேவாரத்தலசரித மாதியவாநாடித்தேர்வா
னயமனைத்துமேயமைந்த பொன்மரத்துநாடகத்தைநலக்கக்கண்டு
தலனோங்குநேத்தப்பாக்கத்திலுதித்திடுசீமான் றனதனோர்வான்
றருமமுனிசாமிவள்ளலச்சிட்டிங்கி யாவருக்குந்தந்தான்மாதோ.

திருமயிலைசண்முகம்பிள்ளையவர்கள்பாடியஅறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பரத்துநாடகம்புலியும்பதஞ்சலியுங்கண்டு பவந்தீர்ந்தார்சொன்ன
மரத்துநாடகஞ்சொற்றான்செங்கல்வநகர்நத்தமருவிஞானத்
திரத்துநாடகமவாய்ந்த பொன்னம்பலப்புலவன் றேரினீண்டெடன்
றரத்துநாடகமொழியுந்தரத்ததேயோ வதன்சீர்தானிக்கம்மா.

முத்தமிழ்ரத்தினகரம், சைவஸ்ரீ. ம. தி. பாநுகவி அவர்களாலியற்றப்பட்ட
அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஆடகமாதருவின்மேலாய்ந்தொருநாடகமதனையகிலமெச்சப்
பாடலமைவோடியற்றிப்புகழ்பெற்றான்பாரதனிற்பானற்போதி
னேடவிழுநெடும்புயத்துவேங்கடாசலமீன்றவியல்பின்மிக்க
பீடமைபொன்னம்பலவனென்றெவரும்பேசமெழிற்பெரியோன்றானே.

வெண்பாப்புலி. தி. சு. வேலுசாமிப்பிள்ளையவர்களியற்றிய
நேரிசைவெண்பா.

சுத்தத்தான்மெய்சுகுணத்தான்றூயவையுள்
சித்தத்தான்சீர்நுலவுஞ்செங்கைநகர்-நத்தத்தான்
பொன்னம்பலவேள்செய்பொன்மரத்துநாடகத்தா
மன்னம்பலவரம்மைமா.

காஞ்சிபுரம்மஹாவித்வான் நமச்சிவாய முதலியார் அவர்கள் புத்திரர்
வித்வான் கந்தசாமிமுதலியார் அவர்கள் இயற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமலிதருபொன்மரத்துநாடகத்தைப்பூமணங்கமழ்தரவியற்றித்
தூமலிபுலவோர்சொற்சுவையின்றேன் றுய்த்திடநன்களித்தனனால்
தேமலிபொங்கர்ச்செங்கைமாநகரிற்றிகழ்தருநத்தத்துள்வாழ்வோன்
பாமலிவேளாண்குலத்தினன்பொன்னம்பலமெனும்பாவலரேறே.

அஷ்டாவதானம். பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள் மாணாக்கரும்
சென்னைபுரசை நேத்தப்பாக்கம் முனிசாமி முதலியார் அவர்கள் இந்துதரும
பாலிகா பாடசாலை தமிழ்ப்பண்டிதருமாகிய பாலூர் வேலு தேசிகரவர்கள்
இயற்றிய ஆசிரியப்பா.

திருவார்கமலச்செழுமலர்வாவி, மருவார்சோலைமதியூர்மாடம்
மதியோர்முகத்தார்மாதரிடையறு, சதிரார்வீதித்தனிநகர்செங்கற்
பட்டினனத்தம்பண்புறவாழ்வோன், மட்டிலாச்சீர்த்தியன்மன்னவர்நண்பன்
சகரர்க்கருள்செயுஞ்சானவிமரபோன்புகரிலாமனத்தோன்புண்ணியமேனியன்
பொன்னம்பலப்பேர்புனிதமார்புலவன், பொன்மரநாடகம்புகன்றனன்றனைத்
தேவருலகும்புகழ்தருசீர்சால், மாவருசென்னைமாநகர்ப்புரசை
வாழ்வுறும்வள்ளல்வன்சீர்த்தியினான், பேர்ழ்வுறமதியம்புனைசடையன்னால்
அடியரைத்தேடியகங்களித்தவரே, படிமுதல்யாவும்படைத்தளித்தழிக்கும்
சிவனென்றேயெணீ இச்செய்கடனியற்றிப், பவனத்தோர்வரப்பற்றமுதூட்டி
விரும்பியபொருளெலாம்வேலையாயீய்வோன், சுரும்பியிர்குவளைத்தோளணிப்
புண்ணியன், காஞ்சிப்பதியுறுங்காமாக்ஷியம்மை, வீஞ்சித்தகோட்டம்வரைவிலா
த்தீபம், வைத்தருச்சனையெலாம்வரன்முறையியற்றிப், புத்தமுதோர்சுவைப்
போனகமட்டிலா, வகைகருக்குதவுமரும்புண்ணியவான், மனோவொருப்பாட்டி
னின்மாட்சிமிக்கவான், சம்புறைபதியெலாந்தணீர்க்குழைவைத்தே, உம்பரு
ம்புகழேத்துமுபகாரன், நேத்தப்பாக்கமாநீள்பழம்பதியினான், பூத்தசீர்க்கரு
ணைப்பொலிமலர்முகத்தினன், முருகேசப்பெயர்முழுப்புண்ணியனைத், தரை
மிசைத்தம்பியாய்த்தான்கொளுந்தூயோன், முனிசாமிப்பெயர்முழங்குசெம்மை
ரன், இனிமையாய்மகிழ்ந்தேயிவ்விரும்புவியோர், எவர்க்குஞ்சிவனருளினி
மையாய்விளைய, துவாப்பவமிலாப்பொருட்டொகைத்தயைசெய்து
அச்சிற்பதிப்பித்தாங்கேற்றுவித்தான், இச்சகதலத்தோரின்புற்றனரே.

காஞ்சீபுரம். பிள்ளையார் பாளையம் மணிகண்டமுதலியார் குமாரர் வித்வான்
இருவேங்கடமுதலியார் அவர்கள் இயற்றிய ஆசிரியப்பா.

மலர்தலையுலகிற்பலர்புகழதவரு, மனமுதற்றத்துவவினவனத்தருக்கள்
வருந்தியவொழிக்கப்பொருந்தியவினவிப், பூரணவறிவெனுங்காரணவரும்
மரத்திற்கரசியல்வரத்திறபுனைதரப், புண்ணியதீர்த்தநண்ணியமுழுகி [பொன்
யாரூர்முதலாம்பேருரனவொளிர், மூலாதாரமேலாதார [ரப்பா
மெங்கணும்புகுந்துதெய்வங்களைப்பணிந்து, திரவொளிதருமொருபரவெளிப்ப

மிகுதிவருபொழுதுறுதிதரவுயர், கச்சியம்பதிதனின்மெச்சியர்குலப்பி
ளிருத்துமெய்த்தவத்திருந்தப்புரிந்த்த, கப்பனாருளவுரம்புரமின்பம்
பெற்றதென்றகமுகத்தற்றதைப்புறப்பி, நுவலாவுரைத்தனநுவலாறு
வாடகமரத்துாடகமெனஓ, திருமகன்மொழுனர்திருமகனொவெனர்
செங்கற்பட்டுச்செங்கனத்தப், திகழ்வெங்கடாசலப்புகழ்வேண்டியவன்
புத்திரனதிருர்மித்திரன், பொன்னம்பலமெனும்பொன்னம்பலமே.

மதுரைஜில்லாமுறையூர் மகாஜனம்பொருந்தியஸ்ரீமான்மழ-சி சண்முகஞ்
செட்டியாரவர்கள் சமுகவித்வான் கொட்டாம்பட்டி எம். கருப்பையாப்பாவலர்
அவர்கள் இயற்றிய. நேரிசைவெண்பா.

நாடகமெல்லாமிதுபோலுங்கண்டதில்லையென
நாடகத்திற்பொன்மரத்துாடகத்தைப்பாடகத்து
மன்னம்பலபுலவர் மாமகிழ்வாய்க்கொள்ளநத்தம்
பொன்னம்பலப்புகன்றுன்போர்த்து.

கட்டளைக்கலித்துறை.

மன்னம்பலந்தனிநடக்யாடும் வரனருளாற்
பொன்னம்பலந்தரும் பொன்மரநாடகம்போர்த்துகற்றோர்க்
கின்னம்பலத்தப் பிறவியெய்தாததை யின்பொடுகொள்
கன்னம்பலத்தம்பெற்றதுவாமிதுகண்கண்டதே.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

நாங்குபுகழுறுமந்நாடகத்தைநாடகத்திற் றகைமையாய்ந்து
பாங்குபெறக்கற்றுய்யும் படியச்சிற்பதிப்பித்துப்பலர்க்குமீந்தான்
வீங்குநலந்திகழ்த்தனதன்மினிருமதன் றருமநெறிவிரும்பிச்செய்யும்
ஓங்குகனைமிமருமான் புரசைமுனிசாமியென்பேருடையான்மாதோ.

வை வ னை வ ம்.

சென்னை - கிரிஸ்டியன்காலேஜ். தமிழ்ப்பண்டிதர். கா. ஸ்ரீகோபாலாசாரி
யார் அவர்கள் இயற்றிய அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீராருஞ்செங்கல்வபுரிநத்தந்திழகவருஞ்செல்வனுளும்
பேராரும்பொன்னம்பலப்புலவன் புலவர்மயப்பேசவேனைப்
பாராருங்கவிகூரப்பொன்மரத்துநாடகத்தைப்பாடித்தந்தான்
சேராருநாடகமே நாடகமே நிலவத்தானே.

சென்னை. பிரஸிடென்ஸிகாலேஜ். தமிழ்ப்பண்டிதர். பு மா ஸ்ரீவாசாச
ரியார் அவர்கள் இயற்றிய நேரிசைவெண்பா.

கன்மனத்தோருண்மகிழ்ந்துாடுஞ்சிறப்பெய்த
பொன்மரத்துநாடகத்தைப்பூர்தமிழின்சொன்மணக்கப்
பாடித்தந்தான்செங்கற்பட்டுப்பொன்னம்பல
வீமதுயோணிவாத்து.

செங்கற்பட்டு. யுனைடெட். பிரீசர்ச். மிஷன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
ஐ. அரங்காசாரியாரவர்களியற்றியது.

வெண்பா.

பாடற்கெளிதாய்ப்பயனிற்பெரிதாவ
நாடேர்ந்தபொன்மரயிநாடகத்தைப்-பீடேர்ந்த
பொன்னம்பலனும் புகழ்வேளாளர்தருல
மன்னனுரைத்தான்மகிழ்ந்து.

சென்னை. வி. ய்ஸ். யம். காலேஜ். தமிழ்ப்பிரதமபண்டிதர். வை. மு. சட
கோப ராமானுஜாசாரியார். அவர்களால் இயற்றிய வசனம்.

செங்கற்பட்டுக்குஅடுத்தநத்தத்திலிருக்கும்மா-௱-ஸ்ரீ பொன்னம்பலமுதலியா
ரவர்கள் இயற்றி வெளியிட்டபொன்மரத்துநாடகம்என்றஇத்தமிழ்நூல் என்
பார்வைக்குவந்தது. உலகத்துப்பெரும்பாலோர் எளியதென்று சாமான்யமாக
நினைக்கும் மரமல்லிகை மரத்தினிடத்தில் சிற்சில அருமைபெருமைகளை
மேற்குறித்த முதலியாரவர்கள் தமதுமுதிர்ந்த அநுபவத்திலே நாமாகக் கண்
டனராதலால், அம்மரத்தை எவரும் அபிவிருத்திசெய்து அதனால் உலகத்தை
ப்பெரிதும் பயன்படுத்த விரும்பினராய் அதன்விசேடத்தை அனைவர்க்குந்தெ
ரிவித்தற்பொருட்டு எழுதியதொருநூலாகும் இது. இதிற்கூறியுள்ள விஷய
ங்கள் தற்போர்க்குமிக்க அதிசயத்தை விளைக்குந்தன்மையன. இந்நூலாசிரி
யரது ஆராய்ச்சி விடாமுயற்சி லோகோபகாரசிந்தைமுதலிய பெருந்தகை
மைகள் இந்நூலால் நன்குவிளங்கும், இந்நூலில் கற்பனைவகையால் புனைந்து
ரைத்தசரித்திரத்தின் இடையிலே சைவவைஷ்ணவபுண்ணியக்ஷேத்திரங்கள்
பலவற்றின் மகிமைகளைத் தொகுத்துக்கூறியமை பலரும்பாராட்டற்பாலது.
அன்றியும், சென்னை யூனிவர்ஸிடி தமிழ்ப் பரிக்ஷகர்த்தர்களிலொருவரும், மேற்படிசர்
வகலாசாலை யங்கத்தினருள் ஒருவரும் தென்னிந்தியாவிற்பெயர்பெற்ற ஐகோ
ர்ட்வக்கீல்களிலொருவரும் கல்விகேள்வி யாலெய்திய சிறந்த ஞானமுடைய
ஸ்ரீமான். தொட்டக்காடு இராமகிருஷ்ணப்பிள்ளை பி. ஏ. அவர்களுடைய வன்
என்மையை தமது முதலியாரவர்கள் இந்நூலில் ஓரிடத்தில் எடுத்துக்கூ
றியிருப்பது தமிழ்ப்பயிற்சியுடையவர்க்கு மிக்க மகிழ்ச்சியைத்தரு
கின்றது.

உழலூர். கவி. வீரராகவமுதலியார் மாணவர் கவி ஸ்ரீகோபாலமுதலியார் அவர்கள்
இயற்றிய அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்போலுமழியின்றிநலமெல்லாங்கொடுக்கும் பெருமைத்தாகும்
பொன்மரத்தினுடைத்தனைப்ப அப்பித்தான்புலவருளம்புகழ்ச்செய்தான்
பொன்னருளுடைம்பயிலும் செங்கல்வபுரிநத்தப்புக்கிளரோன்
பொன்னம்பலப்பெயர்தன் ஞானியினால் பெற்றபுகழ்பெற்றான்மாதோ.

சாத்துகவிகள் முற்றுப்பெற்றன.

சாத்துகவிகள்.

சென்னைபுரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

அகவற்பா.

மாதரையுடுத்துவாழ்நிலமகள்பால் பாதவமனைத்தும்பரப்பலவுமிருளும்
ஓரறிவுயிரெனச்சிரியவவற்றுள், ஒன்றிதுகாறுனைறுபுலப்படா [கையெனக்
தாங்காங்கிறைகொளுஉம்அன்னதன்பெயரோ, மரமல்லிகையென்மலைமல்லி
கெருடமல்லிகையெனக்கிளக்குமாண்பது, மூக்காறுற்கால்பற்பலவிருக்கை
வன்மைகூரிரதம்பன்மனைக்கேற்பன, கட்டுக்கோப்புப்பெட்டகம்பேழை
கொடுங்கையுத்திரம்விடங்கமுதலவும், உழவுக்கருவிகள்செழுமைமக்கலம்
சாளரஞ்சுருங்கையோவிவாகனங்கள், அளவக்கருவிகள்புளகற்றிமெண்
டொடுகருவிகரிகைக்கிடுகைப்பிடிகூர்ங், கொடுவாள்நெடுவாள்குடாச்காப்பு
குடைக்கால்நெடுந்தாண்மடுக்கும்நீள்வண்டி, தொட்டில்பத்தர்கட்டிலின்னன
செய்தற்கமைந்தவைரமிருக்க, நிதலையரிச்தல்மூதிரவருத்தல் [வும்
நைலம்வற்றல்வெயிலாற்பீறல், மழையால்கிழ்மல்குழையாற்பொருமல்
சிறிதுமிலதாய்ப்பெரிதும்வனத்ததாய், கேண்டுவோர்சந்தய்காண்டுமிள்ளப்
புறக்கடைகொல்லைபுனத்துபவருத்த, மறுப்படாதெவிதின்வைத்தவளர்த்திழி
எவ்விவர்தமக்குஞ்செவ்விதிற்பயந்து, காசொன்றிலாமல்ஆசறக்கிடைப்பதென்
றணையதுபொன்மரமெனவொருபெயர்தங், தேனையமரங்களுள்வானளாம்அர
ஆதியசிலநாள்போதவுமதனைதன்வன்மைகுறைந்துசென்முகவணவாவு [சால்
உணபாடனைத்துந்தெள்ளிதிற்றேர்ந்து, பல்வகைத்தருவுமெல்லையிறேரிகட்
சூழுமியதெனவும்பழுதெலாம்வெளியுறக், கொன்றைவில்வங்குருந்துகல்லால்
என்றிவைஅருவாதித்ததெனவும், பின்னர்த்தாமுனிப்பொன்மரமொன்றே
கெடுதுயயப்பதுநிலைபேருற்ற, தக்கசூழ்புறக்காழ்மிக்கொண்டுள்ளது
அடிகிளைப்பதுபோல்படிதாத்தாரிலும், மூளைத்துத்தழைக்கும்வளத்ததெனவும்
சீர்மாணித்துப்பேரியல்விருக்கம், அனைத்துங்கூடியாருந்தவாத்திரை
மனத்துவகையின்வழிக்கொடுபடாஉ, ஆண்டாண்டெடுத்துபாகுறுதெய்வ
தம், யாவையுமேர்திச்சேவைபெற்றிப்பால், தொண்டைநன்னாட்டிற்கண்டமுப்
பாஞ்ஞிரண்டிருப்பதியிவற்றுளுமுழிக் திரண்டிரயாஞ்சிறிதுமுறுகா
தெஞ்ஞான்றுந்தனியிஞ்ஞாலந்தொழுமுஉற், காட்சித்தாகியமாட்சியதென்னக்
கடைப்பிடித்தாங்குநன்னடைத்தவம்புரிந்து, கம்பமூன்றுங்கைகுவித்திறைஞ்
சும், நம்பனூர்ச்சியேகம்பநாதனைப், போற்றித்தரிசித்தேற்றவரங்கொண்
டன்னபொன்மரத்திற்கரசியிலளித்த, தென்னவுமோரணியியலுறப்புனைந்தே
நாடகமாகப்பாடினனென்ப, சிங்கவேள்குன்றுசார்செங்கற்பட்டு
நத்தந்தனில்வாழ்விற்பனஉபாத்தி, வேங்கடாசலமால்னோன்பின்பயனெனப்
பாங்கியல்வில்லறம்தாங்கிநடாத்தும், கனிதருமின்சொன்முனியம்மைப்பெயரினுள்
ளனவருமிவர்கடனிமாதவத்தால், புத்திரனாய்வருஞ்சத்தியப்பொருளான்
வித்தியாசாகரன்நித்தன்வேணியார், வரசிமரபினிற்சிரமதாயுதித்தோன்
அரசர்மகிழோங்குநன்னடையன், தன்மக்குணத்தோன்சின்மயற்கன்பன்
நன்னலப்பெருந்தகையின்னயக்குணத்தோன், பொன்னம்பலப்பேர்வள்ளக்

உ

சிவமயம்.

பொன்மரத்து நாடகம்.

காப்பு - வெண்பா.

பொன்னுலகும் போற்றுதிருப் பொன்மரத்தி னாடகத்தை
இன்னுரையாற் செந்தமிழி லேயிசைபபா-முன்னுநந்தக்
கல்வபுரிக் கைலையண்ணல் காதலிக்கும் வேழமுகச்
செல்வவிநாயகற்சிர் சித்து.

விருத்தம்.

உலகெலாம்புகழ்மரத்துளொப்புயர்வில்லாதோங்கி
வலனுறுதலைமைசேர்பொன் மரத்தினாடகத்தைச்சொல்ல
அலகிலாமறைகள்பேசு மரும்பெருந்தேவர்தம்மை
இலகியபக்தியோடு மேத்துவேன் போற்றுவேனே.

இராகம்-சாவேரி-அடதாளம்.

பல்லவி.

துதிபுரிவாய்மனமே எந்நாளும
துதிபுரிவாய்மனமே

அநுபல்லவி.

மதிநிலவியசெல்வ மாளிகைசூழ்செங்கல்வ
மாநகர்தனிற்சொன்ன மரத்துநாடகம்பன்ன (துதி)

சரணங்கள்.

விக்கினந்தவிர்த்தருளும் விக்கினராசனை
வீறும்வள்ளிக்குகந்த வேல்முருகேசனை
தக்கவர்புகழுந்தந் தங்குங்கைலாசனை
சாற்றுங்கோதண்டராம ஜானகிநேசனை (துதி)

வாக்கினிலெழுந்தருள் வாணியாகியபின்னை
பாயவுளமகிழு மலராசனப்பொன்னை
ஆக்குமண்டசராசரங்க ளாவைக்குமன்னை
ஆகிவிளங்குமெய்யன் கமலாம்பிகைதன்னை (துதி)

தங்குநந்திசரைத் தவத்துச்சண்டேசரை
சதுர்மறையுந்தமிழிற் சாற்றும்பிரகாசரை
துங்கமிகும்பொதிகைச் சூழ்முனிவாசரை
தொண்டருபான்மூன்றும் பக்தவிலாசரை

விருத்தம்.

மிகுதுப்மைபெறு மாப்தாளவையான
வேதங்களனிவியந்து விரிவிற்பேசுந்
தொகுமுயிரின்முதல்ஙிவா விலங்குந்தெய்வத்
துவமுடையவிருக்ஷங்கள் சேர்ந்ததம்முள்
நகுகதிர்மாமுடியரசு நாடிப்பேச
நாதனருளாற்றலைமை பெற்றஅந்தத்
தகுபுகழ்சேர்பொன்மரத்தை விளக்குநன்று
டகஞ்சொல்வேன்பலனுஞ் சாதகஞ்சொல்வேனே.

அவையடக்கம்.

கண்ணிகள்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பகீரதன்சுரநதிசேர்வெந்நும் யாத்திரை செய்பவர்
கொடுவேந்தோமென்பரதுபோல்
புகழ்தமிழ்கவிஞர்முன் புல்லறிஞனாகிலும்
பொன்மரவிர்த்தியைப் பேசவனால்
பாச்சிசோச்சியெனும் பாலர்சொற்களைமேலோர்
பால்சோறெனக் கொள்ளல்கண்டேன்
கூசாமற்பேசினேன் கவிஞரங்கனமிதைக்
கொள்வாரென்றே ஆசைகொண்டேன்.

முகவுரை.

விருத்தம்.

இன்னிலமெலாமுன் னரண்யமாக
யிருந்துலகோரதனையே யுதவிபெற்றா
முதற்கொள்ளைதனைக் களர்செய்யக்
கலங்கிப்தனுற் காட்டையழிக்கக்கண்டு

மன்னர்தடுத்திடக்கேடில் சவுக்குக்காட்டை
வைத்துமவிறகாகப் பொன்மரங்கள்கூடி
மன்னுகின்ற பொன்மரமேகம்மையாள
வரம்பெற்றகதைசொல்லி புரம்பெற்றேனே.

கண்ணிகள்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

உலகெங்குமேமுன்னம்பல்மாண ஆரண்யம்
ஓங்கியிராவின வாகாயம்
அல்கிலாவந்தக் காட்டுமரங்களால்
விடெவருதைமக்கவுண்டாயின வித்தேயம்
கூட்டமாகவேகள்வர் காட்டினில்வாழ்ந்திருந்து
கொள்ளையிட்டார்களே முன்னாள்
வெட்டிவெருதொனுவக் காட்டைக்களைந்துமாந்தர்
என்னுது மென்னுவதிந்நாள்
பாரிலோர்சூரியன்போ லரசாளுங்கம்
பரிக்குமரசரைக்கண்டு
யாருங்காட்டைவெட்டாமற் சிராயனைவளர
ஆதரித்தார்கள் செங்கோல்கொண்டு
பொன்மாரிபொழிந்திடப் பொன்விளைந்திடச்சென்னை
புதுவையும்வாய்ந்த தொண்டைநாட்டை
உன்னியேபல்துரை சென்னையருகினிலே
உண்டாக்கினர் சவுக்குக்காட்டை
இந்தச்சவுக்காட்டை தாரும்பெரிதாய்ச்
சந்ததமும் போற்றினர்
மந்தாரம்பாரிஜாத பாரிச்சந்தனங்கற்பகம்
சந்தான மலர்நாற்றினர்
பாஞ்சாலதேசத்துப் பூஞ்சோலையோவிது
பந்தர் மந்தாரச்சோலையோ
காஞ்சியிலுள்ள பூமாஞ்சோலையோசெய்துள்ளர்
கனவாத்திமரச்சோலையோ
வன்மைதருமாயூரம் புன்னையஞ்சோலையோ
மருதூர்மருதஞ் சோலையோ
மன்னவன்பிளைவிதுரை தென்னஞ்சோலையோமுங்கில்
வளரும்பாக்ச் சோலையோ

நல்லநடனமாடுந்தொல்லைத் தில்லைவனமோ
நன்னுங்கடம்பவனமோ
வல்லிடும்பாவனமோ சொல்லுங்காண்டாவனமோ
மாயன் ப்ரந்தாவனமோ
காலகாலனாடு மாலங்காடோபாட்டால்
கதவந்திறக்கு மறைக்காடோ
கோலமாமணங்காட்டும் வேற்காடோ
வெள்ளானைகொம்பைப் பெற்றவெண்காடோ
ஞாலமெலாம்புகழு நீலகிரியோவுமை
நன்னும்யிமாசலமோ நன்று
சீலமிருந்தமேலோர்சூழும் ஸ்ரீசைலமோ
செந்தமிழ்ப்பொதிகையோ வென்று
விண்ணோர்சவுக்குக்காட்டை வெண்ணிலன்னிப்புகழ்ந்து
விலைமீட்டிப்பாடுவார்
மண்ணுலகோர்முயற்சிபண்ணி யச்சோலைவைத்து
மட்டில்லாபொன்னைத் தேடுவார்
ஆகிலுஞ்சவுக்குமரம் நாளுஞ்சூலைவிறகுக்
கடாபந்தம் காலகளாகுந்தொல்லைச்
சாகரமானசம்சாரம் விடுதொழுவந்
தன்னால்கட்டச் சகாயமில்லை
ஆரண்யமெங்கு மற்றகாரணத்தால்சேர்ந்து
அல்லலெவ்வும் வகைதேர்ந்து
பூரணர்காருண்யத்தால் கல்லாலுடன்குருந்து
பொற்கொன்றை வில்வமிவைசேர்ந்து
காட்டிலும்நாட்டிலும் நின்றமரங்கட்கெல்லாந்
தைலச்சாரலில் விரைவோடு
கூட்டமென்றழிவிப்பக் கோடானுகோடிமரந்
கூடிப்பேசின மகாநாடு.

௬ விருத்தம்.

மரங்களெலாங் கைலாயச்சாரல்தன்னில்
மகாநாடுகூடி பந்தச்சபை நடாத்தப்
பெருந்தகைகல்லால் மரமேமுதன்மையென்று
பெருந்துறைவாழ்குருந்து மரம்பரிந்துபேசச்

சரியென்றேசபைமுழுதுஞ்சம்மதிக்க
நயவால் கல்லால மரஞ்சபையோர்க்கெல்லாம்
அரசமரத்தாள்கையினாலொருந்தினை
அகலுவதற்குரிய வகைபுகலுவந்தானே.

கண்ணிகள்.

இராகம்-ஆகிரி-தாளம்-ஆதி.

வேதன்செய்யுலகத்தாங்காதாரமானநம்மை
வேதைசெய்வர்தான் செய்யலாமோ
ஆதியில்லானனாலியிலும் நம்மையாக
அடிபோடழிக்கப் பார்க்கலாமோ
உலவுந்தபோதனர்க ளிலைபாகந்கலந்துசெய்ய
உத்யானவனமாக விருந்தோம்
நலமாம்வேதாகமங்கள் பலபுராணங்களோத
நைமிசாரண்யமாக விருந்தோம்
தந்தைதாயைப்பிரிந்துவந்த ஸ்ரீராமருக்குச்
சொந்தவைகுந்தம்போல விருந்தோம்
ஐந்தாண்டவரிச்சந்திரனாதியோர்
வந்தகாலஞ்சொர்க்கம்போல விருந்தோம்
இவ்வாறுவாழுந்நம்மை யெவ்வாறுபகுதிகளை
ஏழைகருடராஜன் போல
செல்வையாயானாம லிவ்விருபஷிகைவிடாத்
நிங்கையடைந்தோஞ்சால
காலத்திற்கேற்றதொரு கோலம்போலாகத்தாவி
காப்பாற்றத் தயங்குகின்றோம்
ஞாலத்தில்வரவோங்கி நாரணியவாலத்தில்
நடுநடுங்கிப் போகின்றோம்
அனலாகும்வெய்யில் வானோர்க்குமுக்கியமா
யமையுமென்றாலும் வெகுமோசம்
யானைபைக்கொல்லாம்பையுந்தானே அவம்டிக்கும்மயில்
அதுபசசோந்தியைத் தள்டால்மோசம்
அத்தன்மைபோலாசு புத்ராபயந்தந்தாலும்
அல்லல்நடுக்குங்குணமின்று
நித்தமுதவிசெய்யத் தக்கதொருநாளை
நியமித்தாசாய்க் கொள்ளவன்று

ஆனபூர்வ தவத்தாற்றுனே வையகந்தன்னை
  ஆளவேண்டு மல்லாது
வினைபார்வையில்லாமற் போனகோட்டான்கதைபோல்
  எளிதிலாள்கை செல்லாது
தேக்குநாக்குவேங்கை செம்மரம்சந்தனஞ்
  சிராயாளமோதா வென்னில்
பாக்குமரம்போலாகும் சிக்ரமாயவைபெருகும்
  பரவாதித்தேசந் தன்னில்.

விருத்தம்.

அரசமரத்தாலுங்கப்பிலடையுந்தீதை
  யடுத்துரைத்த கல்லால்சூழ்ந்தாலோசித்துச்
சரசமுடனம்மையெல்லாமீன்றதாய்போல்
  தயவாகச்சதாகாலமதாரித்தே
அரசியற்றபொன்மரமே நக்கதென்று
  மவனிக்குமிகப்பலனை யளிக்குமென்றுந்
தெரியவதாயின்னதென்றுஞ் சபையோர்தங்கள்
  சிந்தைமகிழ்வுறவிரித்துச் செப்புமன்றே.

தரு-இராகம்-மத்யமாவதி-அடதாளம்.

பல்லவி.

மரத்திற்சிறந்தது பொன்மரமே அன்றி
மற்றொன்றுமில்லையிதுஸ்திரமே

அநுபல்லவி.

உரத்தமரமல்லவிவை கிரிமல்லிகைவர்க்கம்
உன்னுஞ்சக்ரம்குடசிமென்னமன் னுலகத்தில்

சரணங்கள்.

தேசாதேசங்களெல்லாம் ஓடி விரைய்த்
  தேக்காதிமரங்களை நாடி நாளும்
ஆசையாய்ப்பெரியோர்கள் தேடி வைத்த
  அரும்பொன்னைத்தந்து மிகவாடிச் சற்றும்
மோசம்போக வொட்டாமல்
  காசுக்கஷ்டங் கிட்டாமல்
வாசஸ்தலத்தில் யாவும்
  லேசில் தருந்தட்டாமல்

வண்டுதுளைத்தல்செல் சாக்காடு
  விறல்மரங்கள்வாழ்ந்திடும் பெருங்காடு அதைக்
கண்டும்படவேண்டுமே பாடுமகா
  கஷ்டத்தால் வரவேண்டும்வீடு வினைய்
வண்டிசக்கரங் கொடாமல்
  தெண்டகுடியாகாமல்
வாழுமாளிகைமாட்டுத்
  தோழுமாகுமல்லாமல் (மரத்)
ஆறுதலைமுறையானாலும் வயிரம் அறுகாக்
  காட்டுமரங்களாலும் பெருந்தேரா
நிறைந்தபனையாலும் பொருள்
  சேர்ந்திடாமற் செலவதனாலும் வீசும்
சூறைக்காற்றை பொறுத்து
  மறல்கிலம் வெறுத்துந்
தோற்றுங்கிளைவித்தாலும்
  போற்றவாரு மென்மேலும் (மரத்)

விருத்தம்.

தசரதராமர்நாளில் தரித்தபொன்மரமேயாளல்
உசிதமென்றுரைப்பக்கல்லா லுயர்மகாசபையோர்கேட்டுச்
சசிபாலுவானைஞ்சொப்பாநக்கதோவென்னவிறைவுக்
[illegible]சமகிமைகாட்டிச் சாற்றலுற்றதுகல்லாலே.

தரு-இராகம்-சஹானா-தாளம்-ஆதி

பல்லவி.

மகிமையிக்னமுந் சொல்லுவோம் பொன்மரத்தானல்
வாழ்க்கைபெற்றுயர் வெல்லுவோம்

அநுபல்லவி.

ஜெகமுழுதுஞ்செழிக்குந் தேக்குநாக்கைப்பழிக்குஞ்
சிராயுதவியாவுந் தாராளமாய்க்கொழிக்கும் (மகி)

சரணங்கள்.

சின்னஞ்சிறுவயதில்முன்னம் வில்லைவளைத்த
  சிதாராமனைப்போலுங் கரிகால்சோழனைப்போலும்
பின்னுமுக்ரபாண்டியன் விக்ரமார்க்கனைப்போலும்
  பெற்றதுண்டுவல்லிபீமன் கிரீடியைப்போலும் (மகி)

வீரனுஞ்சூரபத்மன் ராவணனன்றதைப்போலும்
வெட்டவெட்டத்தளிர்க்குமஷ்டதிக்கும்பாலும்
பாரிற்சிந்துமிரண்யன் தாருகனிறந்தம்போலும்
பத்துலக்ஷமாய்வேரில் விர்த்தியாகின்றதாலும் (மகி)

சந்த்ரனுக்குடல்குற்றந் தனதனுக்குக் கண்குற்றஞ்
சதுர்முகதேவனுக்குத் தலையொன்றிலாதகுற்றம்
இந்த்ரனுக்கெங்குங்குற்ற மியமன்காலினிற்குற்றம்
எக்குற்றங்களுமற்றங்கெல்லாச்சிறப்பும்பெற்ற (மகி)

விருத்தம்.

பொற்புவாய்த்திருக்கு மந்தப்பொன்மரம் பூமியாள
உற்பவமானதென்று மூபரொப்பிலாததென்றும்
அற்புதகல்லால்கூத்தி யனந்தரியாயங்கள்காட்ட
விற்பனகுருந்தாவிருக்ஷம் விளம்பலுற்றதிங்கிப்பாலே.

தரு-பல்லவி-இராகம்-காம்போதி அல்லது கமாஸ்-தாளம் ஆதி.

பல்லவி.

எல்லாவுதவியுஞ்செய்யும் பொன்மரத்தைப்போல்
திரிகூடாசலம்விட்டுத் தென்காசிசித்ராநதி சேர்ந்துபூசா
கிரியதனைமுடித்தோம் முன்குறுமுனியால் வடகாசிசெய்யக்கண்
அரியைசிவன்றேகத்தில்வைத்தசங்கரநாராயணனையாழ்ந்து[போம்
கரிவலமாய்வந்தநல்லூர்பால் வண்ணநாதர்பதங்காண்போம் வாரீர்.

இ-ம் அபூர்வம்-தாளம்-ஜம்பை.

பாலசுந்தரதீர்த்தம் சிவகங்கைதீர்த்தம்திக்குப்
　பாலகரால்பூசித்த பால்வண்ணரழகே
பால்வண்ணரிருந்தபுதர் பாண்டியனுல்யானைவலம்
　சிலமுடனேசெய்து சிவகணமாயினதே
அடைவுடனேதொழுதோம்திரு வாவினன்குடி முருகர்
　படைவீடொன்றுக்கினர்மாம் பழம்பெறுததனல்
படைவேலன்மாங்கனிக்காய் பரமனிடக்கோபிக்கக்
　கடியபழம்நீயென்ன கமழ்பழுகியிதுவே
தேவதீர்த்தம்அமுத தீர்த்தம்சண்முகாதி
　தீர்த்தம்சூரியதீர்த்தம் சேர்ந்தாடுகின்றோம்
தேவேந்திரன்பிரமன்அக்கி நித்யானந்தன்
　சேரர்கோன்முதலாக சேவைநாளும் அர்ச்சித்தார்.

விருத்தம்.

வேலவன்வாழ்பழநிமலைபணிந்தபின்னர்
　மீண்டுமேவையதனில் பூசைசெய்து
ஆலவாய்ப்பதிசேர்ந்து சிலநாள்தங்கி
　அறுபத்துநான்குவிளையாடல்பார்த்துக்
கோலதிருப்பெருந்துறையும் மாயோன்மேவுங்
　குறுங்குடியும்கடம்பன்வாழ் வள்ளியூரும்
சாலவுநன்மலர்தூவிப்பணிகள்செய்து
　தாழ்ந்துராமேசநல்லூர் சூழ்ந்தோமாதோ.

இராகம்-அடாணா-ஆதிதாளம்

கண்ணிகள்.

சாற்றுஞ்சடாயுதீர்த்தம் தங்குமராமேசநல்லூர்
　சார்ந்திருப்பதுந்தாம்ப்ரவர்ணி நதியே
போற்றும்பாண்டவர்வரம் பெற்றமணைவர்கள்
　பொருந்தப்பெருகுந்தாம்ப்ரவர்ணி நதியே
சிதம்பரத்தில்நடனம் பாண்டியராஜன்கண்ட
　செப்பறைசேர்தாம்ப்ரவர்ணி நதியே
உதகம்()சித்ராநதிசேர் மருதூர்குதிரைமுகம்
　ஒழித்தருளினதாம்ப்ரவர்ணி நதியே
முனிவருந்தேவரு முறையிட்டுவரம்பெற்ற
　முறப்பநாடுசேர்தாம்ப்ரவர்ணி நதியே
கனிவுடன்கயிலையை வருவித்துக்காட்டின
　கயிலைபுரஞ்சேர்தாம்ப்ரவர்ணி நதியே
கருவூர்த்தேவர்க்குக்கர்த்தன் காக்ஷியளித்ததிருக்
　காந்தீஸ்வரஞ்சேர்தாம்ப்ரவர்ணி நதியே
திருவலிங்கபுரம் சேர்ந்துமூன்றுகோடி
　தீர்த்தங்கள்மூழ்கும்தாம்ப்ரவர்ணி நதியே
பிர்ம்மாதக்கன்வேள்வியில் பெற்றகுற்றம்ஒழித்த
　பிரமேசம்சார்ந்த தாம்ப்ரவர்ணி நதியே
துர்மதிதாரைதன்னைச்சேர்ந்த தோஷத்தைச்சந்திரன்
　தொலைத்தசோமேசம்தாம்ப்ரவர்ணி நதியே

() உதகம்-உதகாதி.

௬. புனலரசன் பூசித்து வாழ்த்துஞ்சேர் நமக்கும்
பொருநர்தம்பெற்றதுந் தாம்ப்ரவர்ணி
மனம்போல்பச்சைநாயகி கலந்தால்மணம்புரிந்த
மந்திரேஸ்வரஞ்சேர் தாம்ப்ரவர்ணி

௭. மறவாமல் துர்வாசர் என்றும்பூசிக்குந்திரு
வாசநல்லூர்சேர் தாம்ப்ரவர்ணி
உறுதியாக்கிந்பத்வம் ரோமேசரிஷிபெற்ற
உரோமேஸ்வரஞ்சேர் தாம்ப்ரவர்ணி

௮. நம்பன்சேரன்மாதேவி புடைமருதூர்கோடீசம்
கன்னகாரஞ்சேர் தாம்ப்ரவர்ணி
அம்பாசமுத்திரம்பாவநாசமூலகாரம்
அனந்தஸ்தலஞ்சேர் தாம்ப்ரவர்ணி

விருத்தம்.

கற்புடையானாகினியார் காதலோடு
கணவனைத்தாங்கிச்செல்லக் கழுவிலுற்றுக்
குற்றுயிராயிருந்தமாண்டவ்யர்சாபக்
கூறினார்விடியுமங்கலைநீயென்ன
சற்றும்விடியாதிருக்கச்சபித்தாள்மாது
தபோதனர்தேவர்கள் பூசித்திருவர்சாபம்
அற்றதிருக்களக்காடுவிட்டோம்சூழும்
அனேகாநேக கோணமலைக்கிணைகாணேமே.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

௧, வந்திருந்தோம் திருக்கோணமாமலையைச்சாம்பசிவாவென
மஹாஜனமூழ்கிப்பூசித்தோம் அன்பர்க
அந்தரத்தோர்களும் போதாயனரிஷியும் அசுரர்களும்
அர்ச்சித்துநற்பேறடைந்தனர் அன்பர்க

௨. மாசியவரனென்னும் அசுரன்பூஜைசெய்த திருக்கேதீச்சர
வலஞ்செய்திறைநிவாழ்த்தினோம் அன்பர்க
ஆசிபோன்றருளீர் பூஞ்சோலைதீர்த்தம் பிருகுரிஷிமுதல்
அதிருக்கருச்சித்தியருளினை அன்பர்க

கடம்பன்குன்றுதோறுடல்களிலொன்றும் கதிர்காமம்
சுரந்தர்வன்சாபங்கடிந்த அன்பர்களே
தடந்தனில்யானைவணிதனைப்பிடிக்கக் கதிர்வேலோவெனச்
சாமிவேடராய்ரக்ஷித்தார் அன்பர்களே
வேலன்ப்ரணவ சொரூபமாயிருந்து அனந்தமான
விளையாடல்களைச்செய்தனர் அன்பர்களே
மேலும்தேவர்கள் மேவிமலர்தூவும் இத்தலமகிமை
விரித்துரைத்திடில்பெருகும் அன்பர்களே

விருத்தம்.

கதிர்காமவேலோன்பொன்னார் கழலிணைப்பணிந்தபின்னர்
கதிதருமஸ்காந்தமான்மிய கதையினைக்காலக்ஷேபம்
விதிமொடுவிடுதோறும் மேவும்நல்யாழ்ப்பாணத்தில்
அதிகபொன்பெற்றுதில்லை அம்பலம்அணுகலுற்றோம்.

இராகம்-சாவேரி-சாப்புதாளம்

கண்ணிகள்.

பார்புகழ்திருக்கோயில்புலியூர்முதலிய
பலநாமம்பெற்றிருக்குஞ் சிதம்பரமே
சிர்மலிபுலிச்சுரதீர்த்தம்புலிமடு
திருப்பாற்கடல் வாய்ந்த சிதம்பரமே
அனந்தம்வியாக்ரபாதம் நரகேசரிபர
மானந்தக்கூபஞ்சேர் சிதம்பரமே
தினந்தினந்தேவர்கள் மூழ்குமனேகதீர்த்தம்
தில்லைவனமுஞ்சார்ந்த சிதம்பரமே
வத்ரியந்த்ரமுனிவர் புத்ரர்வியாக்ரபாதர்
மலர்கொய்துபூஜித்த சிதம்பரமே
அத்ரிமுனிவர்பால் சேஷன்பதஞ்சலியாய்
அவதாரஞ்செய்தருளும் சிதம்பரமே
துன்மதன் துச்சகன் தும்ரெரிசனனுதி
தொழுதுமோக்ஷம்பெற்ற சிதம்பரமே
உன் னும்வ்யாசர் சூதர்சௌனகர்சுகமுனி
உடமன்யரும்பூஜித்த சிதம்பரமே

௫. திருத்தேர்தானோடத் தூர்ந்து தேந்தனூர்க்கூழுண்டு
தில்லைவாணர்காட்டின சிதம்பரமே
உருக்கமாய்த் திருக்கோவை யுரைத்தவாதவூரரால்
ஊமைப்பெண்பேசின சிதம்பரமே

௬. இல்லாளொடு நீலகண்டர் நீரில்மூழ்கி
இளமைப்பருவம்பெற்ற சிதம்பரமே
நல்லநாளைப்போவார் அக்கினியிற்குளித்து
நற்பதவியடைந்த சிதம்பரமே

௭. கூற்றுவர்கணம்புல்லர் கோச்செங்கட்சோழற்குங்
கொடுத்தருளினமுத்தி சிதம்பரமே
போற்றுங்கணங்களாகத் தில்லைவாழந்தணரை
புகலிசம்பந்தர்கண்ட சிதம்பரமே

௮. திருமாளிகைத்தேவர் முதலோர்திருவிசைப்பா
திருப்பல்லாண்டுபாடின சிதம்பரமே
பெருமைசேர்மறைஞான சம்பந்தர்உமாபதி
பேறுபெற்றதுமிந்தச் சிதம்பரமே

விருத்தம்.

சிதம்பரத்தின்மகிமையெலாம் விரித்துரைத்துச்
சிவகங்கைமுதலான தீர்த்தமாடிச்
சதமாகசெம்பொன்னையாழ்ப்பாணத்தார்
தந்ததெலாமந்தணர்க்குத்தானஞ்செய்து
பதவிதருஞ்சிவபூஜைதனோடத்திப்
பஞ்சசபைதிருமூலட்டானம்வாழ்த்தி
இதம்பெறநம் சேக்கிழார்கோயில்கட்டி
யெம்பிரான்வேட்களத்தை யிறைஞ்சலுற்றேம்.

இராகம்-ஆரபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

க்ஷேத்திரயாத்திரை சித்தித்ததுவிப்போது
ஜென்மந்தான் இனியேது

அநுபல்லவி.

தோத்திரத்தொடுமலர் தூவிநாரதமுனி
சுகம்பெறப்புவிபுகழ் திருவேட்காந்தனி (

சரணங்கள்.

தேனொத்தமொழியார் கனகாம்பிகைபாகன்
திருநெல்வாயிலிது தேவர்பூஜித்தார்மேலே
வான்மீகமஹாரிஷி மலர்கொண்டர்ச்சித்தபால்
வண்ணாநாதேஸ்வரர் மகிழ்திருக்கழிப்பாலை (க்ஷேத்)

ஆச்சாபுரமெனு நல்லூர்ப்பெருமணம்
அன்றுஞானசம்பந்தர் ஆற்றினர்கல்யாணம்
நாச்சியாரொடுமணம் நண்ணுமெண்ணருஞ்சனம்
நற்சிவலோகங்கொள்ளை பெற்றதுப்ரமாணம். (க்ஷேத்)

எரிந்தவிடத்தின்றெய்யை எவராவல்வெளவும்போதங்
கிருள்போய்ப்ரகாசிக்க எலியின்குற்றத்தைத்தள்ளி
விரிந்ததிரிபுவனமும் அவ்வெலியாளமா
வெலிச்சக்ரவர்த்தியாக்குமெழில்மயேந்திரப்பள்ளி (க்ஷே)

விருத்தம்.

தேவேந்திரன்வைத்தசீகாழிப்பூந்தோட்டம் செழிப்புற்றோங்கக்
காவிரிநீர் அகஸ்தியர் தங்கமண்டலத்தைக்கணபதியால்கவிழ்க்கப்பெ
தீவரமாயதிற்பிரிந்தகொள்ளடநீர் மூழ்கிசிவபூஜைசெய்து [தி
ஆவலொடுதென்முல்லைவாயிலெனு மரன்பதியையுறைந்திறைஞ்சுவோம்.

இராகம்-அசாவேரி-சாப்புதாளம்

கண்ணிகள்.

இறைஞ்சினோம்தென்முல்லை வாயிலிதுசுதர்மன்
இந்திரன்பூஜித்தஸ்தலம் பக்தர்களே-இப்பால்
எழில்பராசரிஷிஅர்ச்சித்தகலிக்காமூர்
எனும்அன்னப்பேட்டைகண்டோம் பக்தர்களே
இக்ஷேத்உபமன்யர்அர்ச்சித்தசாய்க்காடு
என்னும்சாயாவனம் பக்தர்களே- எங்கள்
இயற்பகைநாயனார் இல்லாள்தனைஅளித்து
ஈசனருள்முத்திபெற்றார் பக்தர்களே
பட்டினத்துப்பிள்ளையும் இயற்பகையும்சேர்ந்த
பல்லவனேசுரமிதோ பக்தர்களேபின்னும்
பல்லவராஜனும் அர்ச்சித்தகாவிரிப்பூம்
பட்டினப்போற்றினோம் பக்தர்களே

வெள்ளையானைபூஜித்த வேதாரண்யம்என்னும்
வெண்காடுபரவினோம் பக்தர்களே-கொன்றை
விருக்ஷந்தன்னைப்புகழ்ந்து திருக்குளதீர்த்தமும்
ஸ்வேததீர்த்தமும்பார்த்தோம் பக்தர்களே

விருத்தம்.

தொண்டர்த்தமைச்சாபத்தால் நுரத்திநின்ற
பசுவையரன்சூலந்தன்னால்
தெண்டித்துவைத்திருக்கும்திருக்கோயில்காட்பிட்டும்
திறக்கநேர்ந்து
கண்டவுடனேபிள்ளைகொன்றைமரமாகியவெண்
காட்டைவிட்டு
எண்டிசையோரும்புகழும் இணையற்றசீர்காழி
யேத்தலானோம்.

இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்

பல்லவி.

காழிமாநகரிதுகயிலாயம்போன்றதுகாசூிமஹாஅரிது

அநுபல்லவி.

ஆழிசூழுமுலகில் அனந்த அற்புதம்பெய்த
அரியஞானசம்பந்தர் திருவவதாரஞ்செய்த (காழி)

சரணங்கள்.

க. சொல்லும்மஹாப்ரளய காலத்துமித்தலம்
துதிசெய்துசுரர்வாழத் தோணியாகமிதக்கும்
அல்லும்பகலயன்மால் அமரர்கோவுமர்ச்சித்து
அடையஎண்ணினவரம்தடையில்லாமல்பாலிக்கும் (காழி)

உ. தாயகாவிரிநதி இந்த்ரன்பூந்தோட்டத்தால்
சோழநாடுமுழுதும் பாய்கின்றதெப்போதும்
மேய்ஞானசமபந்தர் அவதாரஸ்தலமென்று
மிதிக்கஅஞ்சிஆரூரர்வெளியினின்றேயோதுங் (காழி)

ங. விளங்கும்பிரமபுரம் தோணிபுரம்சண்பை
வெங்குருபூந்தராய் வேணுபுரம்புகலி
பலிக்குபுறவங்கொச்சை கழுமலம்சிரபுரம்
பன்னிருநாமங்கள் பகரும்வேதமலி (காழி)

ச. கணாநாதானுர் கதிபெற்றஸ்தலமீது
கடிகமழும்பிரமம திவ்யதீர்த்தம்சித்திக்க
மணமலிமலர் தூவிப் பிரமபுரேசனை
வள்ளல்சம்பந்தனை வாழ்த்தப்பெற்றோமிக்க (காழி)

விருத்தம்.

சிவபாதவிதயர் தவஞ்செய்துசமண் காடொழிக்கச்சிறந்தசைவம்
அவனியிலெங்குஞ்செழிக்க அறுமுகனைத்தன்மகனாயளிக்கக்கேட்டு
கவுணியர்கோத்திரந்தன்னில்வந்த சம்பந்தர்சீகாழிவிட்டுத்
தீவமிகுதியால்காட்டுப்பள்ளி மாநகரமெனுந்தலத்தைச்சார்ந்தோம்.

இராகம்-கருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

தோத்திரஞ்செய்வோம் யாத்திரைவந்து சொர்க்கத்திலுய்வோம்

அநுபல்லவி.

மாத்திரைப்பொழுதேனும மனங்கசிந்தேதாவி
மாதேவனைவணங்கி வாசனைமலர்தூவி (தோத்)

சரணங்கள்.

அடங்காதவிருத்ராசுரனையிந்த்ரன் அழித்திட்டதோஷம்
தொடர்ந்திங்குந்திரிய பொன்னுலகத்தோர் சேர்ந்தார்சந்தோஷம்
அடர்ந்தகாட்டுப்பள்ளிக் கமரரெல்லாம்வந்து
அர்ச்சனைசெய்துஇந்த்ரன் ஆளப்பெற்றார்மகிழ்ந்து (தோ)

அண்ணல்சுந்தரர்க்குக் கட்டமுதத்தை அருள்குருகாவூர்
கண்ணுவாகஸ்தியர் அர்ச்சித்தகோலக் காவினில்வெருசீர்
பண்ணுடுஞானசம் பந்தர்நற்றமிழ்பாட
பரமன்பொற்றிருத்தாளம் அருளினர்கொண்டாட (தோ)

இப்போதுவலமாய் வந்தோம்வைத் தீஸ்வரன்கோயில்
ஒப்பிலாரத்னவேல்இந்திரனுக் குதவியவாயில்
அப்பன்முத்துக்குமர சாமிசடாயுசம் பாதிருக்வேதமும்
அர்ச்சித்தஇத்தலம் (தோ)

விருத்தம்.

தாவும்புள்ளிருக்குவேளூர் தலம்பிரிவுறவருந்தித்
தேவர்கோன்பூஜைசெய்த திருக்கண்ணார்கோயிலேத்தி

ஆவலோடயனர்ச்சித்த அரன்கடைமுடியினிறஞ்சி
மூவர்தேவாரம்பெற்ற முதல்வின்திருவூர்காண்கின்றோம்.

இராகம்-உசேனி-சாப்புதாளம்

கண்ணிகள்.

மாயோன்பிரகதை மயக்கந்தீர்ந்திட ஹரஹரவென
மகாலக்ஷ்மிபூஜைபுரிந்த தின்றி யூரே
ஏயர்கோன்கலிக்காம ருயிர்பெற்றும்நர்தர்க்குவிலகி
இடபதேவர்யிருக்கும்புள் கூரே
அருட்சோமநாதாண்டர்முனைபடுவார் அவதாரஸ்தலம்
ஆனதீரேர் அர்ச்சித்தனர்மக வான்
வருணராஜன்பூஜைசெய்த அன்னியூர் ஆப்தசகாயர்
வருணதீர்மூழ்கி வந்தித்தவர்க்கருள் வான்
கல்யாணசுந்தரேஸ்வரர்வேள்விக்குடி ராஜபுத்ரனுக்குக்
கடவுள்செய்தனர் கல்யாண வேள்வி
நல்லம்மான்போலன்கிர்கொள்பாடியில் தப்பதிகளை
நகர்க்கழைத்ததும் கட்டளைக் கேள்வி
மன்மதன்வந்தித்த அருள்வள்ளநாதனை ஆலம்பூஜித்து
வைசியனும்மணஞ் செய்தமணஞ் சேரியே
மன்மதனையீசன்நெற்றிக்கண்ணிலெரித்த திருக்குறுக்கை
மார்க்கண்டர்தலம்பெய்தோமலர் மாரியே
பூதவடிவாயெதிர்வந்தசக்தனை யெதிர்ந்த இந்திரன்
பூஜிக்கப்பொறுத்த கருப்பறிய லூரே
காதலோடனுமார்ச்சித்தருக்குக்காவாய்கொளிபுத்தூர்
கண்ணன்மாணிக்கம்வைத்து வந்தித்த ஊரே
ஆலாலம்கசன்கண்டத்தில்காண்பிக்க பட்டணிபடிக்கரை
அமுதநீர்த்தத்தில் ஆடியேவாழ்த்திவந் தோம்
மேலாம்ஓமாம்புலியூரில்புலியால் வில்வமரமேறி
வேடன்விழித்துப்பூஜிக்கக்கேட்டுகந் தோம்
காறைட்டுமுன்னூர்சிவதீர்த்தமூழ்கிப் பதஞ்சலிமுனி
கனிந்துபூஜித்துக்கண்டார்அரன் காக்ஷி
மேனான் துர்வாஸர்சாபத்தால்கந்தர்வன் நாரையாயிருந்து
வேண்டினகொள்கைக்கு நாரையூரே சாக்ஷி

தடமிகுந்தநம்பியாண்டார் நம்பிபொல்லாப்பிள்ளையார்
தம்மைநிவேதனம்உட்கொள்ளச்செய் தனரே
அபயகுலசேகரசோழராஜன் நம்பியாண்டாரால்
அடங்கன்முறைதனை டக்கமிழ்ந் தனரே

விருத்தம்.

நம்பியாண்டார்வந்த நாரையூர்வாழ்
நாதனையும்தயபனையும் பணிந்துவந்தம்
கும்பர்அமிர்தங்கடைய நுரையெழும்ப
உய்விக்கும்அமிர்தம் எழும்பதியாயிந்திரன்
நம்பனையர்ச்சனைசெய்த கடம்பூர்கண்டு
நற்றிருப்பந்தணைநல்லூர் தேவகன்னி
சம்புவைபூசனைபுரிந்ததென்றறிந்து
தரிசித்துத்திருக்கஞ்சனூர்சார்ந்தோமே.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

கண்ணிகள்.

மாவிரதியருக்கு மணமகள்முடிதந்த
மானக்கஞ்சாறர்ஸ்தலம் இஷ்டர்களே
காவிரிநதியிதோ அக்நி அயனிந்த்ரன்மார்க்
கண்டரும்பூஜித்தார் இஷ்டர்களே
மூன்றுகோடிரிஷிகள்பூஜித்துவரம்பெற்ற
முதல்வன்திருக்கோடிக்கா இஷ்டர்களே
ஈன்றுள்மங்கலக்குடி யிறந்த () அடியவரை
எழுந்துவரச்செய்ததங்கி இஷ்டர்களே
தாடகையென்னும்அம்மை மாலைசாத்தமுடியைச்
சாய்த்ததிருப்பனந்தாள் இஷ்டர்களே
நீடுங்கயிறுபூட்டி கலையரிபூப்பவீசன்
நேர்நின்றருளினர்காண் இஷ்டர்களே
தூய்மைதிருவேரகமென்னுஞ்சுவாமிமலை
தொழுதுவந்தோமிப்போது இஷ்டர்களே

அரசிறைப்பொருளை திருப்பணிக்குச் செலவழித்த அரசன்தண்ட
லாளரான அடியார்.

ஆயபர்பாலையுகந்துகொடுவாள்வடுவைகாட்டும்
  ஆய்ப்பாடியிறைஞ்சினேம் — இஷ்டர்களே
செவ்வேள்பூஜைசெய்து ஆயுதம்பெற்றதிருச்
  சேய்ஞலூரைத்தொழுதோம் — இஷ்டர்களே
செவ்வையாகப்பூஜித்தச் சண்டேஸ்வரநாயனார்
  திருஅவதாரஸ்தலம் — இஷ்டர்களே
திருந்துதேவன்குடி தேவர்களும் அஸ்வமும்
  சீராய்ப்பூஜித்ததென்பர் — இஷ்டர்களே
மருந்தையுயிர்ப்பிக்கமுக்க நந்தருளும்வியலூர்
  வலம்வந்து துதிசெய்தோம் — இஷ்டர்களே
மன்னுங்கொட்டையூரிது மார்க்கண்டர்முதலான
  மகாரிஷிகள்பூசித்தார் — இஷ்டர்களே
இன்னம்பர்ஸ்தலமிதோ எந்தும் அகஸ்தியர்க்கு
  இலக்கணஞ்சொன்னதென்பர் — இஷ்டர்களே
சுந்தரபகர்தார் பூசித்தபுறம்பயம்
  தொழுதுதோத்திரஞ்செய்தோம் — இஷ்டர்களே
சந்தமலிவணிகன்சர்ப்பத்தாலிறந்திட
  சம்பந்தர்உயிர்தந்தார் — இஷ்டர்களே

விருத்தம்.

திருப்புறம்பயத்தைவிட்டு சீராரும்விஜயமங்கை
அருக்கனதீர்த்தமாடி அண்ணலார்தமைப்பணிந்தே
திருப்புறம்வில்வதீர்த்தம் விளங்கியவைகாவூரில்
குருக்களால்விடையும்பெற்று குரங்காடுதுறைசேர்ந்தோமே.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்
கண்ணிகள்.

அழகியசடைமுடி காதனைப்பூசித்தார்வாலி-சகல
அண்டங்கள்ரக்ஷிக்கும் அன்னையுமதித்தாள்பொற்றுவே
ஆப்தசகாசர் வாழ்திருப்பழனம்அப்பூதி-யடிகள்
அடைந்தனர்பதவியை அப்பர்திருவிமலதி
காமையிலேகொய்த மூத்தவனைசர்ப்பந்தீண்டி-யவர்
மாய்ந்திடஎழுப்பினர் பதிகமோதியப்பர்வேண்டி
செம்பொற்சோதிநாதர் உறையுந்திருவையாறு-தரும
தேவதையுநந்தி தேவரும்பெற்றனர்பேறு

பொன்மரத்து நாடகம்.

நெய்யாடியப்பர் உறைகின்றதிருநெய்த்தானம்-வியாக்ரம
நேசமாய்ப்பூஜித்ததாரும்புலியூர் ஸ்தானம்
பரிந்திந்திரனும்பூஜை புரிந்ததிருமழபாடி-தொழுது
பழுவூர்போற்றினேம் கொள்ளிடநதிநீராடி
அண்ணலார்யானையை யுரித்துப்போர்த்ததிருவழுவூர்-தேவி
அக்னிசொரூபமாய் தரிசனம்அருளியகாவூர்

விருத்தம்.

காவூரைத்தொழுதுவந்து அன்பிலாலந்துறையைக்கண்டுவாழ்த்தி
வானோர்தம்மிறையபன்மால் வாகீசனெனும்முனிவு மகிழ்ந்தர்ச்சித்து
மேனாளில்அருள்பெற்ற தறிந்துமாந்துறைபாற்றுத்துறையும்வேண்டி
ஆனைபூஜித்தஜம்பு கேஸ்வரத்தையனேவோரும்அணுகலானோம்.[டி

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்
கண்ணிகள்.

அகிலாண்டநாயகிபாகன் ஜம்புகேஸ்வரர்
  ஆக்ஷிகொண்டதிந்த — ஆனைக்காவே
புகழ்சேர்சனுமைக்கு ஞானோபதேசத்தைப்
  பொருந்தவுரைத்ததிந்த — ஆனைக்காவே
பராசரமாமுனி சோமன்கௌதமராதி
  பலபேர்அர்ச்சித்ததிந்த — ஆனைக்காவே
சராசரம்புகழ்காவல் வனமும்அப்புலிங்கமும்
  தழைக்காவிரியுஞ்சார்ந்த — ஆனைக்காவே
நம்பன்னகஜம்புமுனி கயிலாயந்தனிலீந்து
  நாவல்கனியுண்டான் — ஆனைக்காவே
சம்புஉமிழ்ந்தவித்தை ஜம்புமுனியருந்தி
  ஜம்புநாவல்வளர்ந்த — ஆனைக்காவே
என்றும்பிரியாமலே ஜம்புமரத்தடியில்
  இறைவன்எழுந்தருளும் — ஆனைக்காவே
நன்றுய்யானைசிலந்தி பரவியேசாம்ப்ராஜ்யம்
  நல்கப்பெற்றதிந்த — ஆனைக்காவே
அரசன்தேவியாரத்தை திருமஞ்சனவழியாய்
  அத்தனணிந்ததிந்த — ஆனைக்காவே
திருநீறிட்டான்மதிலை நீற்றைக்கூலியாய்த்தந்து
  சித்தர்கட்டினதிந்த — ஆனைக்காவே

விருத்தம்.

பரவிநேனும்ஆனைக்கா வைந்நீலிரத்நசபைபரிந்துவாழ்த்தி [சித்தல்
மார்கள்அரம்பையர்வாழை மரங்களாய்ப்பாறையின்மேல் குழிந்தார்ச
வாலொடுமொர்க்கண்டராவிறந்தகயன்எழுந்ததையும்வந்தாவுக்
வாசருக்குக்கட்டமுதுஅருளினதும் அழிந்திப்பால்அநூகிறேமே.

தரு இராகம்-கேதாரகௌளம்-ரூபகதாளம்

பல்லவி.

பூவலஞ்செய்துமற்றுள்ளஸ்தலமும் பூஜித்துப்போற்றல்சற்றவமே
செவபுண்யங்கைகூடவும்எண்ணமீடேறவும் புவியாளவுஞ்செயுஞ்சிவ [மே.

அநுபல்லவி.

மூவராலமைந்தநீலக்கருளியதேவாரம்
முழுமையும்ஓதித்துதித்தோமிந்தோம்
காவலன்பெண்ணூக்குக்குமரகண்டவசி
காழிவேந்தன்தீர்த்ததிருவாசிக்கிணையிலி (பூவல)

சரணங்கள்.

இத்தலம்பாச்சிலாச்சிராமமென் றிம்பரியம்புகின்றனரே-கனரர்
இவரல்லர்பிரானில்லையோவென்றோதி யிச்சித்தபொருள்பெற்றனரே
அத்தன்மேல்ஐயடிகள்காடவர்கோன் அருளியவெண்பாசிறே-இந்த
ஆரண்யவிடங்கர்நீலகண்டேஸ்வரர் அம்மைவிசாலாட்சியாரே [வாய்
வித்தகர்அகஸ்தியர் ஈவடிவமாய் விரும்பியர்ச்சித்தார்சங்கோய்-மலை
தக்கையிக்கயிலர்ச்சித்தசேலம் சார்ந்தபம்பாவம்நசித்திடுங்காலம்

மாணிக்கமாமலையிரத்நகிரியே வாட்போக்கியெனுந்தலமே-ஆர்ய
மன்னவன்மாணிக்கமெங்குங்கிட்டாமல் வந்திங்குபோற்றினபலமே
தானுவருசரியபீர்த்தொட்டிநிறைக்கச் சரியிலாவிரிஜலமே-வாளால்
சாகளத்தனிக்கத்தடுத்துமாணிக்கந் தந்தவனைவந்தோம்வலமே
வேணவரம்பெறலாமகடம்பந்துறை
விளம்புமவாட்போக்கி ஈங்கோய்மலையின்ற
ணைப்பெற்றேமிந்நாள் காலையுச்சிமாலை
கண்ணுவர்க்குக்காகுநி கடம்பினில்மேலை (பூவலஞ்)

பொன்மயிலாம்பிகைபாகன்பராய்த்துறை பெரிதுமியபராய்மரமே
எவரும்புகழும்அகண்டகாவிரியாற்றில் பூஜித்துப்பெற்றேமுரமே

தென்பராய்த்துறையாய்சிவலோகமெனதிருவாதவூரர்தோத்திரமே
அன்றி-செய்தனரர்ச்சனையிந்த்ரன்தனதன் சிறந்தசப்தரிஷிஸ்திரமே
மன்னவன்சோழநாட்டின்கண்ணுதித்து
வந்தனன்கற்குடி மலையைமதித்து
முன்னவன்அசரீரியருளியவண்ணம்
முடித்தார்சிவார்ச்சனை உச்சியில்திண்ணம் (பூவலஞ்)

பஞ்சவர்ணநாதர்திருமூக்கீச்சரம்பணிந்தோமிந்துறையூரே-பிரமன்
பரிவாலர்ச்சிக்கபொழுதொருமேனியாய்பார்த்திரதப்பெயரிட்டாரே
தஞ்சமிகும்புகழ்ச்சோழனவதாரஸ்தலமே-ராஜதானிசிறே-யிப்பால்
சார்ந்தோம்திரிசிராப்பள்ளியில்ராமரும் தாழ்ந்தர்ச்சனைசெய்தாரே
மஞ்சுசேர்செவ்வந்தி மாதலத்திருந்து
அருளித்துப்பயிர்செய்த மலர்களைத்தெரிந்து
அஞ்சாமலரசன் அடைந்ததனாலே
அழித்ததுமண்மாரி பெய்துமுன்னாலே (பூவலஞ்)

புத்ரதவஞ்செய்தாரதற்குத்தன்பெற்ற
புதல்வியைதனகுத்தன்மணந்து-வாழும்
போதுசுக்ரவாரம்மாதூர்ப்பூதேசரை
போற்றுவள் அந்தப்பெண்ணுணர்ந்து
செத்தனன்தந்தையப்பெண்கர்ப்பமெனத்
தெரிந்துதாயுங்காயங்கொணர்ந்து-வர
சிறிதும்வற்றமல்காவிரிவெள்ளத்தால்
இங்கத்தனள்வடபால்அணைந்து
அத்தனார்தாய்போல் மருத்துவம்ஆற்ற
ஆறுவடிந்தபின்தற்றாயுந்தோற்ற
மற்றிருதாய்மாரை மருளவேயார்க்கு
மறைந்தனர்தாயுமானவர்காக்க (பூவ)

விருத்தம்.

திரிசிரபுரங்கடந்து சிற்றெறும்புகளுமாலும்
காதாஷணர்தம்மாலும் கண்டுபூஜித்துவேண்டும்
வரம்பெற்றஎறும்பீச்சரை வாழ்த்தியேசோழராஜன்
தரிசித்தசெங்கண்டுக் காழ்ந்திப்பால்சூழ்ந்தோம்பாரீர்.

இராகம்-பைரவி-அட தாளம்

பல்லவி.

இந்தஸ்தலத்தின்எல்லைக்குச்சமுத்ரு எப்படி மிகிமில்லை

அநுபல்லவி.

சந்ததமும்பிரம்ம சுந்தரேசர் மகிழ்ந்து
சார்ந்தநெடுங்களத்தின் சாம்பவியைப்புகழ்ந்து

சரணங்கள்.

செவ்வந்திமலர் இளையாள் விரும்பராஜன்
திருடித்தந்தனர்நாள்
அவ்வாசியரில்மூத்தாள் தன்பாகத்தை
யரனுக்கணிந்தாள் பன்னாள்
செவ்வையாயம்மாதை மண்மாரியில்ரக்ஷித்த
தியாடியப்பர்மேலைக் காட்டுபள்ளிபேர்பெற்ற (இந்த)

தஞ்சைமாநகரீது இத்தலம்போல ஜகத்தினில்கிடையாது
விஞ்சைவித்தைகள்சேது இமயவரை விர்த்திக்கிங்கர்மாது
கஞ்சமலர்கொண்டிந்த்ரன் கனசோழன்குறுமுனி
நெஞ்சுருகியர்ச்சித்து நேர்ந்தார்நல்வரந்தனி (இந்த)

காவிரிநதிதீரம் பகீரதன் கங்காநதியில்சாரம்
தேவர்களாரவாரம்இங்கே விட்டுச்செல்வதென்றால்விசாரம்
ஆவலாலரன்மாயோன் ஆட்சிகொண்டவித்தலம்
அரசாண்டசர்ப்போஜி அமைத்ததர்மப்ரபலம் (இந்த)

விருத்தம்.

அழகுதேர்தஞ்சைமாநகரம்விட்டிங்
காத்மநாதேஸ்வரர்தாம்அமரும்ஆலம்
பொழில்சேர்ந்திங்கிதிலஷ்டவசுக்கள்நாகம்
பூஜித்ததறிந்துபின்னுமந்நாளீசன்
மழபாடிவரமறந்தனையோவென்று
வந்திருந்தவன்றொண்டர்க்குணர்த்தக்கேட்டு
வழிமிருந்தகாந்தர்வராலேபுஷ்ப
வனஞ்செய்யவாமளிபூந்துருத்திவந்தோம்.

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அப்பர்சுவாமிகளிங்கு அடியார்களுக்கமுது
அருத்திக்கொண்டிருக்கையி

ஞானசம்பந்தர் மதுரையில்சமண்காட்டை
ஒழித்திங்குவரவெதிர் சென்று
வாகீசரால்முத்துச் சிவிகைதாங்கப்பெற்று
வந்தவன்னைவள்ளலார் கண்டு
வேகமாய்ச்சிவிகைவிட்டிறங்கியப்பரை
விரும்பித்தழுவிக்கொண்ட துண்டு
வைரவக்கடவுளால் பிரமனடுச்சிரத்தை
வாங்கின திருக்கண்டி யூரை
கைலைபோலுங்கண்டு காவிரிநதியாடிக்
கழல்பணிந்தோமடி யாரை
உலவாஅமுதளித்த திருச்சோற்றுத்துறையீசன்
ஒப்பிலாம்பிகைக்ருபை தெரிந்து
புலவன்முதலானோர்கள் பூஜித்துவரம்பெற்ற
புண்யஸ்தலந்தன்னைப் பிரிந்து
வந்தினநந்திநேம்வேதி குடியைமுன்பூஜித்து
வரம்பெற்றனர்வேதங்கள்விதி யோன்
இந்ததென்குடித்திட்டை காமதேனுகௌதமர்
இறைஞ்சக்ருபைசெய்தனர்பதி யோன்
ஆலந்தரித்தோர்வாழும் திருப்புள்ளமங்கைகண்டு
அண்டினேம்ஐயம்பேட்டை யென்னும்
மேலாஞ்சக்கரப்பள்ளி சயந்தனும்வானோரும்
விரும்பிமலர் தூவியே பின்னும்
பூஜித்தார்கருகாவூர் ராசிகள்சந்த்ரன்
புவியையுரிந்தபாலைத் துறையே
நேசித்தோம்திருநல்லூர் அப்பர்க்குச்சிவதீட்சை
நினைப்பின்படிசெய்தனர் இன்றையே
அமர்நீதிசிவப்பேறடைந்தவ்தலத்தைவிட்டு
அஞ்சலிசெய்தோம்சத்தி முற்றம்
உமையவளோர்காலம்பூஜித்துஅநுக்ரஹம்
உற்றநாயிக்குபெற்றோம் வெற்றம்

விருத்தம்.

சத்திமுற்றந்தொழுது திருப்பட்டீச்சரம் அடுத்துத்தரிசித்தேத்தி
முத்துப்பந்தரைவெப்பகற்றணித்தருள சம்பந்தமூர்த்தியார்க்கன்
குத்தனார்பரதமொடுபூதங்களிட்டத்தனுப்பி அடியார்கையில்
சித்தித்தமகிமைதனைத்தெரிந்துபழையாறைவந்துசேர்ந்தோமாதே.

இ-ம் அபூர்வம்-தாளம்-ஜம்பை.

தக்கன்பெண்கள் இருபத்தெழுவரை சந்த்ரன்மணஞ்செய்தும்
மிக்கரோகணியிடத்து விருப்பம்வைத்ததனல்
சந்த்ரன்தேய்ந்திடசாபம் தக்கன்தரஅதைஒழித்து
வந்துபணியாறைத்தனில்வளரவரம்பெற்றான்
கௌரியம்பிகைகண்ணவன் காதல்கொண்டவடதளியைக்
கௌசிகமாமுனிபரவிக் காக்ஷிகொண்டனரோ
மானைக்கிரயவிறைவைய மறைத்துவைத்தவமணர்களை
ஆனைகொண்டிடவப்பர் அண்ணலைக்கண்டாரே.

விருத்தம்.

பன்னலஞ்சேர்வடதளியைப்பிரிந்தங்காவூர்ப்
பசுபதீச்சரம்பணிந்துவந்தோமிப்பால்
முன்னம்அமிர்தங்கடைந்துநுரையாற்செய்த
மூத்தோனைபாத்மார்த்தமாகஇந்த்ரன்
தன்றுவேடாரவலஞ்சுழியாயிங்குச்
சார்ந்தகாவிரிநதிபாதாளஞ்செல்ல
உன்னும்வரகண்டமுனிசுழியில்வீழ
ஓடுநதிசேர்கும்பகோணம்வந்தோம்.

இ-ம்-தன்யாசி-ரூபகதாளம்

கண்ணிகள்.

மங்களநாயகிபாகன்கும்பேஸ்வரர்
மருவிவாழ்ந்திடுங்கும்பகோணம் ஹேம
மாமுனியும்ஆதிசேஷன் முதலியோரும்
மகிழ்வோடர்ச்சித்தகும்பகோணம்
பிரமன்ஸ்ருஷ்டிநிமித்தம்மேருவில்வைத்தகும்பம்
ப்ரளயத்தில்வந்த கும்பகோணம்-பின்னர்
பெம்மான்வேடவடிவாய் அக்கும்பத்தைச்சேதிக்க
ப்ரபஞ்சந்தந்தருள் கும்பகோணம்
குடம்உடைந்ததினின்று ம்அமிர்தஞ்சூழ்ந்ததுஐந்து
குரோசனைஎல்லை கும்பகோணம் உடைந்த
கும்பம்இருந்தவிடத்தமுதந்திரட்டிவந்த
கும்பேஸர்தலங்கும்பகோணம்
ஹேமபுஷ்கரணிஎன்னும் காயகதீர்த்தம்

இலங்கப்பெற்றிடுங்கும்பகோணம்-அன்றி
இப்பால்திருக்குடந்தை கீழ்க்கோட்டம்சிங்கசினைர்
இரவிபூஜித்தகும்பகோணம்
கௌரிபூஜித்து மணஞ்செய்ததிருக்குடந்தை
காரோணம்சேர்கும்பகோணம்-அமுத
கதிரோன்மாந்தாதார் சத்தியகீர்த்திமுதலோர்
கலிந்துபூஜித்த கும்பகோணம்
கங்கையமுனைசிந்துவாணி நர்மதைகோதை
காவிரிவரும்கும்பகோணம்-பாபங்
கழித்திடமாமகாலத்தில்ஹேமபுஷ்
கரணியில்மூழ்குங்கும்பகோணம்.

விருத்தம்.

அங்கம்பொற்றாமரைப்பூ வாகியகும்பகோணந்
தங்கியேஸ்தலத்தின்மான்மியஞ் சம்பூர்ணமாகக்கேட்டு
மங்கலமணந்தஞ்செய்து மகிழ்ந்தாரகேஸ்வரம்போய்
எங்கணாற்சேக்கிழாரை யிறைஞ்சியேமருதூர்சேர்ந்தோம்.

இ-ம் ஆனந்தபைரவி-ஆதிதாளம்

கண்ணிகள்.

மருதப்பருக்கேவிபு மருதனிருக்கும்வாபுரம்
மெய்யார்ச்சுனமென்னுமரு தாரே
முருகக்கடவுள்யானை முகவனும்மைவரும்
முகுந்தனும்பூசித்தமரு தாரே
சந்த்ரன்த்வாதசாதித்தர் சப்தகன்னிகையருஞ்
சரஸ்வதியும்பூசித்தமரு தாரே
இந்த்ரனயிராவதம் அஷ்டதிக்குப்பாலகர்
எழில்வேதங்களர்ச்சித்தமரு தாரே
பசும்பல்குமுருத்திரர் அஷ்டநாகங்களும்
போதவும்போற்றினமரு தாரே
மமைதங்கு முப்பத்துமுக்கோடிரிஷிகளும்
மலர்தூவிப்பேறுபெற்றமரு தாரே
சீரரும்வரகுண பாண்டியர்கொலைப்பழி
தீர்த்தருளியவிடைமரு தாரே

ஊரறியவரசன் மனைவியைமருதப்பர்
உட்கொண்ட திருவிடைமரு — தூரே

எள்ளோசோரன் தின்னப் பிறவிதீருமென்றவன்
எச்சிலரசனுண்டமரு — தூரே

கள்ளன்மேல்நீறுகண்டு விடுத்துர்தவனைகட்குக்
காசும்பொன்னுந்தூவியமரு — தூரே

கோயில்முற்றந்தனிலே நாய்காடமிருந்ததைக்
கோமானெடுத்தவிடைமரு — தூரே

பேயவேப்பம்பழங்கள் சிவசொரூபமென்று
வேந்தன்விதானஞ்செய்தமரு — தூரே

விருத்தம்.

வரகுணபாண்டியராஜன் தலைஓட்டைத்தொழுத
மருதூரைவிட்டுத்
திரிபுவனம்பரவி அதிலவ்வரசன்மடுக்கர்தைத்
தீர்க்கக்கேட்டு
மிருகண்டர்சுக்கிவன் வழிபட்டுதென்குரங்காடு
விரும்பிவாழ்த்தி
வருணராஜன்நிலக் குடிபணிந்துமௌனமேலும்
வணங்கலுற்றோம்.

இ-ம்-நாட்டை-ஜம்பை-தாளம்.

வானோரும்சூரியரும் மலர்தூவிவரம்பெற்ற
வைகன்மாடக்கோயில் வாழ்த்தப்பெற்றோமே
கோளேரிராயபுரம் என்னுந்திருநல்லமிது
மேனுளில்உமையவள் விண்ணோர்பூஜித்தார்கள்

விருத்தம்,

காசியில்வாசஞ்செய்த காலத்தில்சமருடைத்த
பாசத்தைநாசஞ்செய்து பரிசதீக்ஷையும்புரிந்த
பூஜாவிசேஷதர்ம புரமடாதீனம்வாழுந்
தேசிகர்தமைப்பணிந்து திருக்கடவூர்சேர்ந்தோமே.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அமுர்தகடேஸ்வரர் வீரட்டானேஸ்வரர்
அபிராமித்தாய்வாழும் — கடவூரே-இந்த
அகிலந்தன்னிலெங்கெங்கும் அமையாமகிமையெல்லாம்
அடங்கப்பெற்றதுந்திருக் — கடவூரே

அருந்தவத்தால்வந்த மார்க்கண்டமாமுனி
அருச்சனைசெய்த திருக் — கடவூரே-எமனை
அனுராகவன்னம்உதைத்து அம்முனிவனாயிசன்
ஆதரித்தருளிய — கடவூரே
பொன்தேடிப்புண்ணியம் புரிந்தகாரிநாயனார்
போற்றப்பெற்றதிருக் — கடவூரே-பத்தி
பூண்டிருந்ததாலியைக் கொடுத்துக்குங்கிலியங்கொண்ட
புகழ்க்கலயனார்வதலம் — கடவூரே
பிரமனோர்ப்ரளயத்தில் மறந்தசிருஷ்டியைப்பெற்ற
பிறமயானஞ்சேர்திருக் — கடவூரே-இரு
பிரமதீர்த்தம்காசித் தீர்த்தமாடித்தொழுது
பிரியலாமேனுந்திருக் — கடவூரே

விருத்தம்.

சந்திரனென்பின்றவித்யா தரனுக்குப்பொல்லாச்சாபம்
இந்திரனுலேசேர்ந்தன் சேனைக்குமிலாய்ப்பூஜை
சந்ததஞ்செய்துமுன்போல் சீரமேகிடைக்கப்பெற்ற
நந்திகோழம்பம்விட்டு நாகைக்காரோணம்வந்தோம்.

தரு-இ-ம் காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

நாகைக்காரோணப்பெருமை உரைத்திட
நம்போலிகட்கும் அருமை

அநுபல்லவி.

தேகத்துடனேயோக புண்டரீகரிஷியைத்
திருவுருவிற்கலக்கச் செய்தருளியவிந்த — (நாகை)

சரணங்கள்.

க. நித்யதீர்த்தங்கடல் தீர்த்தம்தேவதீர்த்தம்
நிறைந்தமுனிவர் தீர்த்தம் சர்வதீர்த்தமும்புல்ல
சத்தரிஷிகள்விஸ்வாமித்ரர் அகத்திஸ்வரர்
சதுர்முகனியமனுந் துதிசெய்தர்ச்சித்தால்ல (நாகை)

உ. வாசுகிமுதலியநாகங்கள் கன்னிகைகள்
மாலும்வணங்கப்பெற்ற நீலாதாக்ஷியிறையை
நேசமாய்முசுகுந்தச் சக்ரவர்த்தித்தொழுது
நீங்காப்ரம்மஹத்தியை நிக்ரஹித்தவனுறை (நாகை)

௩. பாண்டியன்க்ஷயநோய் பற்றறவாங்கின
பாதகுலத்தான் அதி பத்தர்தோன்றியோங்கின
ஆண்டகைசுந்தரர்க்கு யாவுந்தந்துதாங்கின
அருஞ்சாபமிந்த்ரன்விகுர்தலுக்குமுற்றும்நீக்கின (நாகை)

விருத்தம்.

கண்டரேகேளீரந்த நாகபட்டணத்தைவிட்டு
மண்புகழுறுசோமாசி மாறனார்மகநாள்தன்னில்
பண்புறவுதித்தஅம்பர் பெருந்திருக்கோயில்பார்த்தோம்
விண்புகழ்திருவாரூரை யேகினோந்தாவினேமே.

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. பூர்வதவப்பயனால் போற்றப்பெற்றோமிந்த
புனைந்தனிற்சிறந்த ஆரூரே
தேரழகுக்குரிய க்ஷேத்ரம்எனச்சகல
தேவர்களும்புகழும் ஆரூரே

உ. அல்லியங்கோதைபாகன்புற்றிடங்கொண்டவர்
ஆக்ஷிபெற்றதிரு வாரூரே
வெல்லும்பரவைவிடு தூதுநடந்த வீதி
விடங்கப்பெருமான்வாழும் ஆரூரே

௩. அயன்மாலிந்த்ரன் வசிஷ்டர்கௌதமர்முதல்
அருச்சனைசெய்ததிரு வாரூரே
இயல்சேர்கமிநந்தி கமலாலயதீர்த்தம்
எடுத்துவிளக்கெரித்த வாரூரே

௪. சிவாஞ்ஞையின்படி பரவையைச்சுந்தரர்
திருமணஞ்செய்ததிரு வாரூரே
அவனருளாற்திருத்தொண்டத்தொகையென்றெண்டர்
அருளிச்செய்ததுமிந்த வாரூரே

௫. அழகேலந்தியசுவாய்த்தேரில் எம்மையன்று
யகப்படச்செய்ததிரு வாரூரே
கழற்சிங்கர்செருத்துணைவிறன்மிண்டர்தண்டிசர்
கதியடைந்திட்டதிரு வாரூரே

௬. அசிதரிஷிமுதலோர் அர்ச்சித்தவல்மீகேசர்
அரனெறிஸ்தலம்சார்ந்த ஆரூரே
உசிதமாய்த்துர்வாசர் வருணன்தொழும்பரவை
உண்மண்டளியும்வாய்ந்த வாரூரே

விருத்தம்.

சொருமநீதிச் சோழராஜன்
சிறந்தபுதல்வனைத் தேரிலிடறச்செய்த
ஆரூரின்திருவிளையாடலைத் துங்கேட்டிந்
தகண்டகமலாலயதீராடிப்பூஜை
யோராகடத்தியபின்மூலட்டானம்
ப்ராகாரஸ்தலமுதலாய்ப்பணிந்தபின்னர்
ஆராதுயமாவிடாயகிளைவாய்ந்த
அற்புதவாவடுதுறையை யணுகினேமே.

இராகம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்

பல்லவி.

திருவாவடுதுறை சேவித்தோம்இன்னமுந்
சிவஸ்தலயாத்திரையேன்

அநுபல்லவி.

மருவாருங்காவிரி சிவகங்கைதீர்த்தமும்
வலஞ்செய்கின்ற அரசமரமகிமையுமமைந்த (திரு)

சரணங்கள்.

மாநிலாமணியிசா செய்பொற்றியாகேசனா
வாசவன்வானோர்கள் மஹரிஷிகள்நிறைந்த (திரு)

உ. ஈங்கைஞானசம்பந்தர் தந்தையாகம்புரிய
வீசனுலவாக்கிழி நேசமாயருளிய
௩. அரசின்கீழ்திருமூலர் மூவாயிரவருடம்
அருந்தவஞ்செய்துமூவாயிர மந்த்ரமருளிய
௪. கைலாயபரம்பரை நமச்சிவாயமூர்த்திகள்
கனஞ்சேர்மடாலயக் காக்ஷிக்கடல்நிறைந்த

விருத்தம்.

கடல்சூழ்ந்தவுலகந்தன்னில் கைலாயமுதலாவுள்ள
வடநாடுதுருவந்தொண்டைமண்டநாடுமம்பாண்டி
குடமலைநாடுகொங்கு குன்றுச்சோணாடும்பார்த்தோம்
மடபதியருளும்பெற்றோ மகிமைசேர்காஞ்சிவந்தோம்.

இராகம்-நாதநாமக்கிரிகை-ஆடிதாளம்

கண்ணிகள்.

க. எழிலேகம்பர் அடியார்பக்ஷம்-இதோ
இமையவர்தொழும் ஜோதிவிருக்ஷம்
செழுமைமேவிய ஆம்ப்ரவிருக்ஷம்-வேண்டும்
சேவிக்கக்கண்கள்பத்துலக்ஷம்
உ. கண்டோம்திருமேற்றளி சாஸ்வதம்-ஒறிக்
காரைக்காட்டால்தீவினை அதம்
உண்டிங்கநேகதங்காவதம்-ஒண
காந்தன்றளியிறுண்டுசிரிப்பதம்
௩. பிறவாஸ்தானஞ்சேவித்தெல்லோரும்-பிறவிப்
பெருங்கடலைத்தாண்டினோம்பாரும்
பிறவாஸ்தானங்கண்டு வாரேறும்-புகழ
எமபயத்தைத்தொலைத்தோம் வாரும்.
௪. சம்புவீரட்டகாசம் இங்ஙனம்-சத்த
தானத்தில்துதித்தருள் பெற்றனம்
கும்பேஸ்வரத்தில் திவ்வியதரிசனம்-புண்ய
கோடீஸ்வரத்தைப் புகழ்ந்திறைஞ்சினம்
௫. அனந்தபத்மநாபேசம்போற்றிச்-சிவாத்
தானம்பணிந்தோம் பூஜையாற்றித்

தனந்தருநகரீசனுசாற்றிச்சாந்தா
சயம்போற்றினோம் மலர்தூற்றி.
குறிப்புத்தொண்டர்முத்தீசமீதே-காமக்
கோட்டம்வணங்கினோமிப்போதே
கறுத்தமணிகண்டேசர்பாதே-கனி
கண்டேசத்தாலொழிந்தோம் தீதே.

விருத்தம்.

உலகுய்யவறம்வளர்த்தகாமக்கோட்டம்
ஒப்பிலாமுத்தீசம்பணிந்தோமிப்பால்
அலகிலாமகிமைசேர்சர்வதீர்த்தம்
அஸ்வநதிக்ஷீரநதிபருகிதீர்த்தம்
இலங்கியகம்பாநதியோடிந்திரதீர்த்தம்
இவையெலாம்ஆடிமகிழ்ந்தீடிவந்தோம்
மலமகற்றும்வருணீசம்முதலாவுள்ள
மழுவேந்திஸ்தலமற்றும் வணங்குவோமே,

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

க. பூதநாதன்வாழும்புண்யஸ்தலங்கள் அபாரம்-காஞ்சி
புரத்தினில்சர்வமும்பூஜித்தாலுண்டோ விசாரம்
உ. நால்வரைலக்ஷமும் நாம் வணங்கிக்கரை ஏற-ஞாமோ
நற்றவமிங்குள்ளார் பெற்றதெவ்வளவெல்லை கூற
௩. வந்தோம்வருணீசம்வாயுலேசமவரா கேசம்-நாம்
வணங்கித்துதித்தோம்வசிஷ்டேசம்வன்மீகேசம்
௪. அழகான ஆபிராவ்தீசம்மஹாகை லேசம்-இது
அத்ரீசம்மஹாருத்ரேசம் ஆகஸ் தீசம்
௫. ஏகபேசம்லக்ஷ்மணேசம் ஆனந்தருத் ரேசம்-வந்
தேற்றினோம்தர்மேசம் நான்முகன்தீசம் சகஸ்திரேசம்
௬. பைரவேசம் பலராமேசம் பாதா ளீசம்-பஞ்ச
பாண்டவேசம் கௌசிகேசம் கர்ணேசம் சித்தீசம்
௭. வலம்புரீசம் வன்னிகேசம் மாதரம ரேசம்-இது
மச்சேசம் கற்சீசம் மஹாலிங் கேசம்

விருத்தம்.

கன்னிகைபந்தரித்தோர்வாழுங் கற்கிசமுத்திரக்கண்டோம்
மங்கலதீர்த்தமாடி வணங்கினேங்குமரகோட்டம்
துங்கஞானப்பிரகாச ஞானபட்டாதிஸ்தலத்தித்
தங்கினேமந்தகேசம் சாற்றுவோம்போற்றுவோமே.

இராகம்-புன்னாகவராளி-அடதாளம்

கண்ணிகள்.

க. மந்தகேஸ்வரம்வழூர் மன்மதேஸ்வரம்
அந்தகேஸ்வரம் அருணாசலேஸ்வரம்
உ. இராவணேஸ்வரம்வீர ராகவேஸ்வரம்
இரேணுகேஸ்வரம்திரிபு ராந்தகேஸ்வரம்
ங. காரோணீஸ்வரம்இது கச்சபேஸ்வரம்
சூரிரேஸ்வரம்சொல்லும் ஜுரஹரீஸ்வரம்
ச. கங்கணீஸ்வரம்அம்பி காபதீஸ்வரம்
எங்குமேபுகழ்எழில் ரிஷபேஸ்வரம்
ரு. காணுதகாக்ஷிகச்சி காட்டின்சாக்ஷி
நீணுலகாக்ஷியிது நிரந்தரம்மாக்ஷி

விருத்தம்.

சூரியேஸ்வரமாதிபோற்றிக்கொண்டோம்
துதிசேர்புண்ணியகோடிமஞ்சள்தீர்த்தம்
மாரிபொழிகாயாரோகணமும்வேக
வதிநதியோடளவிலாத்தீர்த்தமூழ்கிச்
சிரிதாகப்பத்தி அன்புகொண்டு
சிவபூஜாகிரியையெலாம் நடத்திக்கொண்டோம்
பேரியல்சேர்ந்திடுமாகாளிசமாதி
பேணுவோம்கண்கொண்டு காணுவோமே.

இராகம்-தர்பார்-ரூபகதாளம்

கண்ணிகள்.

க. மாகாளீஸ்வரஞ்சென்னிருடினேம்-வளத்து
வாக்ஷீஸ்வர்பாதங்கொண்டாடினேம்

யோகாசாரியதளியைநாடினேம்-அனுதருதரேஸ்வரத்தில்
அன்பாய்க்கூடினேம்
உ. ஆதிபதிசஞ்சேர்ந்து பாடினேம்-சந்திர
மவுலீசம்வணங்கிக்கூத்தாடினேம்
வேதபுரீசனைநாம்தேடினேம்-வீயிர
வீசம்பரவிவினைஜாடினேம்
ங. இதுவேகண்ணீசர்துயரோட்டும்-பிர
ணீசம்பிறவிநோயைவாட்டும்
சிதம்பரேஸ்வரங்காக்ஷிகாட்டும்-இஷ்ட
சித்திசந்திருவருள்கூட்டும்
ச. தக்ஷேஸ்வரஞ்செல்வத்தைக்கொடுக்கும்-ஜலந்
தரீசம்எமவாதையைத்தடுக்கும்
விஷ்ணேஸ்வரத்தில்நன்மை அடுக்கும்-குளி
கேசம்முதலாய்வினை ஒடுக்கும்
ரு. நல்லகாஞ்சிமகத்துவமே சொல்லும்
நாலைலக்ஷம்க்ஷேத்திரமே
எல்லாஞ்சேவித்துத் தோத்திரமேசெய்தோம்
இனிதவஞ்செய்யநாம் பாத்திரமே

விருத்தம்.

தீர்த்தயாத்திரைசெய்தே அன்பத்தாறு
தேசம்வலம்வந்துசிவஸ்தலங்கள்யாவும்
பார்த்துவருட்பாவைத்தும்பாடிவந்தோம்
பாராளுந்தொண்டலங்களையும்பணிவோமென்றே.
ஆர்த்திபெர்நால்வேதம்பரவிச்சூழ்பொன்
னரங்கமுதலாமெங்கள்விஷ்ணுதேவர்
சீர்த்திபெறுந்திவ்யதிருப்பதிகளான
க்ஷேத்திரயாத்திரைகல்லாஞ்செப்புந்தானே.

விருத்தம்.

பெரியாழ்வார்பேயாழ்வார் பூதத்தாழ்வார்
பெருமைதங்கியபொய்கைமங்கைநாதன்
திருமழிசைக்கோன்மதுரகவிசொற்பாணன்
திகழ்தொண்டரடிப்பொடியார்சேரர்மன்னன்

அருளிருந்தநம்மாழ்வார்கோதைகூரத்
 தாழ்வாரெம்பெருமானாராளவந்தார்
வரமார்வேதாந்ததேசிகர்பொற்பாதம்
 மணவாளமுனிகள்பதம்வணங்கிச்செல்வாம்.

இ-ம்-பைரவி-ரூபகதாளம்

கண்ணிகள்.

௧. பரமபதமென்னும் வைகுண்டம்பரவினேம்
 பரமபாகவத — கோஷ்டிகளே
விரஜாநதி அந்த ரங்கவிமானங்கூ
 விளவிருக்ஷமும்விளங்கும் — கோஷ்டிகளே

௨. அனந்தகருடவிஷ்வக்சேனர்நித்யர்களுக்கு
 ஆவதுண்டுபிரத்தியக்ஷம் — கோஷ்டிகளே
தினம்பிரம்மாதிகள்தொழும் க்ஷீராப்திநாதன்வாழ்
 திருப்பாற்கடல்மேவுங் — கோஷ்டிகளே

௩. ஆறுமாதம்அமரர் அர்ச்சித்திடும்பதரி
 ஆஸ்ரமம்அணுகினேம் — கோஷ்டிகளே
வீறுசேர்சிதள உஷ்ணகுண்டமூழ்கி
 வெவ்வினையொழித்தோம் — கோஷ்டிகளே

௪. இலந்தைமரத்தின்கீழ் நாரணுக்குமந்த்ரோப
 தேசஞ்செய்தஸ்தலம் — கோஷ்டிகளே
நலந்தங்கியசாளக்கிராமம் சக்ரகண்டகி
 நதிமகிமையுங்கண்டோம் — கோஷ்டிகளே

௫. அய்யன்மோக்ஷினியாகி அசுரரையடக்கிப்ரேம
 மாதியர்க்குப்ரத்தியக்ஷம் — கோஷ்டிகளே
தெய்வநைமிசாரண்ய திவ்யவிசாரத்தீர்த்தம்
 மூழ்கித்துதித்தோம் — கோஷ்டிகளே

௬. சரயுநதியருகில்ராமன் அரசுசெய்த
 ஸ்தலமாம் அயோத்திநகர் — கோஷ்டிகளே
பரதாழ்வாருக்குநம் தவர்முனிவர்கட்கும்
 ப்ரத்யக்ஷமொடுப்ரத்தியக்ஷம் — கோஷ்டிகளே

இலங்குஞ்சிங்கவேள்குன்றம் என்னும்அகோபிலம்
 இலக்ஷ்மிநரசிம்மன் — கோஷ்டிகளே
நலந்தருமிந்த்ரதீர்த்தம் பாபநாசதீர்த்தம்
 நாரசிங்கதீர்த்தங்காண் — கோஷ்டிகளே
காதகஹிரண்யனை ஒழித்தவன்ப்ரஹ்லாதனைக்
 காத்தருள்புரிந்தனர் — கோஷ்டிகளே
தீதகல்கங்கைக்கரைக் கண்டாக்கமங்கள
 தீர்த்தமாடித்தொழுதோம் — கோஷ்டிகளே
பணிந்தோம்ஸ்ரீகிருஷ்ணன் சத்தியபாமைருக்மணிதேவி
 பகரும்வடமதுரை — கோஷ்டிகளே
துணிந்துயமுனைவெள்ளம் மூழ்கித்திருவாய்ப்பாடி
 தொழுதுபிரபந்தஞ்சொன்னேம் — கோஷ்டிகளே
கோவர்த்தனதீர்த்த மிந்த்ரதீர்த்தம்வாய்ந்த
 [illegible]லதிருப்பிரிதி — கோஷ்டிகளே
ஆவினுட்டனேகிருஷ்ண மூர்த்திதிரௌபதிக்கு
 அருள்செய்யுந்துவாரகை — கோஷ்டிகளே
ஸ்ரீநிவாசன்வாழும் திருவேங்கிடமலை
 சேவித்துவாழ்த்தினேம் — கோஷ்டிகளே
ஆனந்தநிலயம் விமானம்சேஷாசலம்
 அடங்காமகிமையுண்டு — கோஷ்டிகளே

விருத்தம்.

புண்டபாற்கடலாதிவேங்கட மீறுளதலம்பன்னிரண்டுங் [ன்னில்
கண்டிறைஞ்சிவடநாட்டைக்கடந்துதொண்டைநாட்டிக்காஞ்சித
தன்னிலாயமாலதலங்கள்பதினான்குமிந்த யற்றத்தலங்களெட்டுங்
கண்டபிட்டுகொடுசேர்ந்திரண்டுக்ஷேத்திரயாத்திரையுஞ்செப்பும்

இராகம்-காம்போதி-அடதாளம்

கண்ணிகள்.

யோகநரசிம்மர்சோழசிங்கபுரம் — பார்த்தோம்-இவண்
திருநாரிகைப்போதிருந்த அவர்க்கன்பு — சேர்த்தோம்
செல்வந்தருந்திருவல்லிக்கேணி தன்னைச் — சேர்ந்தோம்-நாம்
சேவித்துச்சேஷவிமானம்பார்த்துக்குறை — தீர்த்தோம்

டு

அருகில்திருமயிலாபுரியில் பே — யாழ்வார்-செவ்
வல்லிமலரில்சநய காலில்வந்து — வாழ்வார்
நித்யஸ்தலசயனத்துறை வார்கடன் — மல்லை-எங்கள்
நிலமங்கைத்தாயாரை நினைத்தாற்பிறவி — நோயில்லை
புவனம்போற்றும் பூதத்தாழ்வாரிங்கவதரித் — தாரே-எந்தை
() புண்டரீகமஹாரிஷிக்குப் பிரத்தியக்ஷமா — னாரே
கல்யாண தீர்த்தங் கரியைத்தருமிட — வெந்தை-மார்க்
கண்டர்க்குப்பிரத்தியக்ஷமாகின்றார் அயன் — தந்தை
நீலமுகில்வண்ணனார்நீர்வண்ணர் நீர்மலை — குறுகிநோம்-திரு
நின்றவூரில்பக்தவச்சலனைத்தாழ்ந்து — வாழ்ந்தோம்

() புண்டரீகரிஷிக்கெந்தைபிரத்யக்ஷம்.
பூதத்தாழ்வாரவதாரம்-பெரிய
பூமியிலித்தலம்அர்த்தசேதுவான
புண்யமகத்வம் விஸ்தாரம்
அண்டர்புகழ்பொய்கை தாமரைபுட்பம்
ஆயிரதளமெம்பிரான் கண்டு
அழகியசூரிராப்திநாதனுக்காமென
அம்முனிக்காசை அபாரம்
அண்டாசமுத்திரம் புண்டரீகமுனி
அடிபோடிறைக்கலுற்றனர் தன்னந்தனி
உண்டியுறக்கமுமில்லையில்லை
ஒருநாளோவெருநாளாய்வடியவேயில்லை
வளையாதிறைக்கையில் க்ஷீராப்திநாதன்
மறையவராய்தரிசனமே-தந்து
மஹாபசியென ஆகாரம்யாசிக்க
வருந்தினமாமுனிமனமே
திரைகடல்தன்னை மறையவரிறைத்துத்
திஷ்டாந்தரங்காட்டினர்கனமே-வெகு
தீவரமாயொரு யோசனைதூரந்
திரைகடல்வடிந்தது அனமே
விரைவாயின்னகர மாமுனியோடி
மிக்கஆகாரங்கொணர்ந்தனர் தேடி
வருதற்குமுந்தியே சயனித்தாரெந்தை
மார்பிதில்தாயாரைவைத்ததும் விந்தை

மார்க்கத்தில்மழிசையில் மழிசையாழ்வார் அதிவாரம்-மகா
மகதம்கிருட்ணபக்ஷம் பிரதமைமகம் அவதாரம்
வீக்ஷாரண்யவீரராகவ எவ்வுளூர்கண்டோம்-மிக்க
விளங்குந்திருப்புட்குழியில் தங்கிநுறைவிண்டோம்
அண்டரெலாம் போற்றும் தொண்டைவளநாட்டைப் பிரிந் [தோம்-பெண்ணை
ஆற்றில்நீராடி நடுநாட்டெங்குந்தேடித்திரிந்தோம்
சந்த்ரவிமானஜூந்திரபுரம்சார்வாச-நிறைச்
சார்ந்தகெருடநதியைக்கண்டோர் பாபம்நாசம்
இரிகேத்ரநாரியாய்தெய்வநாயகர்நிற்பதேதோ எங்கள்
தேசிகர்சீர்க்குசெப்பவல்லான்சேஷன்றனோ
திருவிக்ரமனென்னும் ஆயனார்கோவலூர்து-இருக்கை
தீர்த்தமாடிநின்றதிருக்கோலங்கண்டோமிப்போது
சௌரிபவிச்சக்ரவர்த்திக்குப் பிரத்தியக்ஷக்ஷேத்ரம்-இதைத்
தாண்டிமலையாடுசார்ந்து செய்தோம்மல்லைஸ்தோத்திரம்

விருத்தம்.

பெண்ணைநதிக்கோட்டைப்பிரிந்துமலை
நாடுவந்துபிரபத்ரமென்றும்
மண்ணையுண்டமால்வாழ்வினிமுதலா
மனந்தபுரம் வரைத்தலங்கள்
என்றுதற்கரிய மகிமைகள்வாய்ந்த
பதின்மூன்றுமிலாதுசிவாழ்ந்திட
புண்ணியத்தைதக்கொள்ளகொண்டபொற்பு றுயரத்
திரைகல்லால்புகழுமேலும்.

இராகம்-கல்யாணி-சாப்புதாளம்

கண்ணிகள்.

இன்றவர்தன்னிலைவர் து நின்றதுறைப்பனைநாம்
எண்ணினேனும் துடிப்பண்ணினேனும் —
அன்றயனுக்குப்பிரத்ய க்ஷமானவர்தைகதாயீ
நமக்களிப்பரோ உண்மைதெளிப்பரோ.

மதன்றுமாங்கதராஜன் மகிழ்ந்திருக்கத்தான்ம்
வர்த்தித்தோம்திருப்பிறந்தோம்

உதயமால்கிற்றுவக்கோட்டில் உய்யவந்தப்பெருமாள்
சேருளைத்தோம்வினையைக்களைந்தோம்
பெருமைசேர் ஆதிகேசவப்பெருமாள்வாட்டாற்றின்
மேன்மைபேசினோ மிடனாவிசினோம்
அருமையாம் பாம்பணையப்பன் அருளும்வண்வண்சேர்
வணங்கல் ஆரியம்திறந்தகாரியம்
வல்லவாழ்கோலப்பிரானை வணங்கிநாராயணன்
நாவாய்வாசமே செய்யநேசமே
தலையாம்லக்ஷ்மிக்கும் கஜேந்த்ர னுக்கும்
பிரத்தியக்ஷமான தாமே தயார்போமே
செங்குன்றூர்மையாரப்பனைச்சேவித்துமாயப்
பிரானைத்தேடினம் புலியூர்பாடினம்
மங்களஞ்சேர்மூழிக்களம் அப்பன்காட்கரை
ஸ்தலத்தில்வாழ்குவோம் வலஞ்சூழ்குவோம்
இந்த்ரகல்யாணவிமானந்தங்கும் வண்பரிசாரந்தான்
எழுமையேமிக்க செழுமையே
சந்த்ரனிந்த்ரனுக்குக் காக்ஷித்தந்த அனந்தபுரத்தைத்
தாவினோம்பாண்டிமேவினோம்.

விருத்தம்.

மலைநாடுதனைவிட்டுப்பாண்டிவளநாடெய்திமகிழ்ந்துகோஞ்சர்
தலையாரமதுரகவிஸ்தலம்பணிந்துதமிழ்வேதம்ஓதினான
வலையால்மால்சிக்கமனத்தடைத்து மாலிருஞ்சோலைமலையீருகக்
கலையாரும்க்ஷேத்திரங்கள்பதினெட்டின் யாத்திரையைக்கழறுங்கள்

இராம்-பியாகடை-ரூபகதாளம் [லால்.

கண்ணிகள். [ம்

வையையுறும்பாண்டிவளநாட்டில்கோளூர்வைத்தமாநிதிருர்தோ
கோளூர்வல்லித்தாயால் வாழ்ந்தோம்
நற்குறுங்குடிவந்துநாம்கண்டோம்மலைமேல் நம்பிபார்கடல் நம்பி
கிடந்தாம்பினின்றிருந்த நம்பி
குளந்தைதனில்மாயக்கூத்தனிடங்காத்துக் குளந்தை தாயைப்பார்த்
தோம்
பெருங்குளதீர்த்தம் ஆர்தோம்

வரகுணமங்கையில்வாழ்விஜயாசனர்வரகுணவல்லிசெல்வி
பாதம் வணங்கிப்பெற்றோம் கல்வி
வந்தோம்ஸ்ரீவைகுந்தம்கண்டோம்கள்ளப்பிரான்வைகுந்தநாதம்மா
ஸ்ரீவைகுந்தவல்லியம்மா
மகரநெடுங்குழைக்காதர் திருப்பேர்வாழ்த்திவலமாக
நாம் வந்தோம் இனிபோக
போவோம்புளிங்குடிகாசினிவேந்தர்பொன்னுலகிவாரே
பரிபூரணராவாரே.
வானமாமலை ஆனவரமங்கைவானமாமலைதன்
இந்த்ரன் வாழ்த்தும் தேவாரதன்
வருணன்வாயுவிந்த்ரன்மகிழும்தொலைவில்லிமங்கலம்தேவப்பிரான்
நல்லவாழ்வளிப்பார் எம்பிரான்
ஆழ்வார்திருநகரா திப்பிரான் நம்மாழ்வார் அவதாரம்
நமக்கருள்வதவர் பாரம்
ஆண்டாள்ரங்கமன்னனூர்வடபத்ரசயனர் ஸ்ரீவில்லிபுத்தூர்
பெரியாழ்வார் அவதாரவூர்
வையம்புகழ்கூடலழகர்தென்மதுரைமகிழ்வரகுணவல்லி
வகுளவல்லி மதுரைவல்லி
காளமேகப்பெருமாள் க்ஷீராப்திபுஷ்கரணிதிருமோகூர்
தண்காலப்பன் தண்காலூர்
புல்லாரண்யஸ்தலம்தர்ப்பசயனமாம்கல்யாணபுல்லாணி
வருணன்போற்றிப்பெற்றான் காணி
சத்யகிரிநாதர் திருமெய்யம்தீது சத்யகிரியிதுவே
உய்யாசத்யதீர்த்தம் அதுவே
யீது திருக்கோட்டியூர்சௌமியநாராயணரெக்காலம்
நடந்திருந்தாடிய கோலம்
மாலிருஞ்சோலைமலையழகர் மாவலங்காரஅன்னைதமை
அம்மாவந்தித்தோம் நங்கடமை

கொச்சகம்.

பாண்டிவளநாட்டுத்திருப்பதிபதினெட்டும்பணிந்தும்
தாண்டிவருதற்குமனஞ்சற்றேனுந்துணியாமல்
மீண்டுந்திருக்கூடல்போய் வீதியெலாம்வலம்வந்து
வேண்டும்வண்ணந்தொழுதுறைந்துமேவுவந்தோன்றுட்டிடையே

விருத்தம்.

பார்த்தசாரதிப்பெருமானுறைகின்றசென்னைப்
பதியல்லிக்கேணியைநாம்பணிந்தபோது
பூர்த்தியாகப்பூர்வகோடிபுண்ணியம்
புரிந்ததனுலுயர்கல்விச்செல்வமோங்கிக்
கீர்த்தியுடன்வாழ்தோட்டக்காடு ராம
கிருஷ்ணவேள் ஹைகோர்ட்டிஇன்டெர்ப்ரெட்டராங்கே
ஆர்த்தியொடுசெய்த பேருதவியாற்பொன்
னரங்கமாநகர்வந்தோம் கவலைவந்தோமே.

இராகம்-தோடி-ரூபகதாளம்

கண்ணிகள்.

அற்புதமானபொன்னரங்கந்தொழ அனேகோரும்வாரும்-இந்த
அரங்கநாதரைக்கண்டால் அரியதீவினையாவுந்தீரும் தீரும்

இத்தலமிறைஞ்சுதற்கியாம்செய்தபுண்ணியம்யாதுயாது-இங்கு
மிருபக்கங்காவிரி யிருப்பதனுல் நமக்கேது தீது

போற்றும்புன்னைவிருட்சம் புஜங்கசயனமிதோபாரும்பாரும்-சந்த்ர
புஷ்கரணியிலாடிப்புண்யங்கொள்ளைகொண்டோம்வாரும்

அழகியமணவாளப்பெருமானுறையூர் அடைந்தோமின்று-இமை
யவர்கள்ரவிதர்மராஜனுக்கிங்கு பிரத்தியட்சமென்று

திகழுங்கல்யாணவிமானப்பிரகாச விசித்ரம்பாரீர்-நின்ற
திருக்கோலநாதனைத்தியானித்தோம் தஞ்சைசேவிப்போம்வாரீர்

சகலரும்புகழ்ந்திடுந்தஞ்சைநகரிராஜகத்திற்மேன்மை-பரா
சரமாமுனிக்கும்மார்க்கண்டரிஷிக்கும் பிரத்தியட்சமான்மை

வடிவழகியநம்பி வன்பிலாகிய தலமகிமை பாரீர்-பிரம்
மாவுக்கும்வால்மீக மஹரிஷிதனக்கும் பிரத்தியட்சம் ஈங்கு

புருஷோத்தமர்பூர்வாதேவிசுரம்பனூரைத்தெரிந்தோம்-எங்கள்
புண்டரிகாட்சர்க்குவெள்ளறையில் பூமழைசொரிந்தோம்

மணிகர்ணிகதீர்த்தம் சக்ரதீர்த்தம்பத்மதீர்த்தம் ஆடி-நாம்
வந்துபுகழ்ந்தோம் வராஹதீர்த்தம் குசதீர்த்தந்தேடி

புள்ளம்பூதங்குடிவல்வில்ராமனைப்போற்றுவர் யாரோ-எங்கள்
பொற்றுமனையானைப்பூஜியாமல் செல்வம்பொருந்துவாரோ

விருத்தம்.

திம்மராஜன்ஆண்டதொரு செங்கற்பட்டிற்
சேர்ந்தமிட்டாபதினெட்டாய் நாற்றெட்டாகுக்
தம்முடையகிராமமாய் ஸ்ரீராமற்குச்
சந்நிதிசெய் வேங்கடாசலமாம்பௌத்ரி
செம்மைதவத்துதித்தோட்டக் காடார்வள்ளல்
திகழ்ராமகிருஷ்ணவேள் சென்னைஸ்ரீமான்
நம்மவர்க்குத்தஞ்சையினில் நல்குசெல்வத்தால்
நற்றிருப்பேர்நகர்வந்தோம் துதிதந்தோமே.

இராகம்-தோடி-ரூபகதாளம்

கண்ணிகள்.

அப்பக்குடத்தான்திருப்பேர்நகர்தொழுதோமே-வல
தஸ்தத்தின்கீழ்க்குடம்வைத்த ஹேதுவைஅறியோமே

இந்த்ரகிரியிது இந்த்ரவிமானந்தானீது-இந்த
இந்த்ரதீர்த்தமாடிவந்தோ மினிகுறையேது

ஆண்டளக்குமையன் ஆத்தூர்அஞ்சலிசெய்தோம்-நம்
தாமருவியப்பன்வழுந்தூரில் பூமாரிபெய்தோம்

அருண்மாக்கடல்திருமாமகள் சிறுபுலியூராம் இங்
கனந்தசரகபுஜங்கசயனமே சீராம்

சேறையிலுஞ்சார க்ஷேத்திரம்சேவித்தோமின்று-நின்ற
திருக்கோலநாதர் காவேரிக்குப்பிரத்யட்சமென்று

காந்திதழைச்சங்க நாண்மதியம் அலங்காரம்-செங்
கமலவல்லிதழைச்சங்க நாச்சியார்கம்பீரம்

ஆராவமுதர்திருக்குடந்தை யழகாகும்செல்வம்
அளிக்குஞ்சாரங்கபாணிப்பெருமாளால் வல்லியைப்போரும்

அண்டர்கள்கொண்டாடுங் கண்டியூர்மகிமைவிஸ்தாரம்-விண்
ணகரத்தில்உப்பிலியப்பன் பொற்பாதம் ஆதாரம்

கண்ணபுரம்சௌரிராஜனைத்தரிசிக்கக்காலம்-இங்குக்
கண்ணுவமாமுனிக்கருளுங் காக்ஷிஇன்றுகோலம்

வயலாலிமணவாளர் திருவாலிநகரமேசாரம்-நாகை
வாழுஞ்சௌந்தரராஜப்பெருமாள் உதாரம்

விருத்தம்.

நாகராஜன்மங்கையாழ்வார்கண்ட
நாகைநகர்தனினின்றுவந்தபின்னர்
வேகமுறுமணிமுத்தாநதியைத்தேடி
விருப்பமுடன்ஆடித்தீவினையைநாடி
ஏகமனதாய்ப்பெருமான்நம்பியாத
பிறைந்திருநறையூர்ச்சித்திரகூடமாதி
வாகுலாம்திருப்பார்த்தன்பள்ளியிலும்
வந்தியற்றும்யாத்திரையைவகுக்குங்கல்லால்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

மேதவமுனிக்கருள்பெருமான் நம்பி
மேவுநறையூர்பார்த்தோம்-ஒருநாள்
போதுசேர்விண்ணகரப்பெருமான்நந்தி
புரவிண்ணகரிலென்றுந்திருந்தான்

ஆவாயிங்கருளோர்பிரதேவனையாம்
அருந்தினதால்திரிந்தோம்நாளை
கோவிந்தராஜப்பெருமானைச்
சித்திரகூடத்திற்கண்டோமிந்தவேளை

தாடாளர்சீராமவிண்ணகரஞ்சேர்ந்து
சமர்ப்பிக்கப்பெற்றோம்பாத்தைசிகாம்
கூடலூர்நின்றகோலம்பகரக்கண்டோம்
குடிசாமுனிமேனிசுபகரம்

கண்ணமங்கைக்கோயில்விநோதம்-திருக்
கவிஸ்தலகஜேந்திரபிரசாதம்
கண்ணவெள்ளியங்குடிகிதம்
மணிமாடக்கோயிலில்சதாவேதம்

வைகுந்தவிண்ணகரஞ்சூழ்-திருவாலிமேய
விண்ணகரந்தசூழ்
செய்யதேவனார்தொகைமாசூழ்
இந்தத்திருவண்புருடோத்தமங்கரசூழ்

அணிசெம்பொன் செய்கோயில்தேடித்தெற்றி
அம்பலம்செங்கண்மாலை நாடிக்
குணநிதிமணிக்கூடம் கோடிபதவி
கொடுத்தருளுங் காவளம்பாடி

நாமெலாம்வெள்ளக்குளஞ்சூழ்ந்தோம்
கண்ணன்நாராயணர்பதத்தில்வீழ்ந்தோம்
தாமரையாள்கேள்வனைத்தாழ்ந்தோம்
இந்தத்தலம்பார்த்தன்பள்ளிதங்கிவாழ்ந்தோம்

விருத்தம்.

பொன்னிமாநதி புரளுஞ்சோழ நாட்டில்
பொருந்தியநற்பதிகள் நாற்பதையும்போற்றிச்
சென்னிநாட்டைப்பிரிந்து தொண்டைநாட்டைச்
சேர்ந்துகுறைதீர்ந்துமனந் தேர்ந்துகூர்ந்து
பொன்மறுமார்பன்றந்த பிரமன்யாகம்புரிந்த
திருக்கச்சிமாநகரமெய்திப்
பன்னகமேற்றுயில்திருமால் வாழுமீரேழ்
பதிகளின்யாத்திரைதன்னைப் பகருங்கல்லால்.

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

எண்ணற்கெட்டா அத்தி கிரியருளாளர்பொன்
னிணையடிகளேகண்யம்
தொழுதற்கென்செய்தோம்மிகபுண்யம்

பேருலகத்திலில் பெருந்தேயித்தாய் பேரழகம்மமா
காக்ஷிபெற்றோரிங்குபிர்மா
அனந்தசரசு புண்யகோடிநல்விமானம்
நின்றகோலம்வைசாகம் உற்சவகாலம்

எங்கள்கிரிகிரிசிங்கப்பெருமா னிணங்கும்அரிதேவி
பாதமிறைஞ்சினோம் மலர்தூவி
அஷ்டபுஜம்ஆதிகேசவப்பெருமாள்அடிபணிந்தோர்கள்பக்ஷம்
கஜேந்த்ராழ்வார்க்குப்பிரத்தியக்ஷம்

தன்காயெனும்விளக்கொளி மணிமாடம்சரஸ்வதிக்கேகாக்ஷி
மற்றசகலர்க்குங்கண்காக்ஷி
தெய்வநாப்புல்வேதாந்ததேசிகர் திருஅவதாரஸ்தலம்
இப்பால் திருவேளுக்கைதலம்
இனியபாண்டவர்தூதர்பாடகமிங்கிலாத்திங்கட்
டுண்டம்தொழுதோரிடரகற்றுங்கோதண்டம்
கள்வர்கார்வானம் கருணாகரர் திருக்காரகம் உயர்நீரகம்
உலகளந்தவருறையூரகம்
திருவெஃகாவினில்யதோத்காரிமுன் சென்றாப்புலவன்
சொன்னவண்ணஞ்செய்தகாரணமென்ன
அவதரித்தார்பொய்கையாழ்வாரன்றிந்த
அழகியபொய்கைதன்னில்கனகாம்புஜமலர்தன்னில்
மேவும்பச்சைவண்ணர் பவழவண்ணர்
பரமேஸ்வரவிண்ணகரம்பரவிவிரும்பினோம்அப்பர்கா

விருத்தம்.

வைகுண்டப்பதிநாடு தொண்டைநாடு
மலைநாடுநடுநாடு சோழநாடு
வையைசேர்பாண்டிநாடுஞ் சேர்ந்தாழ்வார்
மங்களாசாசனஸ்தலங் நூற்றெட்டும்
பையயாத்திரைசெய்தோம் புராணக்ஷேத்ரம்
பணிவோம்ஸ்ரீபெரும்பூதூர் முதலாயுள்ள
தெய்வசெல்வப்பிள்ளைராயர் தலமீருகச்
செல்லுவோம்மகிமையெலாம் சொல்லுவோமே.

இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

கண்ணிகள்.

இப்போதுபூதபுரியெனும் ஸ்ரீபெரும்பூதூர்-வந்
தின்றுற்றோம் எங்களெதிராஜர் அவதாரமுதூர்
அரிஆதிகேசவப்பெருமாள் எதிராஜவல்லிபாஷிய
காராருர்கேசவாசாரியர்மேல் கிருபைக்களவில்லி
சித்தபுஷ்கரணிதங்கிய சிங்கவேள்குன்றுவந்து
சேவித்தோம்ஜாபால்யரிஷிக்குபிரத்தியக்ஷமேயென்று

௪. வணங்கினோம்வையாவூர் மதுராந்தகம்மகிழ்விருக்ஷமர்பிர
வாகிதீர்த்தமிது மார்க்கண்டர்க்கெங்கைப்ரத்தியக்ஷம்
௫. கருணைசேர்ராஜகோபால ராஜமன்னார்கோயில்-செங்
கமலவல்லிநாச்சியார ரித்திராநதிவாயில்
௬. சங்குதீர்த்தம்கிருஷ்ணதீர்த்தம் கஜேந்திரதீர்த்தம்-க்ஷீர
சாகரருக்மணிசக்ரகோபிநாத தீர்த்தம்
௭. கோப்ரளயதீர்த்தம்முழுகிப்புண்யம்யாவுங்கொண்டோம்-காக்ஷி
கோபிலகோபிரளயமஹாரிஷிகாணக்கண்டோம்
௮. பாபவிநாசப்பெருமான்வாழும் பாபநாசம்-கமல
பங்கயவல்லித்தாயாரின்பாதம் பொற்பிரகாசம்
௯. அஸ்வத்தநாராயணர்க்குப் பிரசன்னஸ்ரீமுஷ்டம்-வாழும்
ஆதிவராகப்பெருமாளைப் போற்றவிஷ்டம்
௰. வணங்கினோம்பிருந்தாவனம் வஸ்திராபஹாரதீர்த்தம்-ராதா
வல்லபன்ராதாதேவியார்க்குப் பிரத்தியக்ஷமூர்த்தம்
௰௧. திருநாராயணபுரம் செல்வப்பிள்ளைராயர்சேர்வை-நாம்
செய்துபிரயத்தத்தால்துதித்துப்பெற்றோம் அருட்பார்வை
௰௨. கல்யாணதீர்த்தம்வைகுந்ததீர்த்தம் தனுஷ்கோடிதீர்த்தம்
கண்பொராசரதீர்த்தம் யாதவதீர்த்தம்ஆடி
௰௩. பாண்டவதீர்த்தம்மயித்திரேயதீர்த்தத்திலாடித்தோம்-லோக
பாவனதீர்த்தமும்ஆடி எண்ணமெல்லாம்முடித்தோம்.

விருத்தம்.

அச்சுதன்தலங்கள்யாவும் யாத்திரைபுரிந்தாய்மால்
இச்சித்தபடியிறைஞ்சியிந்த்ர சம்பத்தும்பெற்றோம்
கச்சிமாநகரம்வந்தோம் கம்பர்க்குநடக்கும்பிரம்ம
உச்சவமாதலாலே உவப்புடன்தரிசிப்போமே.

இராகம்-சுருட்டி-ரூபகதாளம்

கண்ணிகள்.

யாமிங்குவந்தகாலம்பிரம்போற்சவகாலமாய்
அமைந்தது நற்காலமே

சாமியையீன்ற சிவகாமியேயுனுற்சவந்
  தரிசிப்பதனு கூலமே
இன்றுமுதல்நாள்ராத்திரிகன்றுய்ச்சிங்க
  வாகனத்திறைவர்சேவைதந்தாரே
என்றுமங்குறையாச்சூரியசந்திரப்பிரபை
  விளங்கவிரண்டாநாள்வந்தாரே
எந்தைபூதத்தின்மீதுகாலை வந்தாரிரவில்
  ஏசற்குவந்துகின்றார்
சந்திரன்மகிழ்மூன்றாங்காலை நாகவாகனந்
  தனிலெழுந்தருள்கின்றார்
நாலாநாளிரவினில் பாலநேத்திரனைப்போற்றி
  நாற்றிசையோரும்வாழ்ந்தார்
மேலுலகத்திலின்றும் வானவர்யாருங்
  கச்சியிலிருந்து சூழ்ந்தார்
செடியகைலாசகிரிமேல் ஏகம்பநாதர்
  நீங்கா அம்மைகாமாக்ஷி
உடனெழுந்தருளி எவ்வுயிருமீடேறச்
  சேவையுதவினார்காமாக்ஷி
ஐந்தாநாள்காலைதனில் அதிகாரநந்திமீது
  அண்ணலருள்புரியயாரும்
இந்தவிரவிலிராவணன்மேல் மகிழ்ந்துசேவை
  யீந்தருள்கின்றார்பாரும்
ஆறாநாள்காலைசப்பரமீதுவந்தோரிரவில்
  ஆனைமேற்கொண்டருளினார்
மாறாகத்திருத்தேரில் ஏழாநாள்உற்சவமும்
  வாழ்வுறக்கண்டருளினார்
நேற்றுமப்பிக்ஷாடனரைக் காலைகண்டோமிரவில்
  நிமலனைப்பரியில்கண்டோம்
ஏற்றசிவிகைமீதும் தோற்றுமாவடியிலும்
  போற்றி ஆனந்தங்கண்டோம்
நாளையதினம்பத்தாநாள் பங்குனியுத்திரம்
  க்கும்வேண்டியபொற்காணம்

நாளைப்போல்நாயாண்ட நடராஜரும்வருவார்
  நடக்குந்திருக்கல்யாணம்
ஏமையாளும்உமையவள் தமயன்திருக்குளத்திற்
  கெழுந்தருள்கின்றகோலம்
சமயஞ்சமயமென்று சட்சமயத்தோர்களுந்
  தரிசனஞ்செய்யுந்திலம்
எம்பிரானருள்நாடி கம்பாநதியைத்தேடி
  யிங்கேதிரும்பும்பார்வை
அம்பிகைதம்பனுக்காய் உம்பர்களுறு
  விருந்தவம்புரிசேர்வை
வண்ணங்கிக்கணங்கள்சூழ நித்யமணவாளா
  மாகாளிக்கருள்சம்பந்தம்
அணங்குமிணங்கிமணம்புரிந்து பரிந்தணைய
  அகத்திற்கொள்ளும்ஆனந்தம்
எத்தலத்திலுங்காணேம் எவ்வுலகத்துங்காணேம்
  ஏகம்பர்க்கேதக்கது
இத்தலம்வாய்த்ததென்று சித்தமகிழ்ந்துமற்றும்
  ஏத்திமெய்ப்பத்திமிக்கது

கொச்சகம்.

நாற்றிசையும்புகழ்கம்பர் நல்விழாப்பொலிவுகண்டு
சாற்றும்வஸ்த்ர அன்னசொர்ண தானமுதலான தர்மம்
ஆற்றியேகம்பருக்கின் கபிஷேகங்களைநடத்திப்
போற்றிமேனும்அரியதவம் புரிகுவோம்வருவீரே.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

நம்பனேகம்பனே நடராஜனே நால்வர்
  நற்றமிழுகந் தோனே
உம்பரிம்பர்கள்போற்றும் எம்பிரான்-தம்பிரானே
  உமையம்மைக்கிசைந் தோனே
ஆற்றையுநீற்றையும் அணியுந்தேஜோமணியே
  ஆலாலமுண்ட மணியே

போற்றுமார்க்கண்டர்க்காக கூற்றுதைத்தமணியே
புரமூன்றெரித்த மணியே

ஆதியேஅனாதியே சோதியேமான்மழு
அபயவரத கரனே
நீதியேஉமையவள் பாதியேவேதனும்
நீண்முடிகாணா வரனே

பெண்ணொருவந்திக்காக மண்ணைச்சுமந்துதிர்ந்த
பிட்டுக்கிஷ்டமுற் றோனே
பண்மகிழ்பாணனுக்கா யேமாதன்றனோடப்
பாடிவிறகுவிற் றோனே

மாறன்வெகுண்டடித்த மாறடியாரும்பட்டு
வாழ்த்துப்பொன்வண்ணமேனியே
ஆறுநீறணிவோனே மாதிரிபரியா
யாக்கும்பரம ஞானியே

என்னமந்தாரைகொன்றை புன்னைவன்னி
மாம்கிழிலந்தை தரித்தாய்போற்றி
துன்னுங்கோங்குராத்தைபாரிஜாத
மத்தமசோகுதரித்தாய் போற்றி

சந்தனஞ்சண்பகங்குருந்து ஆத்திதேவ
தாரம்புனைந்தாய் போற்றி
ஐந்துவில்வம்பாடலம் வெள்ளெருக்கொடுநெல்லி
யாவும்வனைந்தாய் போற்றி

இவ்விதமாகவெல்லா மரமுமேகம்பனை
யெங்குகனைத்தந்தோனைச்
செவ்விதின்வந்தித்து மாதவஞ்செய்யக்கண்டு
சேவைதரவந்தோனை

ஆதரவாய்மரங்கள் யாவுங்கேட்டவரந்தான்
அலைகடல்சூழ்பூகோள
மீதில்பொன்மரம்ஒன்றே நாதனருளால்-சர்வ
விருக்ஷங்களையும் ஆள

மனத்திலிணைந்தோமென்ன கேட்டவரமுங்கந்து
வாழ்வளித்தாரேகம்பர்
தினைத்துணைத்தவத்தையும் பனைத்துணையாகக்
கொண்டதிருவுளந்தேர்ந்தும்பர்

நத்தம்பொன்னம்பலன் நித்தம்பரவுங்கம்பர்
நற்றுளிர்ச்சிரந்தாழ்த்திப்
பத்தியுடன்புகழ்ந்து புஷ்பமாரிகளெங்கும்
பரவப்பொழிந்தார்வாழ்த்தி

வாழிநால்வேதம்வாழி ஆகமம்வாழிதில்லை
மறையவர் சைவர்வாழி
மேழிச்செல்வர்கள்மன்னர் வாழிவைசியராதி
மெய்யடியார்கள்வாழி

ஆழிசூழ்புவிவாழி காழ்கொள்பொன்மர
முதலனைத்துமரமும்வாழி
ஏழிசைவாழி கவிவாணர்கள்வாழிபா
லியும்பசுவும்வாழி.

இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்

மங்களம்

மங்கைதன்னைவாமபாகம்வைத்த கங்காதரனுக்கு
மங்களம்-சுப-மங்களம்
அங்குசபாசமணிந்த ஐங்கரக்கடவுளுக்கு
மங்களம்-ஜெய-மங்களம்
வள்ளியைத்தெய்வயானையை மருவும்வேலவனுக்கு
மங்களம்-சுப-மங்களம்
கொள்ளைகொள்ளசிவலோகம் கொடுக்குஞ்சம்பந்தருக்கு
மங்களம்-ஜெய-மங்களம்
சடைபோல்கல்மிதந்திடக் கடல்நீந்தும்அப்பருக்கு
மங்களம்-சுப-மங்களம்

நடராஜன்றனைத்தூது நடத்துஞ்சுந்தரருக்கு
மங்களம்-ஜெய-மங்களம்

விமலனைக்குதிரைவிற்க விடுத்தவாதவூரர்க்கு
மங்களம்-சுப-மங்களம்

அமரர்முனிவர்கள்தொண்டர் யார்க்கும்பொன்மரத்துக்கு
மங்களம்-ஜெய-மங்களம்.

பொன்மரத்துநாடகம்

முற்றிற்று.

பிழை திருத்தம்.

சரித்திரம்.

ப.	வ.	பிழை.	திருத்தம்.
10	10	யவ	வ
13	16	வி	லி
14	17	யர்	யா
15	31	திரு	திருத்
19	29	குடை	கூடை
22	27	திழக	திகழ

நாடகம்.

ப.	வ.	பிழை.	திருத்தம்.
2	2	ம்பி	ம்ப்
,,	19	தமிழ்	தமிழ்க்
,,	23	யிரு	விரு
3	23	சவுக்	சவுக்குக்
4	10	நன்னுய்யி	நன்னுயி
5	1	சம்மதிக்க	சம்மதிக்கத்
,,	14	நைமிசாரன்	நைமிசாரண்
6	6	ஒரா	ரா
,,	13	மதாரித்தே	மாதரித்தே
,,	16	தெரியவதுயி	தெரியவதுயி
7	33	வலிவு	வலிமை
8	3	னிறத்த	னிரத்த
,,	6	முக	முகத்
,,	12	அற்புத	அற்புதக்
,,	23	கோல	கோலச்
9	12	இஷதங்	இஷ்டங்
,,	23	வாய்	வாயு
10	26	யெலுமிச்சை	வெலுமிச்சை
,,	27	ம்யி	மி
12	15	சுறுழி	சுரழி
13	2	தன்னுல்	தம்மால்
,,	10	வேக்க	வேங்கை
,,	16	இப	உப
,,	18	சாம்ப	சாம்ப்
,,	26	காஷியாபே	சாஷியாயே
,,	29	சொலும்	சொல்லும்
14	5	சிரிது	சிறிது
,,	10	மாபோ	யாயோ
15	11	ர்ரீ	ரீ
,,	25	ம்யீ	மீ
,,	26	கவுண்ட	க்கவுண்டி
17	2	யின்னம்	இன்னம்
17	21	கேழ்க்க	கேட்க
,,	31	ளுன	துன
18	11	பொரி	பொறி
,,	22	மெரித்	மிதித்
,,	24	திணில்	திணி
,,	33	யென்று	வென்று
20	5	ரோர்	லோர்
22	27	கற்க	கர்கி
,,	29	ரீஷி	ரிஷி
23	1	பாவினப்	பாவின
,,	10	ழ்லத	ழ்சல
24	8	நளி	நனி
,,	11	றென்	ரென்
25	1	முறித்	முரித்
,,	3	முறி	முரி
,,	6	சுர	சர
26	4	வனி	வன்
,,	7	ல்யி	லி
28	10	துள்ளக்	துள்ள
,,	24	தன்பதிநா	தைம்பதினு
30	22	பான்ரெண்டு	பானிரண்டு
,,	23	நான்காமீ	நுன்காமீ
39	9	அச்சிறுப்	அச்சிறு
40	17	வெரை	வேரை
42	7	விரைத்து	விறைத்து
,,	8	மாத்று	யாற்று
,,	29	யாடனை	யாட்டனை
49	25	னுர்	ஞர்
53	17	விர	வீர
,,	21	ரோச	ரோக
,,	24	செர்ங்	சேர்ங்
54	11	டலி	டவி
,,	16	தோம்	தோ
57	10	விணைப்	வினை
60	27	சமப	சம்ப
62	8	ர்யி	ரி
,,	17	வள்ளநா	வள்ளனு
64	13	அகஸ	அகஸ்
65	22	பன்னக	பன்னை
,,	23	உண்டான்	உண்டான
66	17	நில்லை	னில்லை
68	10	ட்டு	ட்டுப்
,,	18	சர்ப்போ	சரபோ
69	5	டிராங்	டிறங்
,,	20	மபே	ம்பே
70	32	குமபே	கும்பே
71	23	கிணர்இ	கிணறி
,,	6	மந்தாதார்	மந்தாதா
72	23	கோனேரி	கோனேரி
,,	5	தவனே	தவனே
,,	7	காட	கட்ட
76	11	காஞ்சி	காஞ்சி
,,	24	யிறவா	இறவா
78	19	யெளவ	யெவ்வ
79	20	திர்த்த	தீர்த்த
,,	,,	அன்ப	யைம்ப
,,	21	சிவஸத	சிவஸ்த
80	25	திர்த்தம்	தீர்த்தம்
81	17	வேங்கிட	வேங்கட
84	17	த்தந்த	தந்த
92	30	கண்டோ	கொண்டோ
93	4	செழுக்த	செழுந்த
95	1	கினைக்	கினைக்

அறிவிப்பு.

இப்புத்தகமும் இதனடியிற்கண்ட புத்தகங்களும் இன்னம் இதர புத்தகங்களும், அவிழ்தங்களும் வேண்டியவர்கள் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ.	அ.
யாழ்ப்பாணத்துப்பேரகராதி	3	8
விநாயகப்புராணவசனம்	2	8
பக்தவிஜயம் முதல்பாகம்	1	0
மேற்படி இரண்டாம் பாகம்	2	0
ஸ்ரீமகாபாரதவசனச்சுருக்கம்	2	0
மேற்படி கிளெஸ்	3	0
இராமலிங்கசுவாமிகள் திருவருட்பாத்திரட்டு ...	0	8
சோதிடப்பிரபஞ்சசேகரம் 2-ம்பாகம் ஜாதகருடையபலாபலன்களையும் வாராந்தர பலன்களையும் மாதாந்தர பலன்களையும் காலப்பிரமாணத்தையும் ஆயுள் நிர்ணயத்தையும் விசிதமாக இதில் கூறப்படும்.	0	12
சர்வசிபஞ்சரத்தினம் இதில் வாதம் வைத்தியம் வேதாந்த சித்தாந்தம் யோகம் முப்புமார்க்கம் குருசிஷ்யதீக்ஷை அடங்கியது உயர்ந்தபதிப்பு	0	12
ஜெயவீர சுந்தரிக்கதை ஓர் அருமையான இராஜகுமாரியின் சரித்திரம்	1	0
குணபூஷணி கதை	1	0
கடல்கட்டுமந்திரம்	0	2
உத்தேசகாரியப்பலன்	0	2
பெண்கள் ருதுஜனன ஜாதகம்	0	4
வைத்தியானுகூலஜீவரட்சணி	0	8
அகஸ்தியர் ஞானகாவியம்	0	8
அகஸ்தியர் வாதகாவியம்	0	8
அகஸ்தியர் பூரணகாவியம்	0	8
அகஸ்தியர் லட்சணகாவியம்	0	8
அகஸ்தியர் வைத்தியகாவியம்	0	8
பூகிமுனிபெருநூல்வைத்தியகாவியம்	0	8
மச்சமுனிபெருநூல்வைத்தியகாவியம்	0	8
சட்டமுனிவாதகாவியம்	0	8

(விலாசம்)

ப. சுப்பிரமணிய முதலியார்,

சித்த ஆயுர்வேத அவிழ்தசாலைத்தலைவர்,

நெ. 15, வெங்கடாசலம் செட்டி தெரு, வேப்பேரி போஸ்டு மதறாஸ்.